பரிசுத்த நற்கருணை ஆராதனை முறை

✝

மலங்கரை ஆர்தடாக்ஸ்

திருச்சபை

பரிசுத்த நற்கருணை
ஆராதனை முறை

மலங்கரை ஆர்தடாக்ஸ்

திருச்சபை

கீதா பிரஸ், சாலே ரோடு, திருச்சிராப்பள்ளி-18.

பொதுவான முன்னுரை

தம் மாதா, சகல பரிசுத்தவான்கள் ஆகியோருடைய நினைவு கூருதலைக் கிருபையோடு கனப்படுத்தியவரும், விசுவாசிகளாய் மரித்த வர்களுக்குக் கருணையோடு பாவ பரிகாரம் நல்கியவருமாகிய கர்த்த ருக்கு இத்தருணத்திலும், எல்லாப் பெருவிழாக்களிலும், நேரங்களிலும், நாழிகைகளிலும், நம் வாழ்நாள் முழுவதும் துதியும், கனமும், ஆரா தனையும் உரியனவாகுக !

செத்ரா

நியாயப் பிரமாணத்திற்கேற்ற பணிவிடைகளுக்கு ஆசாரியர் களாயிருந்து ஆதி முதற் கொண்டு உம்மைப் பிரீதிப்படுத்தியுள்ள சகல பரிசுத்த பிதாக்களும், பிரதான பிதாக்களும், சிறப்பாக உமது வருகையைப்பற்றி முன்னறிவித்த தீர்க்கதரிசிகளும், உமது சுவி சேஷத்தைப் பிரசங்கித்த அப்போஸ்தலர்களும், உம்மீதுள்ள அன்பின் காரணமாகக் கொலையுண்ட இரத்த சாட்சிகளும், உமது தெய்வீகத் தன்மையை அறிக்கையிட்ட சாட்சிகளும், உமது சத்தியத்தைப் பின்பற்றிய போதகன்மாரும், உம் பலிபீடங்களில் பணிவிடை செய்த ஆசாரியர்களும், உமது திருவிருப்பத்தை நிறைவேற்றிய செம்மாசன் மாரும், உமது முந்திரித் தோப்பில் ஊழியம் செய்த உத்தமர்களும், உம் தெய்வீக வசனங்களையும், ஜீவனை நல்கும் கற்பனைகளையும் பின்பற்றி, தங்கள் இனத்தையும், குடும்பத்தையும் விட்டு விட்டு தங்கள் சிலுவையைச் சுமந்து, உம்மைப் பின்தொடர்ந்த ஏகாந்த வாசிகளும், தயராயக்காரும், ஒனுவாயக்காரும், தூண்தபசிகளும், இவர்கள் காலத்திலிருந்தவர்களும், இவர்களுக்கு முன்பும் பின்பும் இருந்தவர்களும், பூலோகம் முழுவதற்கும் புகழ்ச்சியும், இரண்டாவது சொர்க்கம் என்று அழைக்கப்படுகின்ற களங்கமில்லாத பரிசுத்த கன்னிகையும், தெய்வமாதாவுமாகிய மரியாளும், எங்களோடும், எங்களுக்காகவும், எங்களைக் குறித்தும் உம்மிடத்தில் மன்றுடுவார்கள். அம்மாதாவின் பிரார்த்தனைகளாலும், சகல பரிசுத்தவான்களுடைய பிரார்த்தனைகளாலும் எங்களுடைய பாவங்களினிமித்தம் எங்கள்மேல் வருகின்ற தண்டனைகளையும், கோபத்தின் கோல்களையும் எங்களிடமிருந்து விலக்கி நீக்கி அழித்தருள்வீராக! எங்கள் வாழ்நாள் முழுவதும் உமது சாந்தியிலும் சமாதானத்திலும் எங்களை அமைதி யாக நடத்துவீராக! என் கர்த்தாவே! உமது சக்தியால் ரோகி களைச் சந்திப்பீராக! நெருக்கத்திலிருப்பவர்களுக்கு கருணையோடு ஆறுதல் அளிப்பீராக! உண்மை விசுவாசத்தோடு உம்மில் சரணம் வைத்து மரணமடைந்த அனைவருக்கும் ஆறுதலும் நல்ல நினைவுகூருதலும் அளிப்பீராக! நாங்களும், அவர்களும், உமக்கும், உம் பிதாவுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் துதியும், தோத் திரமும் இப்பொழும், எப்பொழுதும், என்றென்றைக்கும் செலுத்த அருள்புரிவீராக.

[புரோகிதர் தமது இடது காலில் பாதரட்சை அணியும்பொழுது]

தேவனுகிய கர்த்தாவே! சர்ப்பங்களையும், தேள்களையும், சத்துருவின் சகல சேனைகளையும் எப்பொழுதும் மிதிக்கும்வண்ணம் சமாதானத்தினுடைய சுவிசேஷத்தின் ஆயத்தத்தினுல் எனக்குப் பாதரட்சையை அணிவித்தருளும் !

[தமது வலது காலில் பாதரட்சை அணியும்பொழுது]

தேவனுகிய கர்த்தாவே! உமது ஞானத்திற்கு விரோதமாக எழும்புகிற எல்லா அகங்காரங்களையும் என் காலடிகளுக்குக்கீழ் மிதிப்பதற்கும், உம் சகாயங்களால் என் சரீரத்துக்குரிய விருப்பங்களை நசுக்குவதற்கும் எனக்கு வரம் தருவீராக !

முதலாம் பாகம்

பரிசுத்த நற்கருணை ஆராதனை முறை

ஆரம்ப ஜெபம்

புரோ : பிதாவுக்கும், சுதனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் துதி !

சபை : பெலவீனரும் பாவிகளுமான எங்கள்மேல் கருணையும் கிருபையும் இரு உலகங்களிலும் என்றென்றைக்கும் சொரியப் படுவனவாக!

புரோ : கருணையுள்ளவரும், மனிதரை நேசிக்கிறவருமான கர்த்தாவே! நாங்கள் ஞானத்தோடும், பக்தியோடும், நல்ல ஆன்மீக ஆயத்தத்தோடும், தூய்மையோடும், பரிசுத்தத்தோடும் உம் திருமுன் நின்று, நாங்கள் அனைவரும், பிதாவும், சுதனும், பரிசுத்த ஆவியுமானவராகிய உம்மை ஆராதிக்கவும், சேவிக்கவும் எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்!

[புரோகிதர், 51-ம் சங்கீதத்தைத் தமக்குள் சொல்லிக்கொள்ளுதல்.]

51-ம் சங்கீதம்

தேவனே ! உமது கிருபையின்படி எனக்குக் கருணை புரிவீராக ! உமது கருணையின் பெருக்கத்திற்குத் தக்கபடி என்னுடைய பாவங்களை அழித்தருளும் !

என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி என்னைப் பாவமறச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன். என் பாவங்கள் எப்பொழுதும் என் முன் இருக்கின்றன.

உமக்கே விரோதமாக நான் பாவம் செய்து, உமது திரு முன்னர் தீமைகளைப் புரிந்தேன். நீர் உமது வார்த்தைகளில் நீதிபரராகவும், நீர் நியாயம் விசாரிக்கும் போது வெற்றியுடையவராகவும் விளங்கு கிறீர் !

ஏனென்றால் நான் அக்கிரமத்தில் பிறந்தவன்; என் தாய் என்னைப் பாவங்களில் கர்ப்பம் தரித்தாள்.

நீர் நீதியில் விருப்பமுடைவர் ; உமது ஞானத்தின் இரகசியங்களை நீர் எனக்கு அறிவித்தீர்.

ஈசோப்பினால் நீர் என்னைத் தெளித்தருளும் ! அப்பொழுது நான் சுத்தமாவேன் ; உறைந்த பனியைக் காட்டிலும் நான் வெண்மை யாவேன்.

உமது ஆனந்தத்தாலும், சந்தோஷத்தாலும் என்னைத் திருப்தி யாக்கியருளும். நொய்மையான என் எலும்புகள் களிகூரும்.

என் பாவங்களைப் பாராதபடி உமது முகத்தை மறைத்தருளி என் அக்கிரமங்களையெல்லாம் அழித்தருள்வீராக!

தேவனே ! சுத்தமான இருதயத்தை என்னில் சிருஷ்டியும் ! நிலை வரமான ஆவியை என் உள்ளத்தில் புதுப்பித்தருளும் ! உமது சமுகத்தி லிருந்து என்னைத் தள்ளி விடாதேயும் !

உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளாதிரும்.

உமது இரட்சணிய சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்தருளும்.

உம் மகத்துவமுள்ள ஆவி என்னைத் தாங்குவதாக. அப்பொழுது அக்கிரமக்காரருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன். பாவிகள் உம்மிடம் திரும்புவார்கள். தேவனே ! என்னை இரட்சிக்கும் தேவனே! இரத்தப் பழியிலிருந்து என்னை விடுவித்தருளும்.

என் நாவு உமது நீதியைத் துதிக்கும் !

கர்த்தாவே ! என் உதடுகளைத் திறந்தருளும் !

என் நாவு உம் துதியைப் பாடும் !

பலிகளை நீர் விரும்புவதில்லை.

தகன பலிகள் உம்மைச் சாந்தப்படுத்த வில்லை.

தேவனுக்கேற்ற பலிகள் தாழ்மையான ஆவி தான் !

தேவன் நொறுங்குண்ட இருதயத்தைத் தள்ளிவிடுவதில்லை.

உமது விருப்பத்தால் சீயோனுக்கு நன்மை செய்வீராக!

எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக!

அப்பொழுது நீதியின் பலிகளிலும் தகன பலிகளிலும் நீர் விருப்பம் கொள்வீர்.

அப்பொழுது உமது பலிபீடத்தின் மேல் காளைகள் தாமாகவே பலியாக ஏறும்!

தேவனே உமக்கே துதி! பாரக்மோர்.

[மகா புரோகிதர் இருந்தால், அவருடைய கரத்தை முத்திசெய்து கூறுவது]

பிதாவே! விமோசனம் தந்து என்னை ஆசீர்வதியும்!

[மற்ற புரோகிதர்கள் இருந்தால், அவர்களுக்குச் சமாதானம் கொடுத்து, சபையார் பக்கம் திரும்பி, கைகளை மலர்த்தி, சமாதானம் கேட்டுக் கூறுவது]

சபையார் அனைவருக்காகவும் ஜீவனும், பரிசுத்தமுமான திருப்பலியை அர்ப்பணிப்பதற்கு நான் பாத்திரவானாக இருக்கும்படி எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

சபை: கர்த்தர் உம்முடைய பிரார்த்தனையைக் கேட்டருளி, இத்திருப்பலியில் பிரியம் கொள்வாராக! நீர் படைப்பதை அவர் அங்கீகரிப்பாராக! உம்மோடு நாங்களும் இத்திருப்பலியில் பங்குகொள்ள எங்களைப் பாத்திரவான்களாக்கியருள்வாராக!

[புரோகிதர் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்கும்பொழுது]

தேவனுடைய பலிபீடத்திற்கும், என் சிறுபிள்ளைப் பருவத்தில் என்னை மகிழ்வித்த தேவனிடத்திற்கும் நான் செல்லுவேன்.

[பலிபீடத்திற்கு முன்னால் வணங்கி]

தேவனே! உமது ஆலயத்திற்குள் பிரவேசித்திருக்கிறேன்; பரமண்டலத்தில் வாசம் செய்கிற ராஜாவே! உமது சிங்காசனத்திற்கு முன்பாக உம்மை வணங்குகிறேன்; நான் செய்த எல்லாப் பாவங்களையும் மன்னித்தருளும்!

[பலிபீடத்தை வலம் வந்து, பலிபீடத்தின் நான்கு மூலைகளையும் முத்திசெய்து]

கர்த்தாவே! உமது பலிபீடத்தின் எல்லைபரியந்தம் எங்கள் பெருநாட்களைச் சங்கிலிகளால் பிணைத்தருளும்! நீர் என்னுடைய தேவன்; நான் உம்மைத் தோத்திரிப்பேன்; நீர் என்னுடைய தேவன்; நான் உம்மைப் புகழுவேன்.

[அப்பத்தை இரு கரங்களில் எடுத்து]

ஆட்டுக்குட்டியைப்போல் அவர் கொல்லப்படுவதற்காகக் கொண்டு போகப்பட்டார்; ரோமம் கத்திரிக்கிறவன் முன்பு நிற்கிற செம்மறியாட்டைப்போல் அவர் மௌனமாக இருந்தார்; தாழ்மையினிமித்தம் அவர் வாய் திறவாமல் இருந்தார்! கர்த்தாவே! உம் திருக்கரங்களால் உமது பரிசுத்த ஸ்தலத்தை ஸ்திரப்படுத்துவீராக! கர்த்தர் என்றென்றும் அரசாளுவார்!

[அப்பத்தைத் தட்டில் வைக்கும்பொழுது]

பரமண்டலத்தில் வாசம் செய்கிற பிதாவினுடைய முதற்பேறானவரே! பெலவீனனும் பாவியுமாகிய இந்த அடியானின் கைகளிலிருந்து இந்த முதற்பேறானவரை அங்கீகரித்தருளும்!

[தட்டை மூடுகிறார்—திராட்சை ரசத்தில் நீரைக் கலக்குகிறார்.]

தேவனாகிய கர்த்தாவே! எங்களுடைய மனுஷீகத் தன்மையில் உமது தெய்வீகத் தன்மையை இணைத்ததுபோல இந்தத் தண்ணீரைத் திராட்சரசத்தோடு இணைத்தருளும்!

[திராட்சைக் கலவையைப் பாத்திரத்தில் ஊற்றி]

எருசலேமிலே சிலுவையின்மீது நம் கர்த்தராகிய இயேசு மேசியாவானவர், இரு கள்ளர்களுக்கிடையே அறையப்பட்டு, தம்முடைய திருவிலாவில் குத்தப்பட்டார். எல்லா மனிதருக்காகவும் பாவ பரிகாரமான இரத்தமும் நீரும் அவரிடமிருந்து சொரிந்தன. அதைப் பார்த்தவன் சாட்சியும் கூறினான். அவனுடைய சாட்சியானது சத்தியம் என்று நாங்கள் அறிகிறோம். எனக்காக நீர் தந்த உபகாரங்களுக்கு நான் எதைப் பிரதி பலனாகக் கொடுக்க முடியும்? இரட்சிப்பின் பானபாத்திரத்தை நான் கைக்கொள்வேன்; கர்த்தாவின் திருநாமத்தை நான் விளிப்பேன்; எல்லா ஜனத்துக்கும் முன்பாக கர்த்தாவுக்கு என் பொருத்தனைகளைச் செலுத்துவேன்.

[திருப்பாத்திரத்தை மூடுகிறார் —
தமது பாவ மன்னிப்பிற்காகத் தமக்குள் ஜெபிக்கிறார்]

முன்னுரை

தம்மை நோக்கிக் கூப்பிடுகிற பாவிகளுக்கு உத்தரவு அருளிச் செய்கிற கருணையுள்ள ஏகபிதாவுக்கும், மனம் திரும்பி தமது வாசலில் நின்று தட்டுகிற பாவிகளை ஏற்றுக்கொள்ளுகிற கருணையுள்ள ஏக சுதனுக்கும், தம்மை மன்றாடுகிற பாவிகளுக்குப் பாவவிமோசனம் அருளுகின்ற ஜீவனுள்ள ஏக பரிசுத்த ஆவியானவருக்கும் துதியுண்டாவதாக!

இத்தருணத்திலும், எல்லாப் பெருவிழாக்களிலும், சந்தர்ப்பங்களிலும், நேரங்களிலும், நாழிகைகளிலும் நம் வாழ்நாள் முழுவதும், சதாகாலமும் அவருக்கே துதியும், மகிமையும், வந்தனையும் உண்டாகுக!

செத்ரா

சாந்தமுள்ளவரும், தயாளரும், தாழ்மையுள்ளவரும், மனுமக்களை நேசிப்பவரும்—பலிகளில் அல்ல—கருணையில் விரும்புகிறவரும், தகன பலிகளைவிட நொறுங்குண்ட இருதயத்தை அதிகமாக நேசிக்கிறவரும், கொழுத்த காளைகளின் இரத்தத்தைக் காட்டிலும்—கொழுத்த ஆட்டுக் குட்டிகளின் இரத்தத்தைக் காட்டிலும்—அவற்றின் பலிகளைக் காட்டிலும் தாழ்மையுள்ள ஆத்துமாவை ஏற்றுக்கொள்ளுகிறவருமான கர்த்தாவே! எங்கள் ஆன்மீகமாகிய பலியை உமது ஜீவனுள்ள பலி பீடத்தில் இத்தருணத்தில் நீர் ஏற்றுக்கொள்வீராக! ஜீவனுள்ள இந்தப் பலியில் எங்களையே உமது திருவுள்ளத்திற்குப் பிரியமானதாகவும், ஜீவனுள்ளதும், ஏற்றுக்கொள்ளத்தக்கதுமான திருப்பலியாக உமக்குச் சமர்ப்பிக்க எங்களைப் பக்குவப்படுத்தியருளும். உன்னதத்திலுள்ள உமது பலிபீடத்தில் நொறுங்கிய இருதயத்தோடும், விநயமான ஆத்துமாவோடும், ஜீவனுள்ள ஆன்மீக பலிகளை உமக்கு நாங்கள் அர்ப்பணிக்கிறோம். நாங்கள் புதிய சிருஷ்டிகளாக மாற்றப்பட்டு, நல்மனசாட்சியும், ஞானமும் உள்ளவர்களாகி விசுவாசமாகிய பிரகாச தீபத்தை ஏற்றி, புதிய லோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட, சிரேஷ்டமும், களங்கமற்றதுமான ஆட்டுமந்தையாய் நாங்கள் அமைவோமாக! உமது ஆலயத்தில் நாங்கள் அனைவரும், பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும் எப்பொழுதும் சதாகாலமும் துதிபாட எங்களைப் பக்குவப்படுத்தியருளும்!

பாட்டு

நாதா! உம் பண்டாரவாசலில் முட்டி கிருபையை யாசிப்பேன்
நெடுநாளாய் நான் உம் வழி தவறிய பாவி!
பாவங்கள் விட்டு உமது கிருபையில் வாழ்ந்திட அருள் செய்திடுவீர்!
உம் கருணை வாசல் அல்லாமல் எங்கே போய்த் தட்டுவோம் நாங்கள்?

அரசர்கள் பூசித்த—அரசர்கள் வந்தித்த மாபெரும் அரசரே!
உம் கிருபையை உம்மோடு கெஞ்சாமல் எங்களுக்காய்ப் பிரார்த்திப்போர் யார்?
பிதா சுதன் அமல ஆவியே எங்களைத் தாக்கும் தீய ஆவிப் படையில்
எங்களுக்கு ஆன வல்மதிலும் சரணமும் நீரே!
நீதிமான்களை நீர் தேடும் நேரம் கருணைச் சிறகில் அரவணைப்பீரே!
நாதா! எங்களின் துதிகோஷம் விண்வாசல் திறக்கும் திறவுகோல் ஆகணுமே!
மரிப்பவர் இசைதான் எத்துணை இனிமை! அவரின் விருப்பம் நிறைவேற்றிடுக!
என்று கெஞ்சட்டும் பிரதான தூதன்மார்!

தூபப் பிரார்த்தனை

என் கர்த்தாவே! எங்களுடைய ஜெபத்தின் நறுமணம் உமக்கு எல்லாச் சமயங்களிலும் இன்பமாய் இருப்பதாக! எங்களுடைய தூபம் உம்மைச் சாந்தப் படுத்துவதாக! அதனால் உமது கருணையின் நிமித்தம் இப்பொழுதும் எப்பொழுதும் சதாகாலமும் உமது சிருஷ்டிகளோடு நீர் சமாதானமாய் இருப்பீராக! ஆமென்!

பாட்டுகள்

(1)

செய்தேன் பிழை நான்! பாவிகளுக்குக் கிருபை செய்பவரே!
கெஞ்சுதல் கேட்டருள்க! குற்றம் தீர்த்து ஈசா! கிருபை செய்வீரே!

(2)

புண்ணிய ஆசாரியன் மெல்கி சதேக்கின்
பலியை ஏற்ற மா மேசியாவே!
தாசரின் வேண்டுதல் கேட்டருளி
சபையின் தோஷம் அகற்றிடுவீர்!

முடிவு ஜெபம்

கர்த்தாவே! உமக்கு ஸ்தோத்திர பலிகளைப் பரிமள வாசனையாக அர்ப்பணிப்பதற்கு எங்களைப் பாத்திரவான்களாகச் செய்தருளும்! எங்களுடைய எல்லா எண்ணங்களும், பேச்சுகளும், செயல்களும் உமக்கு தகனபலிகளாக அமைவனவாக! பிதாவும், குமாரனும், பரிசுத்த

ஆவியுமான திரியேக தெய்வமே! இப்பொழுதும் சதாகாலமும் நாங்கள் மாசற்றவர்களாக-உமது தெய்வீகத் தன்மையைச் சந்தோஷிப்பிக்கிறவர்களாக எங்கள் ஆயுள்காலம் முழுவதிலும் உமது திருச் சந்நிதியில் காணப்பட அருள்புரிவீராக!

குரியே லாய்சோன் — குரியே லாய்சோன் — குரியே லாய்சோன்!

கர்த்தாவே! எங்கள்மேல் கருணையாயிரும்!
கர்த்தாவே! கிருபைசெய்து எங்கள்மேல் கருணையாயிரும்!
கர்த்தாவே! உத்தரவு அருளி எங்கள்மேல் கருணையாயிரும்!
கர்த்தாவே! உமக்குத்துதி! கர்த்தாவே! உமக்குத்துதி!
என்றென்றைக்கும் எங்கள் சரணமே! உமக்குத்துதி!
பாரக்மோர்!

கர்த்தருடைய ஜெபம்: [19-ம் பக்கம் பார்க்கவும்]

இரண்டாம் பாகம்

ஆரம்ப ஜெபம்

தெய்வமாகிய கர்த்தாவே! எல்லா தீய மனச்சாட்சிகளிலிருந்து எங்களுடைய இருதயங்கள் கழுவிச் சுத்திகரிக்கப்பட்டு, உன்னதமும், சிரேஷ்டமுமான உமது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்! தூய்மையோடும், பரிசுத்தத்தோடும் உமது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு முன்பாக நாங்கள் நிற்பதற்குத் தகுதியாக்கியருளும்! பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியுமான திரியேகரே! சிரேஷ்டமும், ஆன்மீகமுமான பலிகளைச் சத்திய விசுவாசத்தோடு இப்பொழுதும், எப்பொழுதும், சதாகாலமும் உமக்கு நாங்கள் அர்ப்பணிக்க அனுக்கிரகித்தருளும்!

[புரோகிதர் தம் கைகளைக் கழுவி, மேலங்கியைக் களையும்பொழுது]

தெய்வமாகிய கர்த்தாவே! என் அசிரத்தையான தீயசெயல்களினால் சாத்தான் எனக்குத் தரிப்பித்த அசுத்த வஸ்திரங்களை என்னிடமிருந்து களைந்து, உமது மகத்துவமுள்ள ஊழியத்திற்கும், உமதுபரிசுத்த நாமத்தின் மகிமைக்கும் தகுதியான பரிசுத்த வஸ்திரங்களை எனக்கு அணிவித்தருளும்!

[வெள்ளை அங்கியின் மீது மும்முறை சிலுவை அடையாளமிட்டு, அதைத் தரித்துக் கொண்டு]

தெய்வமாகிய கர்த்தாவே! பரிசுத்தாவியின் சக்தியால் அழிவில்லாத அங்கியை எனக்குத் தரிப்பித்தருளும்! பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரே! எங்கள் ஆயுள் காலம் முழுவதும் சத்திய விசுவாசத்தால் தூய்மையும், பரிசுத்தமுமுள்ள கிரியைகளோடு நாங்கள் நடப்பதற்குக் கிருபை செய்தருளும்!

[''ஊரார'' அல்லது ''அமினிகா'' மீது இருமுறை சிலுவை அடையாளம் வரைந்து, அதைக் கழுத்தில் தரித்துக்கொண்டு]

யுத்தத்தில், சக்தியோடு என்னை அரைக்கட்டி எனக்கு விரோதமாக நிற்பவர்களை எனக்குக் கீழாக மண்டியிடச் செய்தருளும் !

[அரைக்கட்டின் மீது ஒருமுறை சிலுவை அடையாளம் இட்டு, அதைத் தரித்துக் கொண்டு]

பராக்கிரமம் மிகுந்தவரே ! உம் மகிமையும், மகத்துவமும் ஆகிய வாளை உமது அரையில் கட்டிக் கொள்வீராக ! உமது மகத்துவம் ஜெயம் பெறுவதாக !

[இடது கையுறையின் மேல் இருமுறை சிலுவை அடையாளம் வரைந்து]

* கர்த்தாவே ! நீர் என் அவயவங்களை நீதியின் ஆயுதங்களாகவும் வலது பக்கத்திற்கு ஏற்ற ஆயத்தமானவைகளாகவும் ஆக்கியருளும் ! பிதா, குமாரன், பரிசுத்த ஆவியுமானவரே ! உமது மகத்துவமுள்ள ஊழியத்திற்கும் உமது பரிசுத்த நாமத்தின் மகிமைக்கும் தகுந்த பரிசுத்த ஆலயங்களாகவும், தேர்ந்தெடுக்கப்பட்ட பாத்திரங்களாகவும் எங்களை அமைத்தருள்வீராக !

[கையுறை அணிந்து]

என் கைகளை யுத்தத்திற்கென்று பயிற்சியளித்தருள்வீராக ; என் புயங்களை செம்பு வில்போல் பலப்படுத்தியருள்வீராக !

[வலது கையுறையில் ஒருமுறை சிலுவை அடையாளம் வரைந்து]

மேலே * இக்குறியிட்டுள்ள ஜெபத்தையே மீண்டும் ஏறெடுத்தல்.

[கையுறை அணிந்து]

உமது வலதுகரம் எனக்கு உதவுவதாக! உமது கட்டுப்பாட்டில் என்னை வளர்ப்பீராக!

["காப்ப"மீது (Vestment) மும்முறை சிலுவை அடையாளம் வரைந்து மகாபுரோகிதர் இருந்தால், "காப்ப"வை அவரிடம் கொண்டுபோக, அவர் மும்முறை சிலுவை அடையாளம் வரைந்து)]

உம் புரோகிதர்கள் நீதியையும், உம் நீதிமான்கள் மகத்துவத்தையும் தரிப்பார்களாக! உம் தாசனுகிய தாவீதின் நிமித்தம் நீர் அபிஷேகம் செய்தவனின் முகத்தைப் புறக்கணியாதிரும்!

[" காப்ப " அணிந்துகொண்டு]

உம் புரோகிதன்மார் இரட்சணியத்தையும், உம் நீதிமான்கள் மகத்துவத்தையும் அணிவார்களாக!

[மகா புரோகிதர் " சீலை முடி " மேல் மும்முறை சிலுவைக்குறி வரைந்து, அதைத் தரித்துக் கொண்டு]

நல்லவனை நமக்குக் காண்பிப்பவன் யார்? அவனுடைய முகப் பிரகாசத்தை நம்மேல் அவன் பிரகாசிப்பிப்பான்! கர்த்தாவே! உமது சந்தோஷத்தை நீர் என் இருதயத்தில் தந்தீர்!

[மகா புரோகிதர் " பெரிய ஊராரா " மீது மும்முறை சிலுவைக்குறி இட்டு அதைத்தரித்துக்கொண்டு]

தீங்கு நாளில் அவர் என்னைத் தமக்குப் பின்னால் மறைத்துக் கொள்வார். தமது கூடாரத்தின் நிழலிலும் அவர் என்னை மறைப்பார். கன்மலைமேல் என்னை அவர் உயர்த்துவார். இதுமுதல் எனது தலை என் சத்துருக்களுக்கு மேலாக உயரும்.

[மகா புரோகிதர் கழுத்தில் சிலுவையை அணிந்து கொண்டு]

அவர்கள் அவரை உற்றுப்பார்த்து அவரில் சரணமடைந்தார்கள். அவர்களுடைய முகங்கள் வெட்கப்படவில்லை.

[மகா புரோகிதர் செங்கோலை இடதுகையில் பிடித்துக் கொண்டு]

கர்த்தர் சீயோனிலிருந்து வலிமையுள்ள தடியை உனக்காக அனுப்பியிருக்கிறார். உன் சத்துருக்களின் மேல் உனக்கு அதிகாரம் கிட்டும்.

[மகாபுரோகிதர் வலது கையில் சிலுவையை எடுத்துக்கொண்டு]

உம்மாலே எங்கள் சத்துருக்களைத் தாக்கி எங்களுக்கு விரோதமாய் எழும்புகிறவர்களை உம்முடைய நாமத்தினால் மிதிப்போம்.

[புரோகிதர் பலிபீடத்தின் முன் முழங்காற்படியிட்டு]

மனித அதர்மங்களை மன்னிப்பவரும், பாவியின் மரணத்தை விரும்பாதவருமாகிய சர்வ வல்லமையுள்ள கர்த்தாவே! உமக்கு முன்பாக என் இதயக் கரங்களை நீட்டுகிறேன். என்னுடைய எல்லா மீறுதல்களையும் நீர் கிருபையாக மன்னித்தருள்வீராக! என்னையே முற்றிலும் உமக்கு அர்ப்பணிக்கவும், தெய்வீகமான உமது இரகசியங் களின் நல்ல வரங்கள் உம்மிடமிருந்து நான் பெறவும், நான் அபாத்திர னயினும் சத்துருவின் எல்லாத் தீமைகளிலிருந்து என் அறிவையும் — காம இச்சைகளைக் காணாமல் இருப்பதற்கு என் கண்களையும் — வீண்

வார்த்தைகளைக் கேளாமல் இருப்பதற்கு என் செவிகளையும் — வெறுக்கத்தக்க காரியங்களிலிருந்து என் கைகளையும் — உம்மில் இயங்குவதற்கு என் உள்ளிந்திரியங்களையும் நீர் காத்தருள வேண்டு மென்று உம்மை நோக்கிக் கெஞ்சுகிறேன்.

[புரோகிதர் எழுந்து, " பதவி " எனும் படிமீது நின்று]

கர்த்தர் ராஜரிகம் செய்கிறார்; மகத்துவத்தை அணிந்து கொண்டிருக்கிறார்; கர்த்தர் பராக்கிரமத்தை அணிந்து பூலோகம் அசையாதபடி நிலைநிறுத்துகிறார். உமது சிங்காசனம் பூர்வமுதல் உறுதியானது. நீர் அநாதியாயிருக்கிறீர். கர்த்தாவே! நதிகள் பெருகியிருக்கின்றன; நதிகள் இரைச்சலை எழுப்பின; நதிகள் நிர்மலமாய் எழும்பின; பிரவாகித்த வெள்ளங்களின் இரைச்சலின் மூலம் சமுத்திரத்தின் அலைகள் பலப்பட்டிருக்கின்றன ; கர்த்தர் உன்னதத்தில் துதிக்கப் படுகிறவர்; உமது சாட்சியங்கள் மிகவும் நம்பத்தக்கவை. கர்த்தாவே! பரிசுத்தமே, சதாகாலமும் உமது ஆலயத்திற்கு உசிதமானது.

[அப்பத்தட்டு, பானபாத்திரம் ஆகியவற்றின் மூடிகளை எடுத்து, அப்பத் தட்டின் மூடியை தெற்குப் பக்கத்திலும், பானபாத்திரத்தின் மூடியை வட பக்கத்திலும் வைத்து]

சர்வலோகத்தின் புண்ணியத்திற்காகவும், இரட்சிப்புக்காகவும் தகுதியான திருப்பலியாகி, தம்முடைய பிதாவுக்குத் தம்மையே பலி யாக அர்ப்பணித்த மாசற்றதும் பரிசுத்தமானதுமான ஆட்டுக் குட்டி யாகிய எங்கள் தேவனாகிய மேசியாவே! உம்மை மகிழ்விக்கவும் எங்களுக்காகச் செலுத்தப்பட்ட உமது பலியைப் போலவே எங்களையும் ஜீவபலியாக உமக்கு அர்ப்பணிக்கவும் எங்களையும் பாத்திரவான் களாக்கியருளும்!

[வலது கையில் அப்பத்தட்டையும், இடது கையில் பான பாத்திரத்தையும் எடுத்து, வலது கையை இடதுகைமேல் சிலுவையைப் போல் தபலேத்தாமேல் குறுக்காக உயர்த்தி ஏறெடுக்கும் மன்றுட்டு — மன்றுட்டு முடியும் வரை தட்டுகள் கைகளிலேயே இருத்தல் வேண்டும்]

எங்கள் கர்த்தரும், தேவனும், எங்கள் இரட்சகருமாகிய இயேசு மேசியாவையும், எங்களின் இரட்சிப்புக்காக அவர் செய்த சகல கிரியை களையும் நாங்கள் நினைவுகூருகிறோம். பிரத்தியேகமாக பிரதான தூதனின் தூது, மகத்துவம் பொருந்திய அவரது கர்ப்ப உற்பத்தி, அவரது மாம்சப் பிறப்பு, யோர்தான் நதியில் பெற்ற அவரது ஞானஸ் நானம், எங்களுடைய இரட்சிப்புக்காக அவர் அனுபவித்த துன்பங்கள், அவர் சிலுவை மீது ஏறினது, எங்களுக்கு ஜீவனை அருளுகிற அவரது மரணம், அவரது மகிமையான கல்லறையடக்கம், அவரது மகத்துவ மான உயிர்த்தெழுதல், அவர் பரமேறியது, பிதாவாகிய தேவனின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பது ஆகியவற்றை நாங்கள் நினைவுகூரும்

இந்த வேளையில், எங்கள் முன்பாக வைத்துள்ள இந்த தோத்திர பலியின் மூலமாக, எங்கள் ஆதிப்பிதாவாகிய ஆதாமையும், ஆதிமாதாவாகிய ஏவாளையும், தேவமாதாவாகிய பரிசுத்த கன்னிமரியாளையும், தீர்க்கதரிசிகளையும், பரிசுத்த அப்போஸ்தலர்களையும், போதகப் பிதாக்களையும், சுவிசேஷகர்களையும், இரத்த சாட்சிகளாக மரித்தவர்களையும், தங்கள் விசுவாசத்தை அறிக்கை செய்தவர்களையும், நீதிமான்களையும், ஆசாரியர்களையும், பரிசுத்த பிதாக்களையும், உண்மையான மேய்ப்பர்களையும், உண்மை விசுவாசிகளான போதகன்மாரையும், ஏகாந்த வாசிகளையும், ஆசிரமவாசிகளையும், எங்களோடு ஒருமித்துப் பிரார்த்திக்கிறவர்களையும், ஆதாம் ஏவாள் காலம் முதல் இன்றுவரை உம்மைப் பிரியப்படுத்தின அனைவரையும் நாங்கள் நினைவுகூருகிறோம். மீண்டும் எங்கள் பிதாக்களையும், எங்கள் சகோதரர்களையும், சத்திய வசனங்களை எங்களுக்குச் செம்மையாக உபதேசித்த எங்கள் போதகர்களையும் மரித்துப்போன அனைவரையும் நாங்கள் நினைவுகூருகிறோம். குறிப்பாக எங்கள் இரத்த பந்துக்களையும், இவ்வாலயத்தைக் கட்டுவதற்காகப் பாடுபட்ட முன்னோர்களையும், இப்பொழுது பாடுபடுபவர்களையும், சிறிதளவிலோ–பெரிதளவிலோ, வார்த்தையினாலோ, செயலினாலோ, எங்களுக்குச் சம்பந்தப்பட்ட அனைவரையும், எவருக்காக இந்தத் திருப்பலி அர்ப்பணிக்கப்படுகிறதோ அவர்கள் அனைவரையும் நினைவு கூருகிறோம்.

தேவமாதாவின் மத்தியஸ்தத்திற்காக மும்முறை சொல்ல வேண்டிய ஜெபம்

பிரத்தியேகமாகவும், விசேஷமாகவும், எவருக்காக–எவருடைய மகிமைக்காக இந்தத் திருப்பலி செலுத்தப்படுகிறதோ – அந்த தேவமாதாவாகிய கன்னிமரியாள் தம் ஜெப சகாயத்தில் அபயமிட்டிருக்கிற உமது அடியான்/அடியாள் ஆகிய ....

ஆக வேண்டி உம்மிடம் மத்தியஸ்தம் செய்வதற்காக அவரை விசேஷித்த விதமாக நாங்கள் நினைவுகூருகிறோம்.

காருண்யமும் உத்தமுமுள்ள தேவனே! மாதாவின் நினைவு கூருதலை மதித்துள்ள இவர்களுடைய விருப்பங்களை உம்மால் கேட்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்ட அம்மையின் பிரார்த்தனைகளால் இவர்களுக்குக் கிருபையாக உத்தரவு அருள்வீராக! இவர்களைச் சோதனைகளிலிருந்தும், கஷ்டங்களிலிருந்தும், கோப தண்டனைகளிலிருந்தும் காத்தருள்வீராக! உம் மாதா, பரிசுத்தவான்கள் ஆகியோருடைய பிரார்த்தனைகளால் இவர்களுடைய கடன்களையும், பாவங்களையும் கருணையோடு மன்னித்தருள்வீராக!

பரிசுத்தவான்களின் மத்தியஸ்தத்திற்காக மும்முறை செய்ய வேண்டிய ஜெபம்

தேவனே! நீரே திருப்பலி; உமக்கே திருப்பலி அர்ப்பணிக்கப் படுகிறது. பிரத்தியேகமாகவும், தனியாகவும் எவருக்காக – எவருடைய கௌரவத்திற்காக உமக்குத் திருப்பலி செலுத்தப் படுகிறதோ — யாருடைய நினைவுகூருதலை இன்று நாங்கள் நிறை வேற்றுகிறோமோ — அந்த உமது அன்பனும், பரிசுத்தவானுமாகிய மார் .... ஆக என் தேவனே! பலவீனங்களும் பாவங்களும் நிறைந்த என்னுடைய கரங்களிலிருந்து இத்திருப்பலியை நீர் ஏற்றருள்வீராக! அந்த பரிசுத்த வானின் ஜெபசகாயத்தில் அபயமிட்டிருக்கிற உமது அடியான் /அடியாள் ஆகிய .... ஆக வேண்டி உம்மிடம் அந்த பரிசுத்தவான் மத்தியஸ்தம் செய்வதற்காக இவ்வாலயத்தில் இத்திருப்பலியை உமக்கு அர்ப்பணிக்கிறோம். கருணையுள்ள தேவனாகிய கர்த்தாவே! உமது கிருபையால் அந்த பரிசுத்தவானின் மன்றாட்டைக் கேட்டு உத்தரவு அருள்வீராக! உமது கருணையால் இந்த அடியார்களுடைய கடன்களை யும் பாவங்களையும் மன்னித்தருள்வீராக!

நோய்வாய்ப்பட்டவர்களுக்காக மும்முறை செய்ய வேண்டிய ஜெபம்

தேவனே! நீரே திருப்பலி; உமக்கே திருப்பலி அர்ப்பணிக்கப் படுகிறது; உமது அடியான்/அடியாள் ஆகிய .... ஆக பலவீனமும் பாவமும் நிறைந்த என் கைகளிலிருந்து இந்தத் திருப்பலியை அங்கீகரிப்பீராக! உம் மாதா, சகல பரிசுத்தவான்கள் ஆகியோருடைய பிரார்த்தனைகளாலும், விருப்பங்களாலும் அவன்/அவள் பேரில் தயவு வைத்து அவனுக்கு/அவளுக்கு சுகத்தையும் ஆத்துமாவுக்கும் சரீரத்திற்கும் ஆரோக்கியத்தையும் அருள்வீராக!

மனத்தாபப்படுபவருக்காக மும்முறை செய்ய வேண்டிய ஜெபம்

தேவனே! நீரே திருப்பலி; உமக்கே திருப்பலி அர்ப்பணிக்கப் படுகிறது. எவருக்காக இந்தத் திருப்பலி அர்ப்பணிக்கப்படுகிறதோ — அந்த உமது அடியான்/அடியாள் ஆகிய .... உடைய மனத் தாபத்திற்காக பெலவீனமும் பாவமும் நிறைந்த என்னுடைய கைகளி லிருந்து இந்தத் திருப்பலியை நீர் ஏற்றருள்வீராக! தேவனாகிய கர்த்தாவே! அவருடைய கடன்களைப் போக்கி, அவருடைய குறைகளை மன்னித்தருள்வீராக! விசுவாசிகளாக மரித்துப்போனவர்களின் ஆத்துமாக்களுக்கு ஆறுதல் அளிப்பீராக! அவர்களின் வாழ்நாள் முழுவதும் சகல உபத்திரவங்களிலிருந்தும் கடுமையான சிட்சைகளி லிருந்தும் காத்தருள்வீராக!

மரித்துப் போனவர்களுக்காக மும்முறை செய்ய வேண்டிய ஜெபம்

தேவனே! நீரே திருப்பலி; உமக்கே திருப்பலி அர்ப்பணிக்கப்படுகிறது. எங்களைவிட்டு மரித்துப்போன அடியான் / அடியாள் ஆகிய...... வின் ஆத்துமாவிற்காக பலவீனமும், பாவமும் நிறைந்த என்னுடைய கைகளிலிருந்து இந்தத் திருப்பலியை நீர் ஏற்றுக் கொள்வீராக! தேவனாகிய கர்த்தாவே! அன்னாருடைய கடன்களையும் பாவங்களையும் நீர் மன்னித்தருளி, உமது திருச்சித்தத்தின்படி நடந்து கொண்ட அனைவரோடும்கூட உமது பிரகாசமான வாசஸ்தலங்களில் அன்னாருக்கு ஆறுதலைத் தந்தருள்வீராக!

புரோகிதரின் மரித்துப்போன தாய் / தந்தை / சகோதரன் / சகோதரி / மற்ற உறவினர் ஆகியோருக்காக மும்முறை செய்ய வேண்டிய ஜெபம்

தேவனே! நீரே திருப்பலி; உமக்கே திருப்பலி அர்ப்பணிக்கப்படுகிறது. உமது அடியாளும் / அடியானும் / என்னுடைய தந்தை / தாய் (உறவு முறை) உம் ஆகிய ....வின் ஆத்துமாவிற்காக பலவீனமும், பாவமும் நிறைந்த என்னுடைய கைகளிலிருந்து இந்தத் திருப்பலியை நீர் ஏற்றுக் கொள்வீராக! தேவனாகிய கர்த்தாவே! அன்னாரின் கடன்களையும் பாவங்களையும் நீர் மன்னித்தருளி, உமது திருச்சித்தத்தின்படி நடந்து கொண்ட அனைவரோடுங்கூட உமது பிரகாசமான வாசஸ்தலங்களில் அன்னாருக்கு ஆறுதலைத் தந்தருள்வீராக!

மரித்துப்போன அனைவருக்காவும் மும்முறை செய்ய வேண்டிய ஜெபம்

தேவனே! நீரே திருப்பலி; உமக்கே திருப்பலி அர்ப்பணிக்கப்படுகிறது. அவர்களுடைய நாமங்கள் உமக்குத் தெரிந்தவையே. எங்களை விட்டுப் பிரிந்து மரித்துப்போன விசுவாசிகள் அனைவருடைய ஆத்துமாக்களுக்காக பலவீனமும், பாவமும் நிறைந்த என்னுடைய கைகளிலிருந்து இந்தத் திருப்பலியை நீர் ஏற்றுக்கொள்வீராக! தேவனாகிய கர்த்தாவே! அந்த விசுவாசிகளுடைய கடன்களையும் பாவங்களையும் நீர் மன்னித்தருளி, உமது திருச்சித்தத்தின்படி நடந்துகொண்ட அனைவரோடுங்கூட உமது பிரகாசமான வாசஸ்தலங்களில் அவர்களுக்கு ஆறுதலைத் தந்தருள்வீராக!

மரித்துப்போன பேர்தெரியாதவருக்காக மும்முறை செய்யவேண்டிய ஜெபம்

தேவனே! நீரே திருப்பலி; உமக்கே திருப்பலி அர்ப்பணிக்கப்படுகிறது. அவருடைய நாமம் உமக்குத் தெரியும். எங்களிடமிருந்து வேறாகப் பிரிந்துபோன அடியானின் ஆத்துமாவுக்காக பலவீனமும், பாவமும் நிறைந்த என்னுடைய கைகளிலிருந்து இந்தத் திருப்பலியை நீர் ஏற்றுக்கொள்வீராக! தேவனாகிய கர்த்தாவே! அவருடைய கடன்களையும் பாவங்களையும் நீர் மன்னித்தருளி, உமது திருச்சித்தத்தின்படி நடந்து கொண்ட அனைவரோடுங்கூட உமது பிரகாசமான வாசஸ்தலங்களில் அவருக்கு ஆறுதலைத் தந்தருள்வீராக!

புரோகிதரின் தாய், தந்தை, சகோதரர், ஆசிரியர்கள் ஆகியோருக்காக ஜெபம்.

தேவனே! என் தந்தை, என் தாய், என் ஆன்ம தந்தையர், சகோதர சகோதரிகள், என் குடும்பத்தார், என்னுடைய குருமார்கள், என்னை நல்வழிப் படுத்தியவர்கள், எனக்குச் சம்பந்தப்பட்டவர்கள் ஆகிய அனைவரையும், பாவநிலையில் இருக்கும் நான் அர்ப்பணிக்கின்ற இந்தத் திருப்பலியில், நான் நினைவுகூர வேண்டுமென்று என்னிடம் விருப்பம் தெரிவித்துள்ளவர்களையும், நீர் பேர் பேராக அறிந்துள்ளவர்களுமான சகலரையும் உமது கருணையின் நிமித்தம் நினைத்தருளி ஆறுதலை அளிப்பீராக!

குரியே-லாய்சோன் குரியே-லாய்சோன் குரியே-லாய்சோன்

[புரோகிதர் இப்பொழுது இடது கையில் உள்ள பானபாத்திரத்தைத் தபிலேய்த்தாவின்மேல் கிழக்குப் பக்கத்திலும், அப்பத் தட்டை மேற்குப் பக்கத்திலும் வைத்து, சோசப்பாவினால் மேற்குப் பக்கத்திலிருந்து கிழக்குப் பக்கமாக மூடிக் கூறுவது].

மகத்துவமானவரின் ஒளியால் ஆகாயம் மூடப்பட்டிருக்கிறது. அவரது மகிமை சிருஷ்டிப்பு முழுவதும் நிறைந்திருக்கிறது.

[புரோகிதர் "பதவி"யிலிருந்து கீழே இறங்கி நின்று கொண்டு கூறுவது]

நாம் அனைவரும் ஜெபித்து, கர்த்தரின் கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும் அவரை நோக்கிக் கெஞ்சி மன்றாடுவோமாக:

இரக்கம் நிறைந்த கர்த்தாவே! எங்கள் மேல் இரக்கம் வைத்து எங்களுக்கு உதவியருளும்! துதியும், தோத்திரமும், ஜோதியும், புகழ்ச்சியும், அழியாத நல்ல உன்னதமும், எப்பொழுதும், சதா நேரத்திலும் நாங்கள் இடைவிடாமல் உமக்குச் செலுத்த எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்!

முன்னுரை

கன்னித்தன்மை உள்ள உதரத்தில் உதித்தவரும், தம் மாதாவின் நினைவுகூருதலை முக்கியப்படுத்திய மகத்துவமான கனியும், தமது பரிசுத்தவான்களின் திருநாட்களையும் அவர்களுடைய பண்டிகைகளின் மகிழ்ச்சியையும் சிருஷ்டிப்பில் மகிமைப்படுத்திய-வணங்கத்தக்க கர்த்தாவும் - தமது இனிய குரலொலியால் மரித்தவர்களை உயிர்ப்பித்து அவர்களைத் தம்மோடுகூட ஆனந்தமான மகத்துவத்தில் மகிழ்விக்கின்ற ஜீவனுள்ளவரும், ஜீவிப்பிக்கிறவருமாகிய கர்த்தாவுக்குத் துதியுண்டாவதாக! இத்தருணத்திலும், எல்லாப் பெருவிழாக்களிலும், சந்தர்ப்பங்களிலும், நேரங்களிலும், நாழிகைகளிலும், நம் வாழ்நாள் முழுவதும், சதாகாலமும் அவருக்கே மகிமையும், கனமும், வணக்கமும் இருப்பனவாகுக!

[தூப கலசத்தில் சாம்பிராணி தூவிக் கூறுவது]

பரிசுத்தமும் மகத்துவமுமான திரித்துவத்தின் கனத்திற்கும் மகிமைக்குமாக, பலவீனங்களும் பாவம் நிறைந்தனவுமாகிய என்னுடைய கைகளால் சாம்பிராணி இடப்படுகிறது. கர்த்தாவுடைய கிருபைக்காகவும் கருணைக்காகவும் அவரை நோக்கி ஜெபித்துக் கெஞ்சுவோமாக!

[தூப கலசத்தைத் தமது கையில் வாங்கி தூபம் காட்டுகிறார்.]

செத்ரா

அகில லோகங்களைப் படைத்தவரும், தாம் படைத்தவைகளை நிலைநிறுத்துகிறவரும்—தாகித்து வறண்ட நிலம் எனும் மரியாளிடத்தில் முளைத்து வளர்ந்து, மகத்துவமான தமது பரிமள வாசனையால் சர்வ லோகத்தையும் நிரப்பி, துதிக்கத்தக்க தமது உபதேசத்தால் சிருஷ்டிப்புகளின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் புறஜாதித் தன்மையாகிய தீய நாற்றத்தை நீக்கிய, ஆசீர்வதிக்கப்பட்ட செடியுமாகிய உம்மை நாங்கள் வணங்குகிறோம்; தோத்தரிக்கிறோம்; மகிமைப்படுத்துகிறோம். சபைக் கூடாரத்தில் பரிசுத்த தூபத்தை உமக்கு அர்ப்பணித்து, அதனால் இஸ்ரவேல் மக்களிடமிருந்து உபாதைகளை நீக்கிய ஆசாரியனாகிய ஆரோனைப்போல, கர்த்தாவே! நாங்கள் இந்தத் தூபத்தை உமக்கு முன்பாக அர்ப்பணிக்கிறோம். தேவனாகிய கர்த்தாவே! பெலவீனராகிய நாங்கள் எங்களுடைய பாவங்களுக்காகவும், அறிவீனங்களுக்காகவும் எங்களுடைய ஆதிப்பிதாவாகிய ஆதாமுக்காகவும், ஆதித் தாயாகிய ஏவாளுக்காகவும், தேவமாதாவாகிய கன்னி மரியாளுக்காகவும், தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், நீதிமான்கள், புண்ணியவான்கள், இரத்த சாட்சிகள், தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டவர்கள், மெய் விசுவாசிகளாகிய முற்பிதாக்கள், குருமார்கள், ஏகாந்தவாசிகள், துறவிகள், அனாதைகள், விதவைகள், துக்கப்படுவோர், சஞ்சலப்படுவோர், நோய்வாய்ப்பட்டோர், நெருக்கடியில் இருப்பவர்கள் ஆகிய அனைவருக்காகவும் எங்கள் தேவனாகிய இயேசு மேசியாவே! உம் திருச் சந்நிதானத்தில் நாங்கள் ஏறெடுக்கும் பிரார்த்தனைகளில் தங்களை நினைத்துக்கொள்ள வேண்டுமென்று வேண்டிக்கொண்டவர்கள், கேட்டுக் கொண்டவர்கள் ஆகிய அனைவருக்காகவும், உயிருள்ளோருக்கும், மரித்தோருக்கும் — அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு சொர்க்கமாகிய எருசலேமில் ஆறுதல் உண்டாகவும் உமக்கு அர்ப்பணிக்கும் இந்த தூபத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உம்மைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். கர்த்தாவே! உமக்கும், உம் பிதாவுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும் எப்பொழுதும் சதாகாலமும் துதியும், கனமும், தோத்திரமும் உண்டாவதாக!

[தூபகலசத்தோடு பதவிமீது ஏறி, பரிசுத்த இரகசியங்களின் நான்கு திசைகளிலும் தூபம் காட்டிக் கூறுவது].

கிழக்குப் பக்கத்தில் :—புண்ணியவான்களே, கர்த்தாவைத் துதிப்பீர்களாக! சுகந்த தூபத்தோடு கூட தேவ மாதாவாகிய கன்னிமரியாளுக்கு நினைவுகூருதல் உண்டாவதாக!

மேற்குப் பக்கத்தில் :—சகல ஜாதிகளே, அவரைத் துதிப்பீர்களாக! சுகந்த தூபத்தோடுகூட தீர்க்கதரிசிகளுக்கும், அப்போஸ்தலர்களுக்கும், பரிசுத்த இரத்த சாட்சிகளுக்கும் நினைவு கூருதல் உண்டாவதாக!

வடக்குப் பக்கத்தில் :—சுகந்த தூபத்தோடுகூட ஆசாரியர்களுக்கும் போதகர்களுக்கும், நீதிமான்களுக்கும், புண்ணியவான்களுக்கும் நினைவுகூருதல் உண்டாவதாக!

தெற்குப் பக்கத்தில் :—சுகந்த தூபத்தோடு கூட பரிசுத்த சபைக்கும் அதனுடைய மக்கள் அனைவருக்கும் நினைவு கூருதல் உண்டாவதாக!

[புரோகிதர் பரிசுத்த இரகசியங்களின் மேல் தூப கலசத்தை இருமுறை வலமிருந்து இடமாகவும், ஒருமுறை இடமிருந்து வலமாகவும் சுழற்றிக் கூறுவது]

என் கர்த்தாவே! உமது கருணையால் உம் அடியார்களின் தூபத்தை அங்கீகரிப்பீராக! உமது ஆசாரியர்களின் தூபத்தில் நீர் பிரீதியடைவீராக! உம்மை ஆராதிப்பவர்களின் ஊழியத்தில் நீர் மகிழ்வீராக! பிதாவோடும் பரிசுத்த ஆவியானவரோடும் கூட வணங்கித் துதிக்கப்படுகிற குமாரனாகிய மேசியாவே! உம் மாதாவினுடையதும், பரிசுத்தவான்களுடையதும், விசுவாசிகளாக மரித்துப்போன அனைவருடையதுமாகிய நினைவுகூருதலை இப்பொழுதும், எப்பொழுதும், சதாகாலமும் நீர் சிரேஷ்டப்படுத்துவீராக!

[தூப கலசத்துடன் "பதவி" யிலிருந்து கீழிறங்கி, பலிபீடத்தின் நடுவில் மும்முறை தூபம் காட்டிக் கூறுவது]

கருணையுள்ள பிதாவுக்கு வந்தனம்!

[சோசப்பாவின் வடக்கு முனையை மடித்து மும்முறை தூபம் காட்டிக் கூறுவது]

கருணையுள்ள குமாரனுக்கு வந்தனம்!

[சோசப்பாவின் தெற்கு முனைப்பக்கம் மும்முறை தூபம் காட்டிக் கூறுவது]

ஜீவனும் பரிசுத்தமுமான ஆவியானவருக்கு வந்தனம்!

[தூபகலசத்தை உதவியாளரிடம் கொடுத்துவிட்டுக் கூறும் கடைசி ஜெபம்]

கர்த்தாவே ! நீதிமான்களும், புண்ணியவான்களும், தீர்க்கதரிசி களும், அப்போஸ்தலரும், இரத்த சாட்சிகளும், விசுவாச சாட்சிகளும், தேவமாதாவாகிய பரிசுத்த மரியாளும், எல்லாத் தலைமுறைகளிலும் உம்மைப் பிரியப்படுத்திய சகல பரிசுத்தவான்களும், எங்கள் அனைவருடைய ஆத்துமாக்களுக்காக உம்மோடு மத்தியஸ்தம் செய்து வேண்டிக் கொள்வார்களாக ! இவர்களின் பிரார்த்தனை களாலும், வேண்டுதல்களாலும் உம்முடைய ஜனத்தின் மேலுள்ள உமது கோபத்தை நீர் அகற்றுவீராக ! உமது சேகரத்தி லுள்ள ஆடுகள் மீது கிருபை வைப்பீராக ! உலகத்தின் நாலா பக்கங் களிலும் உமது சமாதானத்தையும், சாந்தியையும் நிலவியருள்வீராக ! எங்கள் கர்த்தாவும் தேவனுமானவரே ! மரித்துப்போன எங்கள் முன்னோருக்கு நீர் பாவ விமோசனம் நல்குவீராக !

அல்லது

பாட்டு

தெய்வத்தின் மாதா ! பரிசுத்த கன்னிகையே !
எங்கட்காய் வேண்டிடுக ! கருணை யாம் பெற்றிடவே !
சஹோதேன்மார் நமக்காக பிரார்த்தித்திடவே
அன்னவரை நாம் வேண்டிடுவோம் பணிவாய்
உம்மீது சரணம்வைத்து உமது வரவு நோக்கும்
மரித்தோரின் பாவம் போக்கி சாந்தமே நல்கிடுவீர் !

[புரோகிதர், கௌமாவையும் விசுவாசப் பிரமாணத்தையும் தமக்குள் ஏறெடுக்கிறார்]

தேவனே ! நீர் பரிசுத்தர் ! வல்லவரே ! நீர் பரிசுத்தர் ! மரண மில்லாதவரே ! நீர் பரிசுத்தர் ! எங்களுக்காகச் சிலுவையில் அறை யுண்டவரே ! எங்கள் மேல் கருணையாயிரும் !

[இதே போல் மூன்று முறை கூறுகிறார். கூறும்போது ஒவ்வொரு முறையும் தன் மேல் சிலுவைக்குறி இட்டுக் கொள்கிறார்]

எங்கள் கர்த்தாவே ! எங்கள் மேல் கருணையாயிரும் !
எங்கள் கர்த்தாவே ! கிருபையோடு எங்கள் மேல் கருணையாயிரும் !
எங்கள் கர்த்தாவே ! எங்கள் நமஸ்காரங்களையும் பணிவிடை களையும் அங்கீகரித்து எங்கள் மேல் கருணையாயிரும் !
தேவனே ! உமக்குத் துதி !
சிருஷ்டிகரே ! உமக்குத் துதி !
பாவிகளாகிய அடியார் மேல் கருணையாயிருக்கிற மேசியா அரசே ! உமக்குத் துதி ! பாரக்மோர்.

கர்த்தருடைய ஜெபம்

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே ! உம்முடைய திரு நாமம் பரிசுத்தப்படுவதாக ! உம்முடைய இராச்சியம் வருவதாக! உம்முடைய திருச்சித்தம் பரமண்டலத்தில் இருப்பது போல பூமியிலும் இருப்பதாக ! எங்களுக்குத் தேவையான அப்பத்தை இன்று எங்களுக்குத் தாரும்! எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னித்தது போல எங்களுடைய கடன்களையும், பாவங்களையும் எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கச் செய்யாதேயும்! தீமையாளனிடமிருந்து எங்களை இரட்சித்தருளும். ஏனெனில், இராச்சியமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே! ஆமென் !

கிருபை நிறைந்த மரியம்மையே ! உமக்குச் சமாதானம் !
நம்முடைய கர்த்தர் உம்மோடிருக்கிறார் ! ஸ்திரீகளில் நீர்
வாழ்த்தப் பெற்றவர் ! உம் உதரத்தின் கனியாகிய நம்
கர்த்தராகிய இயேசு மேசியா வாழ்த்தப் பெற்றவர் !
தேவமாதாவாகிய பரிசுத்த கன்னி மரியாளே !
தம்பிரானின் தாயே ! பாவிகளாகிய எங்களுக்காக
இப்பொழுதும், எப்பொழுதும், எங்கள் மரணவேளையிலும்
தேவ தம்பிரானோடு எங்களுக்காக மன்றாடுவீராக !

விசுவாசப் பிரமாணம் [31-ம் பக்கம் பார்க்கவும்]

[பழைய ஏற்பாட்டிலிருந்து பாடம் வாசிப்பதற்குமுன் உதவியாளர் கூறுவது]

நீதிமான்களுடைய கூடாரத்தில் மகத்துவத்தினுடையதும், இரட்சிப்பினுடையதுமான குரல் என்று தாவீதின் மூலமாக பரிசுத்த ஆவியானவர் பாடினார்.

மோசேயின் .... ஆகமத்திலிருந்து / நியாயாதிபதிகளின் புத்தகத்திலிருந்து / தீர்க்கதரிசியின் புத்தகத்திலிருந்து ....

சபை : சிருஷ்டிகர்த்தாவுக்கு / தீர்க்கதரிசிகளின் கர்த்தாவுக்கு / நியாயாதிபதிகளின் தேவனுக்கு / துதி உண்டாவதாக ! அவருடைய அனுக்கிரகங்கள் நம்மீது எப்பொழுதும் இருப்பனவாக !

[உதவியாளர் பரிசுத்த வேதாகமத்திலிருந்து பாடம் வாசித்த பிறகு சபையாரும், உதவியாளரும் பாடும் பாடல்.]

1

கர்த்தாவே பிரார்த்தனே கேட்டருள்க! அல்லேலூயா!
ஏற்றருள்க ஆரோன் தூபம் ஏற்றது போல!
கண்டடியார் சிசுரூட்சை! நினிவேயின் வேண்டுதல் போல
கடல்தனில் யோனு பெற்றது போல
கனிவுறும் அடியார்களுக் கென்றும்

2

கர்த்தாவே கூக்குரல் கேட்டருள்க! அல்லேலூயா!
ஆகுக திருநாமத்திற் குகந்ததா யித்தூபம்!
திருக்கருணைக் கனுகூலமதாய் காரணமாய்
நிரவிடுவீர் தெய்வமே! உம்
நிகரிலா கிருபையால் எங்களுக்கே!

3

என்றும் துதி உம் கருணைக்கே! கருணுரட்சகரே!
நிறைவொடு இன்று எங்கும் காணுது உம்தானம்!
நினிவேயுடன் ஆகிய கோபம்
கதறியதால் நீர் நீக்கினீரே!

4

ஆரோனின் தூபமும் சகரியாவின் தூபமும்,
மரணத்தை நீக்கிய பினகாசின் பிரார்த்தனையும் போல்,
அடியாருடைய தூபத்தினையும்
அன்புடையோய் நீர் ஏற்றருள்வீர்!

5

எரிதழலிருந்து தலைமைத் தூதன் இறங்கிச் சென்று,
விரைவுடன் மரியாள் கிரகமதில் நசரேத்தில் சொல்லியது:
நின்னொடு உள்ளார் கர்த்தர் தாம்
இம்மண்ணுல கெல்லாம் பாலிப்போர்

6

முள் மரம் எரியா தெரி தீயின் நடுவில் கண்டது போல்
சின்மயன் அம்மரியாளில் வசித்து, சரீரம் பூண்டும்
அதனல் பங்கம் கன்னிமைக்கு
சிறிதும் உண்டாகவில்லை.

7

லோகம், தாதையர், சகோதரர், சாதி, குல, கோத்திரம்
அனைத்தையும் விட்டு இயேசுவுக்காய் மரணம் நேசித்த
ரத்த சாட்சிகளை சதாகாலம்
நினைப்பது சாலவும் நன்றே.

8

தூக்கப்பட்டு மரத்தில், அவர் விலா திறந்ததே ஈட்டி,
குருதியும், நீரும் ஒழுகும் மேசியாவை இரத்த சாட்சிகள்
கண்டங்கோடினர் மரிப்பதற்காய் !
கர்த்தாவுக்காக எல்லோரும்!

9

ஒளி நிறைந்திடும் இயேசுவே ! உம் ஒளியால் காணுகிறோம்
ஒளியை அடியார்; அகில ஆதாரமான ஒளியும் நீர்!
காந்தியால் எங்களை நீர்! தாதையின்
கதிரே! சோபிப்பீர் என்றும்!

10

ஒளிரும் தட்டில் வசிக்கும் புண்ணிய நிதி! பரிசுத்த !
வேண்டா கஷ்டம் வீண் சிந்தனையும் ஒழித்திடுக!
அடியவர்பால்
சத்கிரியைகள் மனசுத்தியொடு
செய்திட நீர் அருள்வீரே!

11

ஆபேலின் குட்டியாடும் நோவாவின் திருப்பலியும்
ஆபிரகாமின் திருப்பலியும் கைக்கொண்ட கர்த்தாவே!
நோன்பும் பிரார்த்தனையும் கைக்கொண்டு
அன்பால் அடியாரை காத்தருள்க!

12

விமோசனத்திற்கு பாவிகளே ! வருவீர் ! பிரார்த்திப்பீர் !
தட்டுவோர்க்குத் திறந்திடுவார் நாதன் தம் வாசல் !
யாசிப்பவன் அடைந்திடுவான்
தேடுகிறவன் கைக்கொள்வான் !

13

கர்த்தாவே உம் இரத்தமும் சரீரமும் கைக்கொண்டு
பக்தர்களாய் மரித்தவரை நீர் நினைந்தருள்வீர் !
உமது மகத்துவம் உதிக்கும் நாளில்
நிற்கணும் அவர்கள் வலபாகத்தில்

பரிசுத்த குர்பாஞ

[திரை நீக்கப்படுகிறது ; புரோகிதர் தூபம் காட்டிக்கொண்டு கூறுவது]

புரோ : உம்மை ஈன்றெடுத்த மரியாளும், உமக்கு ஞானஸ்நானம் அளித்த யோவானும் எங்களுக்காக உம்மிடம் மன்ருடுவார்கள். எங்கள் மேல் கருணையாயிரும் !

சபை : உம்மைப் பெற்றெடுத்த மாதா, பரிசுத்தவான்கள் ஆகியோருடைய ஜெபத்திஞல், இயல்பின்படி மரணமில்லாதவரும், உமது கிருபையினல் அனைத்து மனுக்குலத்தின் இரட்சிப்புக்காகவும், ஜீவனுக்காகவும் வந்து, பரிசுத்தமும், மகத்துவமும், புனிதமுமுள்ள தேவமாதாவாகிய கன்னிமரியாளிடத்தில் திருச்சரீரம் எடுத்து, பூரண மனிதனுக எங்கள் பொருட்டு சிலுவையில் அறையுண்ட – என் கர்த்தாவே ! உம்மை நான் புகழுவேன் ! உமது மரணத்தால் எங்கள் மரணத்தை உம் திருப்பாதத்தின்கிழ் மிதித்து நசுக்கி அழித்தவரும், பரிசுத்த திரித்துவத்தில் ஒருவரும், உம் பிதாவோடும் ஜீவிக்கிற பரிசுத்த ஆவியோடும் கூட சமமாக வணங்கப்பட்டுத் துதிக்கப்படுபவருமாகிய எங்கள் மேசியாத் தம்பிரானே ! எங்கள் அனைவர் மேலும் கருணையாயிரும் !

புரோ : தேவனே ! நீர் பரிசுத்தர் !

சபை : வல்லவரே ! நீர் பரிசுத்தர் !
மரணமில்லாதவரே ! நீர் பரிசுத்தர் !
எங்களுக்காகச் சிலுவையில் அறையுண்டவரே !
எங்கள்மேல் கருணையாயிரும் !

[இதைப்போலவே மும்முறை புரோகிதரும் சபையாரும் கூறவும்]

குரியே – லாய்சோன் – குரியே – லாய்சோன் – குரியே – லாய்சோன்

ஞானப்பாட்டு

பூமி பூராவும் தெய்வத்தால் அனுப்பப்பட்ட
சீடர்கள் சென்ருர் !
ஜாதிகளிடையில் பூதலமெங்கும்
நல்சுவிசேடம்
கைக் கொள்வோர் அனைவோர்க்கும்
பாக்கியமிதென் றறிவித்தார்,
சுவர்க்க மகா இராச்சியம்.

[உதவியாளர் பரிசுத்த ஸ்தலத்தில் வடக்குப் பக்கம், மேற்கு முகமாக நின்று அந்தந்த நாளுக்குரிய நிருப வாக்கியத்தை வாசிக்கிறார்]

உதவியாளர் : பரிசுத்த அப்போஸ்தலருடைய நடபடிகளிலிருந்து . ... ஹபீபாய்—பாரக்மோர்.

சபை : அப்போஸ்தலருடைய ஆண்டவருக்குத் துதி !
அவருடைய கருணை எப்பொழுதும் நம்மேல்
இருப்பதாக !

[உதவியாளர் நிருப பாடம் வாசித்து முடிந்தபின்]

ஞானப்பாட்டு

தன்யன் பவுலோஸ்
சிலீகாவின் சொல் கேளுங்கள் !

உங்கட்கு நாங்கள் அறிவித்த
சுவிசேஷமல்லாமல் வேறொன்றை
மாறாக வந்து அறிவித்தால்
வானவ தூதன் ஆனாலும்
அடைவான் சபையின் சாபமதே !
பல்வகை உபதேசங்களதோ
பாரில் முளைத்துப் பரவிடுதே !
தேவனின் போதகத்தில் தொடங்கி
வாழ்வை முடிப்பவன் பாக்கியவான்.

[உதவியாளர் தெற்குப்பக்கம், மேற்குமுகமாக நின்று பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுலின் நிருபத்திலிருந்து வாசிக்கிறார்.]

உதவியாளர் : பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுல் ....க்கு எழுதிய நிருபத்திலிருந்து............ஆஹாய்-பாரக்மோர்!

சபை : அப்போஸ்தலருடைய ஆண்டவருக்குத் துதி !
அவருடைய கருணை எப்பொழுதும் நம்மேல்
இருப்பதாக!

[மேற்கூறிய இரு நிருப பாடங்கள் உதவியாளரால் வாசிக்கப்படும்முன்பு புரோகிதர் தமக்குள் ஏறெடுக்கும் ஜெபம்.]

தேவனாகிய கர்த்தாவே! இந்தச் சமயத்தில் உமக்கு முன்பாக ஏறெடுக்கும் எங்கள் பிரார்த்தனைகளையும் வேண்டுதல்களையும் நீர் அங்கீகரிப்பீராக! எங்கள் கர்த்தரும், என்றென்றைக்கும் எங்கள் தேவனுமானவரே! உம்முடைய பிரமாணங்களையும், உம் பரிசுத்த அப்போஸ்தலரின் கற்பனைகளையும், உமது பரிசுத்த சபையின் சிற்பாசாரியும், சபையைக் கட்டி எழுப்பினவருமான பரிசுத்த பவுல்

அப்போஸ்தலனின் போதனைகளையும் தூய்மையோடும் பரிசுத்தத் தோடும் ஆசரிப்பதற்கு எங்களை எப்பொழுதும் பாத்திரவான்களாக் கியருளும்!

[புரோகிதர், தாம் சுவிசேஷ பாகம் வாசிக்கும் முன் தமக்குள் ஏறெடுக்கும் ஜெபம்]

தேவனாகிய கர்த்தாவே! உமது தெய்வீக வசனங்களை அறியக் கூடிய ஞானத்தை எங்களுக்குத் தந்தருள்வீராக! உமது பரிசுத்த சுவிசேஷ ஞானத்தாலும், உமது தெய்வீக நல்வரங்களின் சம்பந்தத் தாலும் உமது பரிசுத்த ஆவியானவரின் ஈவுகளாலும் எங்களை நிரப்பி யருளும்! உமது கற்பனைகளை நாங்கள் மகிழ்ச்சியோடு ஆசரிப்பதற்கும் உமது திருவிருப்பத்தை நாங்கள் பூரணமாய் நிறைவேற்றுவதற்கும் எங்களுக்குக் கிருபை செய்வீராக! உம்மிடமிருந்து கருணையையும் ஆசீர்வாதத்தையும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் நாங்கள் பெற்றுக் கொள்ள எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்!

சபை : அல்லேலூயா! அல்லேலூயா! துதியாகிய
பலிகளை அவருக்குச் செலுத்துங்கள்!
மாசற்ற காணிக்கைகளைக் கொண்டு வந்து
கர்த்தரின் பிராகாரங்களில் பிரவேசித்து
அவருடைய பரிசுத்த பலிபீடத்தின்
முன்பாக அவரைப் போற்றி வணங்குங்கள்!
அல்லேலூயா!

உதவியாளர் : பாரக்மோர்!

நாம் அடக்கத்தோடும், பயத்தோடும், வணக்கத்தோடும் செவி கொடுத்து நமக்கு முன்பாக வாசிக்கப்படுகிற நம் கர்த்தராகிய இயேசு மேசியாவின் பரிசுத்த சுவிசேஷத்தில் உள்ள தேவனுடைய ஜீவனுள்ள வசனங்கள் கூறுவதைக் கேட்போமாக!

[புரோகிதர் மேற்குப் பக்கம் திரும்பி, சபையார் முன் சிலுவையடை யாளமிட்டுக் கூறுவது]

உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக!

சபை: உமது ஆவியோடும், தேவனாகிய கர்த்தர் எங்களையும் அதற்குப் பாத்திரவான்களாக்கி அருள்வாராக!

புரோ: ஜீவனை நல்கும் பிரசங்கமாகிய இயேசுமேசியாவின் பரிசுத்த சுவிசேஷம் : உலகத்திற்கு ஜீவனையும் இரட்சிப்பையும் பிரசங்கிக்கிற பிரசங்கியாகிய மத்தேயு/யோவான்
சுவிசேஷகனாகிய மார்க்கு/லூக்கா
எழுதிய சுவிசேஷத்திலிருந்து :

சபை: கர்த்தருடைய நாமத்தில் வந்தவரும், வரவிருக்கிறவருமான அவர் போற்றுதற்குரியவர் ! நமது இரட்சிப்புக்காகத் தம்மை அனுப்பினவருக்குத் துதியுண்டாவதாக! அவருடைய கருணை நம் அனைவர் மேலும் என்றென்றைக்கும் இருப்பதாக!

புரோ: பரிசுத்த கன்னிமரியாளிடத்தில் திருச்சரீரம் எடுத்த தெய்வீக ஜீவ வசனமாயிருக்கிற நம் கர்த்தரும், நம் தேவனும், நம் இரட்சகருமாகிய இயேசுமேசியாவின் ஊழிய காலத்தில் இவை நிகழ்ந்தன !

சபை: நாங்கள் இவ்வாறு விசுவாசித்து அறிக்கையிடுகிறோம்.

[புரோகிதர் சுவிசேஷம் வாசித்தல் — வாசித்த பிறகு]

புரோ: உங்கள் அனைவர் மேலும் தேவனின் பிரியம் உண்டாவதாக!

[புரோகிதர் ஏறெடுக்கும் தனி ஜெபம்]

நம்மிடத்திலுள்ள தம் ஜீவ வசனங்களுக்காகக் கர்த்தராகிய இயேசுமேசியாவுக்கும், நமது இரட்சிப்புக்காக அவரை அனுப்பிய பிதாவுக்கும், நமக்கு ஜீவனை நல்குபவராகிய ஜீவனுள்ள பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும், தோத்திரமும், வந்தனையும் உண்டாகுக!

சபை:

ஞானப்பாட்டு

எஜமானன்வரும் அந்நேரம்
விழித்திருப்போராகி
முந்திரித்தோப்பில் பணிசெய்யக்
காண்போரே பாக்கியராம்!
பகலெல்லாம் தம்கூடப்
பணிசெய்வோர்க் கவர்அரைகட்டி
சேவைப்பணி செய்வார்!
தாதன் அளிக்கும் விருந்தினிலே
தனயன் பரிமாற
ஆறுதலூட்டும் ரூக்குதிசா முடையும் திருமகுடம்
அல்லேலூயா! சூட்டுவார்முடிமீதே!

[அல்லது]

நிபியன்மாரும் சாதிகளுக்கு சுவிசேஷம்
அறிவித்த சிலீகன்மாரும்
நீதிமான்கள் புண்ணியவான்கள்
சாட்சிகள் ரத்தசாட்சிகள்
தேவனின்மாதா தானும்
நல்லமரித்தோர்களும் நினைக்கப்படுவாரிங்கு அவருடைய
பிரார்த்தனைஎங்கட் கெப்பொழுதும்
அமைந்திடவேண்டும் கோட்டையதாய்!

உதவியாளர் : ஸ்தோமென் காலோஸ்

சபை : குரியே-லாய்சோன்

புரோ : நாம் அனைவரும் பிரார்த்தித்து கர்த்தரின் கிருபைக் காகவும், இரக்கத்திற்காகவும் அவரைக் கெஞ்சி மன்றாடு வோமாக!

சபை : கருணையுள்ள கர்த்தாவே! எங்கள் மேல் இரக்கம் வைத்து எங்களுக்குச் சகாயம் செய்தருளும்.

புரோ : துதியும், தோத்திரமும், ஜோதியும், புகழ்ச்சியும், அழியாத நல்ல உன்னதமும், எப்பொழுதும் சதா நேரத்திலும் நாங்கள் இடைவிடாமல் செலுத்த எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்!

முன்னுரை

புரோ : காலம் நிறைவேறின போது கன்னிமரியாளிடமிருந்து தம்மை நமக்கு வெளிப்படுத்தினவரும் – பெத்லகேம் எப்ராத்தாவில் நமக்கு பிரத்தியட்சமானவரும், யோர்தான் நதியில் பிதாவானவரால் சாட்சியிடப் பட்டவரும் – யோவானால் அறிக்கையிடப் பெற்றவரும் – நமது மீட்புக்காகக் கல்வாரியில் தொங்கியவரும் – பாதாளத்தில் இறங்கி நம்மை உயர்த்தியவரும்–தம் மூலம் சாவின் வல்லமையை அழித்தவரும் – இரட்சிப்பை அளிக்கும் இந்த இரகசியத்தை நம்மிடம் ஒப்படைத்தவரும் – நமக்காக இந்த ஆன்மீகப் பெரு விருந்தை ஏற்படுத்தியவரும் – அந்தத் திருவிருந்திற்கு தம் சொந்த ஜாதிகளையும், புறஜாதியாரையும் அழைத்தவருமாகிய ஜீவ அப்பமாகிய அவருக்குத் துதியுண்டாவதாக! அவருக்குத் தெய்வீகமான இந்தக் குர்பானா அர்ப்பணிக்கப்படும் இத்தருணத்திலும், எல்லாப் பெருவிழாக்களிலும், நேரங்களிலும், சமயங் களிலும், நம் வாழ்நாட்கள் முழுவதும் துதியும், கனமும், ஆராதனையும் உளவாகுக!

சபை : ஆமென்!

(இப்பொழுது தூபம் காட்டப்படுதல்)

உதவியாளர் : கருணையுள்ள கர்த்தருக்கு முன்பாகவும் – புண்ணியம் நல்குகிற பலிபீடத்தின் முன்பாகவும் – தெய்வீகமும் பரத்துக்குரியதுமாகிய இந்த பரிசுத்த இரகசியங்களுக்கு முன்பாகவும் – பயபக்தியூட்டுகிற இந்த பரிசுத்த குர்பானாவிற்கு முன்பாகவும், சங்கை பொருந்திய இந்த புரோகிதரின் / மகா புரோகிதரின் / கைகளால் இந்த சாம்பிராணி இடப்படுகிறது. நாம் அனைவரும் ஜெபித்து கர்த்தருடைய கருணைக்காகவும், தயவுக்காக வும் அவரைக் கெஞ்சுவோமாக!

சபை : கருணையுள்ள கர்த்தாவே! எங்கள்மேல் இரக்கம் வைத்து சகாயம் செய்தருளும் !

பாவ விமோசனப் பிரார்த்தனை

புரோ; பாவ பரிகாரத்தை நல்குகிறவரும், தூய்மைப்படுத்துகிறவரும், எங்களுடைய தீமைகளைத் துடைத்து நீக்கி, அவற்றை நினை யாதவருமாகிய தேவனாகிய கர்த்தாவே! உமது நேசத்தாலும், கருணையாலும், எண்ணமுடியாத அளவற்ற கொடிய என் பாவங்களையும், விசுவாசிகளான உம் மக்கள் அனைவரின் பாவங்களையும் துடைத்து நீக்கி உத்தமரே ! தயவுகூர்ந்து எங்கள்மேல் கிருபையாயிரும் ! தேவனாகிய கர்த்தாவே! உமது கருணையால் எங்களை நினைத்தருளும் ! உமது கருணையால் எங்களுடைய மாதா பிதாக்கள், சகோதர சகோதரிகள், பிரபுக்கள், போதகர்கள், எங்களுக்குச் சொந்தமான மரித்துப் போனவர்கள், பரிசுத்தமும் மகத்துவமுள்ள உமது திருச் சபையின் மக்களாக மரித்துப்போன விசுவாசிகள் ஆகிய அனைவரின் ஆத்துமாக்களையும் நினைத்தருள்வீராக! தேவனாகிய கர்த்தாவே ! அவர்களுடைய ஆத்துமாக்களுக்கும், மனங் களுக்கும், சரீரங்களுக்கும் இளைப்பாறுதலை அளித்தருளும் ! அவர்களுடைய அஸ்திகளின்மேல் உமது கிருபையும் இரக்கமு மாகிய பனியைத் தெளித்தருளும் ! மகத்துவமுள்ள ஆண்ட வரும் எங்கள் இராஜாவுமாகிய கிறிஸ்துவே ! எங்கள் கர்த்தரும் நாதனுமாயிருக்கிறவரே! நீரே எங்களுடைய பாவ விமோசனராகவும் இருப்பீராக ! கர்த்தாவே ! எங்களுக்கு உத்தரவு அருள்வீராக ! எங்களுக்குச் சகாயம் செய்ய எழுந்தருளும்! எங்களை இரட்சித்தருளும்! எங்களுடைய ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் ஏற்றுக்கொள்ளும் ! தேவனே! உமது கிருபையால் சகல கொடிய தண்டனைகளையும் நீக்கி விலக்கியருளும் ! கர்த்தாவே ! உமது கிருபையினால் தேவ கோபத்தின் தண்டனைக் கோலை எங்களிடமிருந்து விலக்கி

நீக்கியருளும்! சமாதானமுள்ள மனிதருக்கு அருளப்படுகிற நல்வாழ்வின் முடிவுக்கு எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்! உமது தெய்வீகத்திற்கு ஏற்றதும், உகந்ததும், தகுந்ததுமான ஒரு கிறிஸ்தவத்துக்குப் பொருத்தமான முடிவை எங்களுக்கு இலவசமாகத் தயாளத்தோடு தந்தருளும்! ஒரு நல்ல பரிசுத்த முடிவுக்கு எங்களனைவரையும் பாத்திரவான்களாக்கியருளும்! உமக்கே மகிமையையும் நன்றியையும் நாங்கள் இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றைக்கும் செலுத்துகிறோம்.

சபை : ஆமென்!

செத்ரா

புரோ : உண்மையுள்ள பிரதான ஆசாரியரும், பாவ பரிகாரம் செய்யும் திருப்பலியும், ஆன்மீக பீடமும், கொல்கதாவில் தம்மைத்தாமே பலியாக அர்ப்பணித்து, எங்களுடைய மனுஷ வர்க்கத்தோடு கோபம் கொண்டிருந்த தம் பிதாவைப் பிரீதிப்படுத்தியவரும், தம் திருமேனியின் திருரத்தத்தால் மேலுலகத்தவருக்கும், கீழுலகத்தவருக்கும் சமரசம் உண்டாக்கியவருமான எங்கள் மேசியாவாகிய தம்பிரானே! உமக்கு முன்பாக நான் நிற்கிற பிரமிக்கத்தக்கதும், பயப்படத்தக்கதுமான இந்நேரத்தில், கருணையோடும் தயவோடும் என்மீது திருக்கண் வைத்தருளும்! நடுங்கத்தக்க இந்த நாழிகையில் தேவதூதர்கள் நடுங்குகிறார்கள்; பிரதான தூதர்கள் பிரமிக்கிறார்கள்! ரீசன் வோசேன்மார் அதிசயிக்கிறார்கள்; மவுத்துபேன்மார் அல்லேலூயா பாடுகிறார்கள்; கேரூபின்கள் வாழ்த்துகிறார்கள்; சேராபீன்கள் "பரிசுத்தர்! பரிசுத்தர்! பரிசுத்தர்!" என்று பாடுகிறார்கள்; பரிசுத்த ஆவியானவர் மிக வேகமாகவும் அதரிசனராகவும் பறந்து வந்து, இந்த பரிசுத்த குர்பானாமேல் கவிந்து அமர்ந்து பரிசுத்தப்படுத்துவதை சேராபீன்கள் தங்கள் சூட்சும நயனங்களால் கூர்ந்து பார்க்கிறார்கள்! என் கர்த்தாவே! நான் செய்துள்ள நிந்திக்கத்தக்க செயல்களை நீர் கூர்ந்து கவனித்து, உமது திருச்சபைச் சேகரத்தில் விசேஷ ஞானமுள்ள ஆடுகளிலிருந்து உமது பரிசுத்த ஆவியானவரை எடுத்துக்கொள்ளாதிரும்! என் செய்கைகளின் அசுத்தத்தினிமித்தம் உமது திருரத்தத்தால் நீர் விலை கொடுத்து வாங்கியுள்ள உமது திருச்சபைச் சேகரத்திலிருந்தும் உமது கருணைகளை எடுத்துப் போடாமலிரும்! ஆனாலும் கர்த்தாவே! தேவதூதர்கள்கூட சூட்சுமமாகப் பார்ப்பதற்கு வாஞ்சிக்கிற மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நான் பிரவேசிக்க என்னைப் பாத்திரவானாக்கிய உமது கிருபையாலும், அளவற்ற கருணையாலும் உம் ஜனத்தின் பாவங்களை நீர் பரிகரித்தருளும்! உம்

திருச்சபைச் சேகரத்தின் குற்றங்களை மன்னித்தருள்வீராக! பாவமுள்ள என் கைகளால் உமக்கு அர்ப்பணிக்கப்படுகிற இந்தத் திருபலியை நீர் அங்கிகரித்தருள்வீராக! என் கர்த்தாவே! இதனுல் பாவிகளுக்குப் பாவபரிகாரம் நல்குவீராக! பிழை செய்தவர்களை மன்னிப்பீராக! இதனுல், மனஸ்தாபப்படுகிறவர்களை ஏற்றுக்கொள்வீராக! இதனுல் குற்றவாளிகளோடு பிரியமாயிரும்! இதனுல், கோபமாயிருப் பவர்களைச் சாந்தப்படுத்தியருளும்! இதனுல், பிணங்கி இருப்பவர்களை ஒன்று சேர்த்தருளும்! இதனுல், சண்டை யிட்டுக் கொண்டிருப்பவர்களைச் சமாதானப்படுத்தியருளும்! இதனுல், கலகங்களை நீக்கியருளும்! இதனுல், தண்டனைகளை நீக்கியருளுள்வீராக! அசுத்தர்களை சுத்திகரித்தருளும்! கர்வங் கொண்டவர்களைப் பக்குவப்படுத்தியருளும்! இதனுல் புரோகிதர்களைச் சோபிக்கச் செய்தருளும்! இதனுல், சம்மாசன்மாரை மாசற்றவர்களாக்கியருளும்! கோரூயன் மாருக்கு நன்மை தீமையறியத்தக்க ஞானத்தைத் தந்தருளும்! இதனுல், தயராயக்காரர்களை பலப்படுத்தியருளும்! ஏகாந்த வாசிகளைக் காத்தருளும்! இதனுல், திருச்சபைகளை உறுதிப் படுத்தியருளும்! மடாலயங்களை நிலை நிறுத்தியருளும்! கன்னியாவிரதம் பூண்டவர்களைக் காத்தருளும்! விவாகஸ்தர் களை அனுக்கிரகித்தருளும்! தூரத்திலுள்ளவர்களை மீண்டும் சேர்ப்பித்தருளும்! சேர்ந்துள்ளவர்களுக்கு சம்ரட்சணையருளும்! ஜீவித்திருப்பவர்களுக்குப் பாவபரிகாரம் நல்குவீராக! இதனுல், விசுவாசிகளாயிருந்து மரித்துப் போனவர்களுக்கு ஆறுதல் அளித்தருளும்! என் கர்த்தாவே! எங்கள் அனைவரின் நாவுகளிலிருந்து உமக்கும், உம் பிதாவுக்கும், பரிசுத்த ஆவி யானவருக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக் கும் துதியும், தோத்திரமும், எழும்ப அருள்புரிவீராக!

சபை : ஆமென்! கர்த்தர் உமது பணிவிடையை அங்கீகரித்து உம்முடைய பிரார்த்தனைகளால் எங்களுக்குச் சகாயம் செய் தருளுவாராக!

[வேறொரு முன்னுரையும் செத்ராவும்]

முன்னுரை

எங்களுக்காகப் பலியாகத்தம்மை அர்ப்பணித்து, எங்களுக்குப் பாவபரிகாரம் நல்கி, சுத்திகரிக்கின்ற தமது திருப்பலியால் எங்களைப் பரிசுத்தப்படுத்தின வசீகரமான அந்தத் திருப்பலி வாழ்த்தப் பெற்றது! அந்த மதுரகனி மகத்துவமானது! ஊமைப் பிராணிகளின் பலிகளி லிருந்து எங்களை விடுதலையாக்குவதற்கு சிலுவைமீதேறி எங்களை இரட்சித்த கன்னிப் பெண்ணுட்டின் குட்டியான ஆட்டுக் குட்டிக்குத்துதி!

இந்தத் தெய்வீகக் குர்பானு செலுத்தும் இத்தருணத்திலும், எல்லாப் பெருவிழாக்களிலும், நேரங்களிலும், நாழிகைகளிலும், நம் வாழ்நாள் முழுவதும், அவருக்கே துதியும், கனமும், ஆராதனையும் உண்டாகுக !

செத்ரா

முழு இருதயத்தோடு தம்மைக் கூப்பிடுகிறவர்களின் தோத்திர பலியை ஏற்றுக் கொள்ளுபவரும், சர்வ வல்லவருமான தேவனுகிய கர்த்தாவே ! உமது அடியாரும் பாவிகளுமான எங்களுடைய கைகளிலிருந்து இந்த பரிசுத்த தூபத்தை நீர் ஏற்றுக் கொண்டு, உம்முடைய மகா பரிசுத்த ஸ்தலத்தை நாங்கள் அணுகக் கிருபை செய்தருளும் ; எங்களுடைய பாவங்களுக்காகவும் உம் ஜனத்தின் குற்றங்களுக்காகவும் ஆன்மீகக் குர்பானுக்களும் திருப்பலிகளும் உமக்கு அர்ப்பணிக்க எங்களை பலப்படுத்தியருளும் ! நாங்கள் உமக்கு அங்கீகரிக்கத்தக்க பலியாக அமைவதற்கும் உத்தமராகிய உமது பரிசுத்த ஆவி எங்கள்மேலும், வைக்கப்பட்டிருக்கிற இந்த குர்பானுமீதும், விசுவாசமுள்ள உம் சகல ஜனத்தின் மீதும், எங்கள் கர்த்தராகிய இயேசு மேசியாவின் மூலம் தங்குவதற்கு எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்! அவரோடு கூட உமக்கும், உமது பரிசுத்த ஆவிக்கும், இப்பொழுதும் எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும், கனமும், அதிகாரமும் உரியனவாகுக !

சபை ; ஆமென் ! கர்த்தர் உமது பணிவிடையை ஏற்றுக் கொள்வாராக !

உம்ஜெபங்களால் எங்களுக்கு உதவி செய்தருள்வாராக !

புரோ : தேவனிடமிருந்து கடன்களுக்குப் பரிகாரமும், பாவங்களுக்கு விமோசனமும்

இகபரமாகிய இரு லோகங்களிலும் நாம் பெறுவோமாக !

சபை ; ஆமென் !

[தூபகலசத்தில் சாம்பிராணியிட்டு, தூபகலசத்தின்மேல் மும்முறை சிலுவையடையாளமிட்டுக் கூறுவது]

புரோ ; பலவீனனும் பாவியுமான தாசனுகிய நான் மறுமொழியாய்க் கூறுகிறேன்.

பரிசுத்தராகிய பிதாவானவர் பரிசுத்தர் !

சபை : ஆமென் !

புரோ: பரிசுத்தராகிய திருக்குமாரன் பரிசுத்தர்!

சபை : ஆமென்!

புரோ: ஜீவனும் பரிசுத்தமுமுள்ள ஆவியானவர் பரிசுத்தர்!

பாவியாகிய உம் தாசனின் தூப கலசத்தை நீர் சுத்திகரித்து— எங்கள் ஆத்துமாக்கள் மேலும், எங்கள் பிதாக்கள், சகோதரர், தலைவர்கள், போதகன்மார் ஆகியோரின் ஆத்துமாக்கள் மேலும், எங்களை விட்டு மரித்துப் போனவர்கள், பரிசுத்த திருச் சபையின் மக்களாக மரித்துப் போன விசுவாசிகள் ஆகியோரின் ஆத்துமாக்கள் மேலும் இகபரமாகிய இரு லோகங்களிலும் தயவோடு கருணை புரிவீராக!

சபை : ஆமென்!

உதவியாளர் : பாரக்மோர்! தெய்வீக ஞானத்திற்குச் செவி கொடுப் போமாக! நீங்கள் அனைவரும் நன்றாக நின்று சங்கை பொருந்திய புரோகிதரின் ஜெபத்திற்கு மறுமொழி கூறுவீர்களாக !

நைசீன் (நிக்யா) விசுவாசப்பிரமாணம்.

புரோ : சர்வ'வல்லமையுள்ள பிதாவாகி, வானத்தையும் பூமி யையும்

உதவியாளர் : காணப்படுவதும் காணப்படாததுமான எல்லாவற்றை யும் படைத்த ஒரே சக்தி தேவனை நாங்கள் விசுவாசிக் கிறோம்.

தேவனுடைய ஒரே குமாரனும், சகல உலகங் களுக்கு முன்பே பிதாவினின்று பிறந்தவரும், ஜோதியில் ஜோதியானவரும், மெய்த்தேவனிலிருந்து வந்த மெய்த் தேவனும், ஜெனித்தவரும், சிருஷ்டியல்லாதவரும், சாராம்சத்தில் பிதாவோட ஒரே தன்மையுடையவரும், சகலமும் உண்டாக முகாந்தரமாயிருந்தவரும், மனித ராகிய எங்களுக்காகவும், எங்களுடைய, இரட்சிப்புக் காகவும், தம் திருச்சித்தத்தின்படி பரலோகத்திலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினால் தேவமாதாவாகிய பரிசுத்த கன்னிமரியாளிடத்திலிருந்து சரீரமெடுத்து மனிதனாகி, பொந்தியு பிலாத்துவின் நாட்களில் எங்களுக்காகச் சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு, மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றும் நாள் உயிர்த்தெழுந்து, பரமண்டலத்துக்கேறி, தம் பிதாவின் வலது பக்கத்தில் வீற்றிருக்கிறவரும், உயிருள்ளோரையும் மரித்தோரை யும் நியாயம் தீர்க்க தமது சிறந்த மகிமையோடே மீண்டும் வருபவரும், தமது இராச்சியத்திற்கு முடிவு இல்லாதவருமாகிய இயேசு மேசியாவாகிய ஒரே கர்த்தரை நாங்கள் விசுவாசிக்கிறோம்.

சகலத்தையும் ஜீவிப்பிக்கிற கர்த்தாவும், பிதாவினின்று புறப்பட்டு, பிதாவோடும் குமாரனோடும் வணங்கப்பட்டு துதிக்கப்படுகிறவரும், தீர்க்கதரிசிகளின் மூலமாகவும் அப்போஸ்தலர்கள் மூலமாகவும் உரைத்தவருமான ஜீவனும் பரிசுத்தமுள்ள ஒரே ஆவியானவரையும், காதோலிகமும் அப்போஸ்தலிகமுமான ஒரே பரிசுத்த சபையையும் விசுவாசிக்கிறோம்.

பாவமன்னிப்புக்கென்று ஒரே ஞானஸ்நானம் என்று அறிக்கையிட்டு மரித்தோரின் உயிர்த்தெழுதலுக்காகவும் நாங்கள் காத்திருக்கிறோம்!

சபை : ஆமென்!

உதவியாளர் : பாரக்மோர் – ஸ்டோமென் – காலோஸ்

சபை : குரியே – லாய்சோன்

சபை : ஞானப்பாட்டு

கெஞ்சிக் கேட்கும் சமயம் இதே !
விமோசனம் பெற்றிடும் நேரம் இதே !
நமஸ்கரிக்கும் சமயம் இதே !
கருணை பெற்றிடும் நேரம் இதே !

உன்னத நிலையில் ஏறியுள்ளார்
இன்று இந்நேரம் புரோகிதர்தாம்
பெற்றுக் கொள்வோர் தமக்காக
அனுஷ்டிக்கிறார் குர்பானா !

பிரியமானோரே கருணையொடு
உருக்கமும் பெற்றிட இது நேரம் !
மெய்யான சிநேகத்தோடு — சமா
தானம் நல்கும் சமயமிதே !

தூரத்திலுள்ளோர் அருகிலுள்ளோர்
ஒரு மனப் படுகிற சமயம் இதே !
வருவீர் அதனால் சோதரரே
கருணை பெற நாம் கெஞ்சிடுவோம் !

நாதனே கிருபை செய்திடுவீர் !
இரக்கமாய் கிருபை தந்திடுவீர் !
நாதனே உத்தரவு அருளிச் செய்வீர் !
அடியார்க்கு கிருபை அளித்திடுவீர் !

நல்லவரே எம் பலவீனத்தில்
உத்தரவு அருளிச் செய்வீரே !
நாங்கள் அனைவரும் ஒருமித்து
ஆர்ப்பரிப்போடு உரைத்திடுவோம் !

[புரோகிதர் தமது கைவிரல்களை நீரில் சுத்திகரித்து ஜெபித்துக் கூறுவது]

தேவனாகிய கர்த்தாவே ! என் ஆத்துமாவை அசுத்தப்படுத்துகிற அழுக்கை நீர் கழுவியருளி, ஜீவனைத் தருகிற உமது தெளிப்பினால் என்னைச் சுத்திகரித்தருளும் ! நான் தூய்மையோடும் பரிசுத்தத் தோடும்கூட பரிசுத்தமானதும், பரிசுத்தப்படுத்துவதுமான உமது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கும் – வந்தனைக்குரியதும் தெய்வீகமும் ஆன உம்முடைய இரகசியங்களை நிர்மலத்தோடு நான் தொடுவதற்கும், என்னென்றைக்கும், உம்மைச் சந்தோஷிப்பிக்கிறதும் மகத்துவமுடையதுமான உமது திருப்பலிக்குத் தகுதியான ஜீவபலியை மாசற்ற மனசாட்சியோடு நான் உமக்கு அர்ப்பணிக்கவும் என்னைத் தகுதியாக்கியருளும் !

[மகாபுரோகிதர் இருப்பின், புரோகிதர் அவரது கையைமுத்திசெய்து]

பிதாவே விமோசனம் நல்கி என்னை ஆசீர்வதிப்பீராக !

[பிறபுரோகிதர்கள் இருப்பின் அவர்களுக்கு சமாதானம் கொடுத்து பிறகு, மேற்குப் பக்கம் சபைக்கு முன்பாகத் திரும்பி ஒப்புரவாகிக் கொண்டு கூறுவது]

என் சகோதரரே, பெரியோர்களே, என் குர்பானா அங்கீகரிக்கப்பட நீங்கள் எனக்காகப் பிரார்த்திப்பீர்களாக !

[புரோகிதர், பலிபீடத்திற்குமுன் முழங்காற்படியிட்டு ஏறெடுக்கும் தனி ஜெபம்]

பரிசுத்தமும் மகத்துவமும் பொருந்திய திரித்துவமே ! என்மேல் கருணை கொள்வீராக ! பரிசுத்தமும், மகத்துவமும் பொருந்திய திரித்துவமே ! பாவியாகிய என்மேல் கருணையாயிரும் ! பரிசுத்தமும், மகத்துவமும் பொருந்திய திரித்துவமே ! பெலவீனங்களும் பாவங்களும்

நிறைந்தனவாகிய என் கைகளிலிருந்து இந்தக் குர்பானுவை நீர் அங்கீகரித்தருள்வீராக! தேவனே! உமது கருணையால், உம் மாதாவுக்கும், சகல பரிசுத்தவான்களுக்கும், விசுவாசிகளாகி மரித்துப்போன அனைவருக்கும், பரிசுத்தமும் பரத்துக்குரியதுமான உமது பலிபீடத்தின் மேல், ஆறுதலையளித்து நினைவு கூர்ந்தருளும்!

தேவனே! இச்சமயத்தில் உம் தாசனும் பாவியுமான என் பாவங்களை நீர் பரிகரித்து மன்னிப்பீராக! உம்முடைய மாதா, பரிசுத்தவான்கள் ஆகியோரின் பிரார்த்தனை மூலம், எப்பொழுதும் உம்மை விளித்துக் கெஞ்சுகிறவனுகிய என் பெலவீனத்தை நீர் மன்னித்து எனக்குச் சகாயம் செய்தருளும்! தேவனே எங்களோடு இரத்த உறவு உடையவர்களாகிய எங்கள் பிதாக்கள், சகோதரர், பெரியோர்கள் ஆகியவர்களின் பாவங்களையும் —யாருக்காக —எவர் நிமித்தம் இத்திருப்பலி அர்ப்பணிக்கப்படுகிறதோ (இக்குறியிட்ட இடத்தில், புரோகிதர், குறிப்பிடவேண்டியவர்களின் பெயர்களைச் சொல்லி ஜெபித்தல்) அவர்களுடைய பாவங்களையும் உமது கருணையால் பரிகரித்து மன்னிப்பீராக!

[புரோகிதர் எழுந்து, திருப்பலிபீடத்தை முத்திசெய்து ''பதவி''மேல் ஏறி குர்பானுவைத் தொடங்குகிறுர்.]

நம் கர்த்தாவின் சகோதரனும், அப்போஸ்தலனும், இரத்தசாட்சியும், எருசலேமின் முதல் பிரதம அத்தியட்சருமான பரிசுத்த யாக்கோபின் நற்கருணை முறை

[சமாதானத்திற்குமுன் ஏறெடுக்கவேண்டிய ஜெபத்திற்குப்பதிலாக கிறிஸ்துவின் ஜெனனத் திருநாளில் ஏறெடுக்கவேண்டிய ஜெபம்.]

எல்லையில்லாத சமாதானமும், முடிவில்லாத சாந்தியும், பிரிக்க முடியாத சிநேகமும் ஆகிய தேவனே! உமது கருணை மிகுதியால் மனிதனை நீர் அழிவில்லாதவனுக சிருஷ்டித்தீர்! சாத்தானுடைய பொருமையினுல் அவன் உமது கட்டளையை மீறி மரண தண்டனை அடைந்ததின் நிமித்தம், எங்கள் கர்த்தரும், தேவனுமாகிய உமது ஏகசுதன் ஜீவனைக் கொடுக்கவந்ததினுல், நீர் பூமியை சொர்க்க சமாதானத்தினுல் நிரப்பினீர்! ''உன்னதத்தில் தேவனுக்குத் துதி! பூமியில் சமாதானம்! மனிதர்மேல் பிரியம்!'' என்று கூறி தூதகணங்கள் உமக்குத் துதி பாடினுர்கள்! கர்த்தாவே! உமது பிரியம் எங்கள் இதயங்களில் நிரம்புவதாக! இப்பொழுது சகல மாசுகளிலிருந்தும், எல்லாவித துஷ்டத்தனத்திலிருந்தும், கபடங்களிலிருந்தும் எங்களை விடுதலையாக்கி, பரிசுத்த ஆலிங்கத்தினுல் பரஸ்பரம் நிர்மல சமாதானம் நல்குவதற்கும், எங்கள் கர்த்தாவாகிய மேசியாத்தம்பிரானின், பரத்துக்குரியதும் அழியாததுமான ஈவில் பங்குகொள்வதற்கும் எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்! அவர்மூலமும், அவரோடும்

உமக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத்தக்க வரும், ஜீவனைக் கொடுப்பவருமாகிய உமது ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும், கனமும், அதிகாரமும் உரியனவாகுக !

சபை : ஆமென்.

[பஸ்கா வியாழனன்று ஏறெடுக்கும் ஜெபம் – அன்று சமாதானம் கொடுப்பதில்லை.]

பரிசுத்த இரகசியமாகிய அந்த இராப்போஜன வேளையில், சூசகமாய் இருந்து வந்த புராதன பலியை முடிவாக்கி, தமது கிருபையின் புது உண்மையான இரகசியத்தை எங்களுக்கு ஒப்படைத்தவராகிய மேசியாத் தம்பிரானே! உம்மை நாங்கள் மன்றாடுகிறோம்! பரிசுத்தமும் இரகசியமுமாகிய உமது இராப்போஜனத்தில் எங்களை உம்மோடுகூட சம்பந்தமுள்ளவர்களாகவும், பங்காளிகளாகவும் ஆக்கியருளும்! மாசற்றவர்களாகவும், தண்டனைக்குள்ளாகாதவர்களாகவும் நாங்கள் அதைக் கைக் கொள்ள எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்! அதன் மூலம், நாங்கள் சகலபர்வ இருளிலிருந்தும் காக்கப்பட்டு, இங்கும், நித்திய வாழ்விலும், அந்தரங்க காரியங்களிலும், வெளியரங்க காரியங்களிலும் உம்மை நாங்கள் பிரியப்படுத்துபவர்களாக இருப்போமாக! உமது இராஜ்ஜியத்திலே சௌபாக்கியங்களால், உமது சொர்க்க மணவறை யில் எங்களை மகிழ்வித்தருளும்! எங்கள்மேலுள்ள உமது சகல கிருபை களுக்காகவும் நாங்கள் உமக்கும், உம் பிதாவுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத்தக்கவரும், ஜீவனைக் கொடுப்ப வரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்றாயிருக்கிறவருமான உமது ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும், தோத்திரமும் நன்றியும் அர்ப்பணிக்கிறோம் !

சபை : ஆமென் !

[சுவிசேஷ சனிக்கிழமையன்று ஏறெடுக்கும் ஜெபம்—இந்த நாளிலும் சமாதானம் கொடுப்பதில்லை.]

மேசியாத்தம்பிரானே ! எங்களுக்காக சரீரக் கிரியைகளை நீர் செய்துமுடித்து, கஷ்டங்களையும், சிலுவையையும் நீர் அனுபவித்து, மரித்துப்போனவர்களுக்கு நம்பிக்கையையும், மனோதைரியத்தையும் நல்குவதற்குப் பாதாள லோகத்திற்கு இறங்கிச் சென்றபிறகு, உம்மில் விசுவாசம் வைக்கிற ஒவ்வொருவரையும் பாவக்கறையிலிருந்து துடைத் தழித்துத் தூய்மைப்படுத்துவதற்காக இந்தக் கூதாசாவை உமது திருமேனியால் நீர் காண்பித்தீர்! அவன் உம்மோடு, உமது இராச்சி யத்தில் ஆனந்திக்குமாறு புதிதாக நீர் வாக்குறுதியளித்தீர்! இரகசிய மானதும், பரலோகத்துக்குரியதுமான இந்த ஆனந்தத்தில் நாங்களும் பங்குகொள்ள எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்! பரிசுத்தத் தோடும், குற்றமில்லாமலும் இதில் பங்குகொள்ள எங்களுக்குக் கிருபை

செய்தருளும்! இதில் பங்குகொள்வதின்மூலம், யதார்த்தமும், பிரிவுபடாததுமான ஜீவியத்தால் நாங்கள் உம்மோடு ஐக்கியப்படவும், உம்மூலம் அழிவின்மையும், நித்தியானந்தமும் நாங்கள் பெறவும் அனுக்கிரகித்தருளும்! நாங்கள் உமக்கும், உம் பிதாவுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத்தக்கவரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்றுயிருக்கிறவருமான பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும், தோத்திரமும், செலுத்துகிறோம்!

சபை : ஆமென்!

சமாதானத்திற்கு முன் ஏறெடுக்கும் ஜெபம்

புரோ: சகலத்திற்கும் தேவனும் நாதனுமாயிருக்கிறவரே! வஞ்சனையில்லாதவரும், சிநேகக் கட்டினுல் இணைத்து, பரிசுத்தமான திவ்விய ஆலிங்கனத்தினுல் ஒருவருக்கொருவர் சமாதானம் கொடுக்கும் வண்ணம், தகுதியற்றவர்களாகிய எங்களை இந்த இரட்சிப்புக்குப் பாத்திரவான்களாக்கியருளும்! நாங்கள் உமக்கும் உமது ஒரே திருக்குமாரனுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும் உத்தமரும் வந்திக்கப்படத் தக்கவரும், ஜீவனைக் கொடுப்பவரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்றுயிருக்கிறவருமான உமது பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும் என்றென்றைக்கும் துதியும், தோத்திரமும் செலுத்துகிறோம்!

சபை: ஆமென்!

புரோ: உங்கள் எல்லோருக்கும் சமாதானம் உண்டாவதாக!

சபை: உமது ஆவியோடும் இருப்பதாக!

[இங்கு புரோகிதர், உதவியாளருக்குச் சமாதான முத்தம் தருகிறுர். உதவியாளர், மற்ற புரோகிதன்மார்களுக்கும், திருச்சபை உறுப்பினர்களில் மிக அருகில் இருப்பவருக்கும் சமாதானம் கொடுக்கிறுர். அவர் மற்றவர்களுக்கு அதை வழங்குகிறுர் "முத்தம்" கைகளால் வழங்கப்படுகிறது.]

உதவியாளர்: பாரக்மோர்! நம் தேவனுகிய கர்த்தரின் அன்பின் மூலமாக பரிசுத்தமான தெய்வீக முத்தத்தால், ஒவ்வொருவரும் தமக்கடுத்தவருக்கு சமாதானத்தைக் கொடுப்பாராக.

சபை: தேவனுகிய கர்த்தாவே! எங்கள் வாழ்நாள் முழுவதும் இந்த சமாதானத்திற்கு எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்!

உதவியாளர்: கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்தமும் தெய்வீகமுமான இந்த சமாதானத்திற்குப்பின் கருணையுள்ள கர்த்தருக்கு முன்பாக நாம் தலைவணங்குவோமாக!

சபை : எங்கள் கர்த்தரே ! எங்கள் தேவனே ! உமக்கு முன்பாக நாங்கள் தலை வணங்குகிறோம் !

புரோ ; உயரங்களில் வாசம் செய்து, தாழ்மையுள்ள காரியங்களை உற்றுக் கவனிக்கிற நீரே கருணையுள்ள கர்த்தர் ! உம் முன்பாகத் தங்கள் தலைகளைத் தாழ்த்தியுள்ளவர் களுக்கு நீர் ஆசீர்வாதங்களை அனுப்பியருளி, உமது ஏக சுதனின் கிருபையால் அவர்களை வாழ்த்துவீராக ! அவரோடு, சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத்தக்கவரும், ஜீவனைக் கொடுப்பவரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்றுயிருக்கிறவருமான பரிசுத்த ஆவிக்கும் துதியும், கனமும் அதிகாரமும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் உரியனவாகுக !

சபை : ஆமென் !

புரோ : வழிதவறிப்போன ஆடுகளை மீட்டுவருவதற்காக, மனிதர் மேல் உமக்கிருந்த மிகுந்த அன்பினால், உமது திருக் குமாரனை உலகத்திற்கு அனுப்பிய பிதாவாகிய தேவனே ! என் நாதனே ! இரத்தம் சிந்துதல் இல்லாத இந்த பலியிடுதலை நீர் நிராகரிக்காதேயும் ! ஏனெனில் உம்முடைய கருணைமீது அல்லாமல் எங்களுடைய சுயநீதியில் நாங்கள் சார்ந்திருக்கவில்லை. எங்களுடைய இரட்சிப்புக்காக ஏற்படுத்தப்பட்ட இந்த இரகசிய மானது, எங்களுக்குத் தண்டனைத் தீர்ப்பாக அமைத்து விடாதேயும் ! அதற்குப் பதிலாக எங்களுடைய பாவ பரிகாரமாகவும், உமக்கும், உம்முடைய ஒரே பேறான குமாரனுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத் தக்கவரும், ஜீவனைக் கொடுப்பவரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்றுயிருக்கிறவருமான பரிசுத்த ஆவிக்கும் நாங்கள் செலுத்தும் நன்றியாகவும் அமைவதாக !

சபை : ஆமென் !

[புரோகிதர் ஸோஸபாவைத் தூக்கி அசைத்து மௌனமாகத் தமக்குள் கூறுவது]

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் பன்னிரண்டு நீரூற்றுக்களைப் பிரவாகித்த கனல்பாறை

நீரே! எங்கள் இரட்சகரின் கல்லறை வாயிலில் வைக்கப்பட்ட கனல்பாறையும் நீரே!

உதவியாளர்; பாரக்மோர்! சகோதரரே, நாம் அனைவரும். ஒழுங் கோடும், பயத்தோடும், வணக்கத்தோடும், பரிசுத்தத் தோடும், அன்போடும், மெய்விசுவாசத்தோடும், நல்ல தெய்வ பக்தியோடும் கூடநின்று சங்கைக்குரிய இந்த புரோகிதரின் (வந்திக்கத்தக்க பிதாவின்) கைகளால் நமக்கு முன்பாக வைக்கப்பட்டிருக்கிற பயம் தருவதும், பரிசுத்தமுமான குர்பானாவை கவனிப்போமாக!. ஏனென்றால் நம் அனைவருக்காகவும் ஜீவனுள்ள பலியை அனைத்துக்கும் உடையவராகிய பிதாவாம் தேவனுக்கு ஐக்கியத்திலும் சமாதானத்திலும் அர்ப்பணிக்கிறார்.

சபை: இந்த குர்பானா, கருணையும், சமாதானமும், பலியும், தோத்திரமும் ஆகும்.

[புரோகிதர் வலது கையைத் "தபலேத்தா" மேல் வைத்து, இரகசியங்களிலிருந்து சக்தியைப் பெற்றுக் கொண்டு, தமக்குச் சிலுவைக் குறியிட்டுக் கொண்டு, வடக்குப் பாகத்திலும், தெற்குப் பாகத்திலும் உள்ளவருக்கு நேராகச் சிலுவைக் குறியிட்ட பிறகு, மேற்குப் பக்கம் திரும்பி, ஜனங்களுக்கு நேராக மூன்றுமுறை சிலுவைக்குறி வரைந்து கூறுவது]

புரோ: பிதாவாகிய தேவனுடைய அன்பும், ஏக குமாரனின் கிருபையும், பரிசுத்த ஆவியின் சம்பந்தமும் சகவாசமும், என் சகோதரரே! உங்கள் அனைவரோடும் கூட என்றென்றும் இருப்பனவாக!

சபை; ஆமென்! உமது ஆவியோடும் இருப்பனவாக!

புரோ: [தம் கைகளை மேலே உயர்த்தி] இந்த வேளையில் நம் அனைவரின் உணர்வுகளும், நினைவுகளும், இதயங்களும் பிதாவாகிய தேவனின் வலது பாரிசத்தில் மேசியாத் தம்பிரான் வீற்றிருக்கும் இடமாகிய மகா உன்னத ஸ்தலத்தில் இருப்பனவாக!

சபை: எங்களுடைய உணர்வுகளும், நினைவுகளும், இதயங்களும் தேவனாகிய கர்த்தரிடத்தில் இருக்கின்றன!

புரோ: பய பக்தியோடு கர்த்தரை நாம் தோத்திரிப்போமாக!

சபை: பயபக்தியோடு, கர்த்தரைத் தோத்திரிப்பது தகுதியும் நியாயமுமாயிருக்கிறது!

[இரகசியங்களின் மீது தம் கைகளை அசைத்து மௌனமாகக் கூறுதல்.]

புரோ ; சகல சிருஷ்டிகளையும் படைத்தவரை நாம் தோத்திரிப்பதும், வந்திப்பதும், துதிப்பதும் உண்மையாகவே தகுதியும் நியாயமுமாயிருக்கிறது.

[பிறகு தம் இருகைகளையும் மேலே உயர்த்தி, சத்தமாக]

சூரியன், சந்திரன், சகல நட்சத்திரங்கள், பூமி, சமுத்திரங்கள் பரம எருசலேமில் பெயர்கள் எழுதப்பட்டுள்ள முதற்பேறுன வர்கள், தூதர், பிரதான தூதர், ரீசேன்வோசேன்மார், சுல்தோனேன்மார், மவுத்துப்பேன்மார், மோராவோ சேன்மார், ஹைலேன்மார், கண்கள் பல உள்ள கேருபின்கள் தங்கள் பாதங்களோடு முகங்களையும் மூடிக்கொண்டு ஒன்றனிடமிருந்து மற்றதற்குப் பறந்து சென்று, "கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று ஆரவாரத்தோடு பாடித்துதிக்கிற ஆறு ஆறு சிறகுகளுடைய சேராபீன்கள் முதலான சரீரிகளும், அசரீரிகளுமான பரம சேனைகளும் மகிமைப்படுத்துகிறவரை, நாமும் மகிமைப் படுத்துவோமாக,

சபை : தமது மகிமையால் வானமும், பூமியும் நிறைந்துள்ள வல்லவராம் தேவனாகிய தம்பிரான் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்! உன்னதத்திலே ஓசன்ன ! தேவனாகிய கர்த்தரின் திரு நாமத்திலே வந்தவரும் வரவிருக்கிறவரும் தோத்திரிக்கப் பட்டவர் ! உன்னதத்திலே துதி !

[புரோகிதர் பரிசுத்த இரகசியங்கள் மேல் தமது கைகளை அசைத்து மௌன மாக ஒரு ஜெபத்தைச் சொல்லுகிறார்]

ஜெபம் : லோகங்களுக்கெல்லாம் அதிபதியே ! மெய்யாகவே பரிசுத்தரும், பரிசுத்தப்படுத்துபவரும் நீரே! உமது திருக்குமாரனும், எங்கள் கர்த்தருமாகிய இயேசுமேசியாவும், உம் இரகசியங்களை ஆராய்கிற உம் பரிசுத்த ஆவியானவரும் பரிசுத்தர் ! மண் கொண்டு மனிதனை நீர் சிருஷ்டித்து, அவனைப் பரதீசுக்குள் வாழவைத்தீர் ! அவன் உம் கற்பனைகளை மீறின போதிலும், அவன் வழி தவறிப்போக நீர் விடவில்லை. தீர்க்கதரிசிகள் மூலமாய் நீர் அவனை வழி நடத்தினீர் ! கடைசியில் உமது ஒரே பேறுன திருக்குமாரனை உலகத்திற்கு அனுப்பினீர். அவர் பரிசுத்த ஆவியின் மூலம் பரிசுத்த கன்னி மரியாளிடத்திலிருந்து சரீரம் தரித்து, எங்களில் பழுதாய்ப் போன உமது பிரதிருபத்தைப் புதுப்பித்தீர் !

புரோ : பாவமில்லாத அவர், தமது சொந்த சித்தத்தின்படி, பாவிகளாகிய நமக்காக மரணத்தை ஏற்றுக் கொள்ளத் தம்மை

ஆயத்தமாக்கிக் கொண்ட போது, அவர் தம்முடைய பரிசுத்த கரங்களில் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் செய்து, ஆசீர்வதித்து ++ புனிதப்படுத்தி + பிட்டு, தம்முடைய பரிசுத்த அப்போஸ்தலருக்குக் கொடுத்து, இதை நீங்கள் வாங்கிப் புசியுங்கள் ; இது உங்களுக்காகவும், அநேகருக்காகவும் பாவ மன்னிப்புக்கென்றும் நித்திய ஜீவனுக்கென்றும் பிட்கப்பட்டு கொடுக்கப்படுகின்ற என்னுடைய சரீரம் என்று திருவுளம் பற்றினர்.

சபை : ஆமென் !

புரோ: அந்தப்படியே அவர் பானபாத்திரத்தையும் எடுத்து, தோத்திரம் செய்து, ஆசிர்வதித்து + + புனிதப்படுத்தி + தமது பரிசுத்த அப்போஸ்தலரிடம் கொடுத்து, "நீங்கள் எல்லோரும் இதை வாங்கி பானம் செய்யுங்கள். இது உங்களுக்காகவும், அநேகருக்காகவும், பாவ மன்னிப்புக் கென்றும் நித்திய ஜீவனுக்கென்றும் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தம்" என்று திருவுளம் பற்றினர்.

சபை: ஆமென்!

புரோ: "என்னை நினைவுகூரும்பொருட்டு இந்தப் பரிசுத்த இரகசியத்தில் நீங்கள் பங்குபெறும் பொழுதெல்லாம் நான் வருமளவும் என் மரணத்தையும் என் உயிர்த்தெழுதலையும் நீங்கள் நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்" என்று திருவுளம் பற்றினர்.

[புரோகிதர், வடபக்கத்திலிருக்கிற "இக்மூர்த்தோ" வை எடுத்து, கைதுடைத்து, அதை முத்தி செய்து, "தர்வோதோ" யுடன் தெற்குப் பக்கம் வைக்கிறர்].

சபை: எங்கள் கர்த்தாவே! உமது மரணத்தை நாங்கள் நினைவு கூருகிறோம் ; உம்முடைய உயிர்த்தெழுதலை நாங்கள் அறிக்கையிடுகிறோம் ; உமது இரண்டாம் வருகைக்காக நாங்கள் காத்திருக்கிறோம்; எங்கள் அனைவர் மேலும் உம்முடைய கருணை இருப்பதாக!

புரோ: கர்த்தாவே! நாங்கள் உமது மரணத்தையும், மூன்றும் நாள் நீர் உயிர்த்தெழுந்ததையும், பரமண்டலத்துக்கேறி, பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும், உலகத்தை நீதியோடு நியாயம் தீர்க்கவும், ஒவ்வொரு மனிதனையும் அவனவன் செய்கைக்குத் தக்கவாறு பிரதிபலன் அளிக்கவும் வருகிற உமது இரண்டாம் வருகையையும் நினைவு கூருகிறோம். ஆகவே இரத்தம் சிந்துதல் இல்லாத இந்தப் பலியை உமக்குச் செலுத்துகிறோம். எங்களுடைய கடன்களுக்குத் தக்கபடி எங்களை நடத்தாதேயும்! எங்களுடைய

பாவங்களுக்குத் தக்கவாறு எங்களைப் பழிவாங்காதேயும்! உமது மிகுதியான இரக்கங்களின்படி உம் அடியார்களாகிய எங்களுடைய பாவங்களை நீக்கியருளும்! உம் ஜனமும் உமக்குச் சொந்தமானவர்களுமாகிய நாங்கள் "சர்வ வல்லமையுள்ள பிதாவே! எங்கள் மேல் இரக்கமாயிரும்!" என்று உம் மூலமாக உம் பிதாவையும் உம்மையும் கெஞ்சி மன்றாடுகிறோம்!

சபை: பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள தேவனே! எங்கள் மேல் இரக்கமாயிரும்! தேவனாகிய கர்த்தாவே! நாங்கள் உம்மை மகிமைப்படுத்துகிறோம்; உம்மைத் துதிக்கிறோம்; உம்மை வணங்குகிறோம்; உம்மைப் பிரார்த்திக்கிறோம். உத்தமரே! எங்கள் மேல் இரக்கம் வைத்து எங்கள் மேல் கருணையாயிரும்!

[புரோகிதர் தனியாக ஏறெடுக்கும் ஜெபம்]

கர்த்தாவே! பெலவீனரும் பாவிகளுமான உம் அடியார்களாகிய நாங்களும் உமக்கு நன்றி செலுத்தி சகலவற்றைக் குறித்தும், சகலத்திற்காகவும் உள்ள உமது தயவுக்காக ஸ்தோத்திரிக்கிறோம்.

[பரிசுத்த ஆவி இறங்குவதைக் குறிப்பாகக் காட்ட புரோகிதர் தம் கைகளை அசைக்கிறார். மௌன ஜெபம் செய்கிறார்[.

உதவியாளர்: பாரக்மோர்! எனக்குப் பிரியமானவர்களே! ஜீவனுள்ள பரிசுத்த ஆவி பரலோகமாகிய உன்னதத்திலிருந்து மகிமையோடு இறங்கி வந்து, வைக்கப்பட்டுள்ள இந்த பரிசுத்த குர்பானா மீது கவிந்து அமர்ந்து, அதைச் சுத்திகரிக்கின்ற இந்த நேரமானது எவ்வளவு பயம் நிறைந்தது! நடுங்கத்தக்கது! நீங்கள் அடக்கத்தோடும், பயபக்தியோடும் நின்று ஜெபிப்பீர்களாக!

சபை: எங்களனைவரோடும் சமாதானம் இருப்பதாக! எங்களனைவருக்கும் நற்பிரியம் இருப்பதாக!

[புரோகிதரின் மௌன ஜெபம்]

பிதாவாகிய தேவனே! எங்கள் மேல் கருணையாயிரும்! சிங்காசனத்திலும், இராஜரீகத்திலும், நித்தியமான சாராம்சத்திலும், உம்மோடும் உம் திருக்குமாரனோடும் ஒன்றாயிருக்கிறவரும், பழைய உடன்படிக்கையிலும் புதிய உடன்படிக்கையிலும் மொழிந்தருளியவரும் – யோர்தான் நதியில் எங்கள் கர்த்தராகிய இயேசு மேசியாவின் மேல் புறா போலவும் – மேல் வீட்டில் அப்போஸ்தலர்களின் மேல் அக்கினி நாவுகள் போலவும்

இறங்கியவருமான உம் பரிசுத்த ஆவியானவரை இக் குர்பாஞ மேல் அனுப்பியருளும் !

[புரோகிதர் உரக்க]

கர்த்தாவே ! எனக்கு உத்தரவு அருளும் !

கர்த்தாவே ! எனக்கு உத்தரவு அருளும் !

கர்த்தாவே ! எனக்கு உத்தரவு அருளி, தயவு கூர்ந்து என் மேல் கிருபையாயிரும் !

சபை : குரியே — லாய்சோன் !

குரியே — லாய்சோன் !

குரியே — லாய்சோன் !

புரோ : [தம் வலது கையை அப்பத்தின் மீது அசைத்து]

பரிசுத்த ஆவியானவர் அமர்ந்து இந்த அப்பத்தை, ஜீவனை அளிக்கும் சரீரமாகவும், இரட்சிப்பைத் தரும் சரீரமாகவும் நம் தேவனுகிய மேசியாத்தம்பிரானின் சரீரமாகவும் ஆக்குவாராக !

சபை : ஆமென் !

புரோ : [தம் வலது கையைப் பான பாத்திரத்தின் மீது அசைத்து]

இந்தப் பான பாத்திரத்தை, புது உடன்படிக்கையின் இரத்தமாகவும் இரட்சிப்பைத் தரும் இரத்தமாகவும் நம் தேவனுகிய மேசியாத் தம்பிரானின் இரத்தமாகவும் பூரணப்படுத்தியருள்வாராக !

சபை ; ஆமென் !

[புரோகிதர் தம் இரு கைகளையும் உயர்த்தி, உரக்க]

நற்கிரியைகளாகிய கனிகளை வகிக்க, ஜெயிக்கப்படமுடியாத விசுவாசப் பாறையின் மேல் ஸ்தாபிக்கப்பட்டதும், பாதாள நரகத்தின் வாசல்கள் வெற்றிகொள்ள முடியாததுமான, உமது பரிசுத்த திருச்சபையை உறுதிப்படுத்தி, இத்திருப் பலியில் சம்பந்தப்படுகிற ஆத்துமாக்களையும், சரீரங்களையும் தேகிகளையும் நீர் புனிதப்படுத்துவீராக! திருச்சபையைக் கடைசி வரையிலும் விசுவாச பேதங்களாகிய கலகங்களிலிருந்து காத்தருள்வீராக ! அது உமக்கும், உமது ஒரே பேருன குமாரனுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும் வந்திக்கப்படத்தக்கவரும், ஜீவனைக் கொடுப்பவரும்,

சாராம்சத்தில் உம்மோடு ஒன்றுயிருக்கிறவருமான உமது பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென் றைக்கும் துதியும், தோத்திரமும் இருப்பனவாக !

சபை : ஆமென் !

[உதவியாளர் தூப்தேன் 1 கூறுகின்றபொழுது, புரோகிதர் மௌனமாக ஏறெடுக்கும் தனி ஜெபம்.]

கர்த்தாவே! சகல ஆலயங்களின் தாயாகிய பரிசுத்த சீயோனுக் காகவும், பூலோகமெங்குமுள்ள உம்முடைய பரிசுத்த சபைக்கு பரிசுத்த ஆவியின் நல்வரங்கள் உண்டா வதற்காகவும், இரத்தம் சிந்துதல் இல்லாத பலியை நாங்கள் உமக்கு அர்ப்பணிக்கிறேம்! கர்த்தாவே ! நீதிமான்களும், சத்தியவான்களும் ஆகிய எங்கள் முற்பிதாக் களான ஆபூன் மார் இக்னேஷியசையும், ஆபூன் மார் பஸேலி யோசையும், ஆபூன் மார் கிரிகோரியோசையும் எங்கள் அத்தியட்சர், ஆபூன் மார் ... ... யும், புரோகிதர் களையும், உதவியாளர்களையும், ஆசாரியர் கூட்டம் அனைத்தை யும், பெலவீனனுகிய என்னையும் நினைவு கூருவீராக ! என் சிறு பருவத்தின் பாவங்களை நீர் நினையாமல் உமது கருணையால் எனக்கு ஜீவனை நல்குவீராக ! சிறைப்பட்டுள்ளோர், வியாதி யஸ்தர், துன்பப்படுவோர், நெடுங்கால நோயாளிகள், அசுத்த ஆவியினுல் பாதிக்கப்படுவோர் ஆகிய எங்கள் சகோதரர் அனைவரையும் நீர் நினைவுகூருவீராக ! வாயு மண்டலத்தையும் இந்த வருடத்தின் கிரீடத்தையும் நீர் ஆசீர்வதிப்பீராக ! ஜீவித்து வாழ்கிற அனைவரின் நல்ல விருப்பங்களை நீர் நிறைவேற்றியருள்வீராக !

தூப்தேன் (1)

உதவியாளர் : பாரக்மோர் ! இன்றும், இந்த ஜீவிய காலத்திலும், நம்முடைய அத்தியட்சர்களாக இருந்து நாலு பக்கங் களிலுமுள்ள தேவனுடைய பரிசுத்த திருச்சபைகளை மேய்த்துப் பரிபாலிக்கிற பரிசுத்தவான்களும், சங்கை பொருந்தியவர்களும், பாக்கியவான்களும் ஆன தேவ னுல் நிலைநிறுத்தப்பட்டு வருகிற நம் முற்பிதாக்களாகிய ஆபூன் மார் இக்னேஷியஸுக்காகவும், ஆபூன் மார் பஸேலியோஸுக்காகவும், ஆபூன் மார் கிரிகோரியோ ஸுக்காகவும், நம் அத்தியட்சர் ஆபூன் மார் ... ... க்காகவும் சத்திய விசுவாசிகளாகிய மற்றெல்லா அத்தியட்சர் மார்களுக்காகவும், மகத்துவமும், பயபக்தி யும், பரிசுத்தமுமான இந்த நேரத்தில் தேவனுகிய கர்த்தரிடம் மன்றுடி ஜெபிப்போமாக !

சபை : சூரியே—லாய்சோன் !

[புரோகிதர் உரக்க ஏறெடுக்கும் ஜெபம்]

தேவனுகிய கர்த்தாவே ! தீய மனிதர்களின் சகல எதிர்ப்புகளிலி ருந்தும், பிசாசுகளின் உக்கிரத்திலிருந்தும், உபத்திரவத்திலிருந்தும் எங்கள் பாவங்களின் நிமித்தம் எங்கள்மேல் விழுகிற சகல தண்டனைகளி லிருந்தும் எங்களை நீர் இரட்சித்தருள்வீராக ! உமது பரிசுத்த கட்டளைகளை ஆசரிப்பதில் நீர் எங்களைக் காத்தருளும் ! நீரே கிருபையுள்ள கர்த்தர் ! உமக்கும் உமது ஒரே பேருன குமாரனுக்கும் சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத்தக்கவரும், ஜீவனைக் கொடுப்பவரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்ருயிருக்கிற வருமான உமது பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் மகிமையையும், துதியையும் செலுத்துகிருேம் !

சபை : ஆமென் !

[உதவியாளர் தூப்தேன் II கூறுகின்றபொழுது, புரோகிதர் மௌன மாக ஏறெடுக்கும் தனி ஜெபம்]

கர்த்தாவே ! எங்களோடு நின்று பிரார்த்திப்பவர்களாகிய பிதாக்களையும், சகோதரர்களையும், எங்களை விட்டுப் பிரிந்து போனவர் களையும், குர்பானுவை அர்ப்பணிப்பதற்கு விரும்பினுலும் அது முடியாமற் போனவர்களையும், நீர் நினைவு கூர்ந்து, ஒவ்வொருவருக்கும் அவரவரின் நல்ல வேண்டுதல்களை நீர் நிறைவேற்றி யருள்வீராக !

தூப்தேன் II

உதவியாளர் : பாரக்மோர் ! சர்வ வல்லவராகிய தேவனுகிய கர்த்தாவே ! பலவிதமான கொடிய சோதனைகளில் அகப்பட்டு உம்மைச்சார்ந்திருப்பவர்களுடைய இரட்சிப் புக்காகவும், தேவரீர் அவர்களை விரைவில் தரிசிக்கவும், இந்த நாழிகையிலும் இந்த வேளையிலும் நாங்கள் தங்களை நினைவு கூருவதற்காக வெறுமையானவர்களும் பலவீனருமாகிய எங்களிடம் முன்னமேயே கேட்டு எங்களைத் தாற்பரியப்படுத்தியுள்ள விசுவாசிகளும், மெய்க்கிறிஸ்தவர்களுமாகிய எங்கள் சகோதரர்கள் அனைவரையும் நாங்கள் நினைவு கூருகிருேம். தேவனுல் காக்கப்பட்டிருக்கிற இந்த பரிசுத்த திருச்சபையின் மக்களாகிய விசுவாசிகள் அனைவருக்கும் அன்னி யோன்னிய ஐக்கியமும், அபிவிருத்தியும் உண்டாவ தற்கும், அவர்கள் நற்கிரியைகளைச் செய்பவர்களாக ஆவதற்கும் கர்த்தரிடம் மன்ருடி ஜெபிப்போமாக !

சபை : குரியே - லாய்சோன்.

[மௌன ஜெபத்திற்குப் பிறகு புரோகிதர் உரக்க ஏறெடுக்கும் ஜெபம்]

கர்த்தாவே ! நாங்கள் நினைவு கூர்ந்தவர்களையும், நினைவு கூரத் தவறியவர்கள் அனைவரையும் நீர் நினைவு கூர்ந்தருளும் ! உமது பரலோக விரிவிடங்களில் அவர்களுடைய பலிகளை நீர் ஏற்றுக் கொள்வீராக ! இரட்சிப்பின் சந்தோஷத்தை அவர்களுக்கு நீர் பிரதிபலமாகத் தந்தருளி உம்மிடமிருந்து வருகின்ற சகாயத்திற்கு அவர்களைப் பாத்திரவான்களாக்கியருளும் ! உமது வல்லமையால் அவர்களை நீர் பலப்படுத்தி உமது பெலத்தால் அவர்களை நீர் ஆயுதம் தரிப்பித்தருளும் ! நீரே கருணையுள்ளவர்! உமக்கும், உமது ஒரே பேறான குமாரனுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படதக்கவரும், ஜீவனைக் கொடுப்பவரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்றாயிருக்கிறவருமான உமது பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும், தோத்திரமும் இருப்பனவாக !

சபை : ஆமென் !

[உதவியாளர், தூப்தேன் III கூறுகிறபொழுது, புரோகிதர் மௌனமாக ஏறெடுக்கும் தனி ஜெபம்]

கர்த்தாவே ! பக்தியுள்ள நல்ல அரசர்களையும், ஆட்சியாளர்களையும் நீர் நினைவு கூர்ந்து, நாங்கள் அமைதியான வாழ்க்கை வாழ அருள்புரியும் ! ஆன்மீக ஆயுதத்தால் அவர்களுக்கு நீர் சகாயம் நல்கி, அவர்களுடைய சகல சத்துருக்களையும் அவர்களுக்குக் கீழ்ப் படுத்தியருளும்.

தூப்தேன் III

உதவியாளர் : பாரக்மோர் ! பூமியின் நான்கு பாகங்களிலும் உள்ள தேவனுடைய திருச்சபைகளையும், சந்நியாச மடங்களையும் மெய்விசுவாசத்தில் நிலைநிறுத்தி உறுதிப் படுத்திய விசுவாசிகளும் மெய்க் கிறிஸ்தவர்களுமாகிய அரசர்கள் அனைவரையும் நாங்கள் நினைவு கூருகிறோம். புரோகிதரும், விசுவாசிகளாகிய ஜனசங்கமும், கிறிஸ்தவ சமூகம் அனைத்தும் நற்கிரியைகளைச் செய்யும் படி கர்த்தரிடம் ஜெபிப்போமாக !

சபை : குரியே – லாய்சோன் !

[புரோகிதர் மௌன ஜெபத்திற்குப் பிறகு உரக்க ஏறெடுக்கும் ஜெபம்]

கர்த்தாவே ! உம்மீது நம்பிக்கை வைத்துள்ள அனைவருக்கும் நீரே இரட்சகர் ! நீரே சகாயர் ! நீரே வெற்றியைத் தருகிறவர் ! உமக்கும்

உமது ஒரே பேறுன குமாரனுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத்தக்கவரும், ஜீவனைக் கொடுப்பவரும், சாராம் சத்தில் உம்மோடு ஒன்ருயிருக்கிறவருமான பரிசுத்த ஆவிக்கும் இப் பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும், தோத்திரமும் இருப்பனவாக !

சபை : ஆமென் !

[உதவியாளர், தூப்தேன் IV கூறுகின்றபொழுது, புரோகிதர் மௌன மாக ஏறெடுக்கும் தனி ஜெபம்]

கர்த்தாவே ! நீர் ஜீவன்மேலும், மரணத்தின்மேலும் அதிகாரம் உள்ளவர் ! பரிசுத்த பிதாக்களையும், தீர்க்கதரிசிகளையும் சிலீகன் மாரையும், தேவமாதாவாகிய கன்னிமரியாளையும், யோவான் ஸ்நான கனையும், இரத்த சாட்சியாகிய ஸ்தேவானையும், சகல புண்ணியவான் களையும் நீர் நினைவு கூருவீராக !

தூப்தேன் IV.

உதவியாளர் : பாரக்மோர் ! பூமியின் சகல சந்ததிகளாலும் பாக்கிய வதி என்று போற்றத்தக்கவரும், பரிசுத்தமும், மகத்துவ மும் உள்ளவரும், ஆசீர்வதிக்கப்பட்டவரும், நித்திய கன் னிகையும், பாக்கியவதியுமான தேவமாதாவாகிய மரி யாளை நாங்கள் நினைவு கூருகிறோம். அம்மாதாவோடு கூட பரிசுத்தராகிய தீர்க்கதரிசிகளையும், பிரசங்கி களாகிய சிலீகன்மாரையும், சுவிசேஷகர்களையும், இரத்த சாட்சிகளையும், விசுவாச அறிக்கை செய்தவர் களையும், பாக்கியவானும் தன் எஜமானுக்கு முன்னேடியவனுமான யோவான் ஸ்நானகனையும் செம்மாசன்மாரில் பிரதானியும், இரத்த சாட்சிகளுக்கு முன்பனும், பரிசுத்தனும், மகத்துவமுள்ளவனுமாகிய தூய ஸ்தேவானையும், சிலீகன்மாரில் தலைவர்களாகிய உயர்ந்த தூய பேதுருவையும், தூய பவுலையும், மற்ற சகல பரிசுத்த புருஷர்களையும் ஸ்திரீகளையும் நாங்கள் ஒருமித்து நினைவு கூருகிறோம். அவர்களுடைய ஜெபங்கள் நமக்கு அரண்காப்பாக அமைய கர்த்தரிடம் ஜெபிப்போமாக !

சபை : குரியே — லாய்சோன் !

[புரோகிர் மௌண ஜெபத்திற்குப் பிறகு உரக்க ஏறெடுக்கும் ஜெபம்].

அசாத்தியமான காரியங்களையும் செய்யவல்ல கர்த்தாவே ! பரலோகத்தில் பெயர் பொறிக்கப்பட்டுள்ள முதற்பேறுனவர்களின்

கூட்டத்தோடு எங்களை இணைத்தருளும்! உம்முடைய திருச்சந்நிதானத்தில் அவர்கள் எங்களை நினைவு கூருவதற்காக நாங்கள் அவர்களை நினைவு கூருகிறோம். ஜீவித்து வாழ்கிறவர்களுடைய காவலுக்காகவும், கஷ்டப்படுகிற எங்களுடைய தைரியத்திற்காகவும், விசுவாசிகளாய் மரித்துப் போன எங்களுடைய பிதாக்கள், சகோதரர்கள், போதகர்கள் ஆகிய அனைவருடைய ஆறுதலுக்காகவும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் இந்த ஆன்மீக திருப்பலியில் அவர்கள் எங்களோடு பங்கு கொள்வார்களாக! நாங்கள் உமக்கும், உமது ஒரே பேறான குமாரனுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்றாயிருக்கிறவருமான உமது பரிசுத்த ஆவிக்கும் துதியும், தோத்திரமும் செலுத்துகிறோம்!

சபை: ஆமென்!

[உதவியாளர் தூப்தேன் V கூறும்பொழுது புரோகிதர் மௌனமாக ஏறெடுக்கும் தனி ஜெபம்]

கர்த்தாவே! பிரதம அத்தியட்சராயிருந்த யாக்கோபு முதல் இன்று வரை உமது சபையில் மெய்விசுவாசத்தை நிலை நாட்டியுள்ள உண்மையான அத்தியட்சர்கள் அனைவரையும் நீர் நினைவுகூருவீராக!

தூப்தேன் V.

உதவியாளர்; பாரக்மோர்! அப்போஸ்தலருடையதும், குற்றமற்றதுமான ஒரே விசுவாசத்தைக் காப்பாற்றி, எங்களுக்கு ஒப்படைத்த பரிசுத்தவான்களுடைய இடத்தில், தூய்மையோடு முன்கூட்டியே மரித்து இளைப்பாறிக் கொண்டிருப்பவர்களையும், நிசியாவிலும், கான்ஸ்டாண்டிநோபிளிலும், எபேசுவிலும், புண்ணியமும், பரிசுத்தமுமான மூன்று பொது புராகிதக் கூட்டங்களையும், அக்கூட்டங்களில் பங்கு கொண்ட நீதிமான்களும், போதகர்களும், போற்றபட்டவர்களும், தேவனைத் தரித்துக் கொடிருந்தவர்களுமாகிய எங்கள் பிதாக்களையும், எருசலேமின் முதல் அத்தியட்சரும், புண்ணியவானும், அப்போஸ்தலனும், இரத்த சாட்சியுமான யாக்கோபையும், இக்னேஷியஸ் கிளமெண்ட் டயாஸ்கோராஸ், தீமோத்தியாஸ், பீலக்ஸீனோஸ், அதனேஷியஸ், ஜூலியஸ், பெவிலியாஸ், கிரிகோரியாஸ், அந்திமோஸ், இவேனியாஸ் ஆகியவர்களையும், நம் மேசியாவாகிய கர்த்தர் ஏசுவின் அவதாரத்தைக் குறித்து வார்த்தையாகிய தேவன் எவ்வாறு மாமிசமானார் என்பதை விளக்கிக் காட்டிய உண்மைமிக்க, மேம்பாட்டில் உயர்ந்து பிரசித்திபெற்ற பரிசுத்த சிரிலையும் நினைவு கூருகிறோம். சிரியன் மாருடைய கிரீடமாகவும், தேவனின் பரிசுத்த சபை அனைத்தின் விவேகமுள்ள நாவாகவும், தூணாகவும், போதகராகவும், பூக்கள் நிறைந்த மேய்ச்சல் நிலமாகவும்

விளங்கிய எங்கள் மூதாளரும், மரியாள் சந்தேகமின்றி தெய்வமாதா என்று எப்பொழுதும் பிரசங்கித்தவரு மான மார் சேவேரியோஸையும், மெய் விசுவாசத்தை நிலைநாட்டிய நீதிமானும் பரிசுத்தனுமாகிய எங்கள் பிதா யாக்கோபு புர்தானுவையும், மார் எப்ரேமையும், மார் யாக்கோபையும், மார் ஈசாக்கையும், மார் பாலா யியையும், துக்கித்தவர்களில் முக்கியமானவர் களாகிய மோரான் மார் பர்சௌமாவையும், மார் சிமி யோன் தெஸ்தூணியையும், தெரிந்து கொள்ளப்பட்ட வராகிய மார் அபஹாயையும், அவர்களோடும், அவர் களுக்கு முன்பும், பின்பும் மாசற்ற ஒரே மெய் விசு வாசத்தைப் பாதுகாத்து எங்களுக்கு வழங்கிய அனைவரையும் நாங்கள் நினைவு கூருகிறோம். அவர் களுடைய ஜெபங்கள் நமக்கு பலத்த அரணாயிருக்க கர்த்தாவை நோக்கி நாம் மன்றாடுவோமாக!

சபை : குரியே-லாய் சோன் !

[புரோகிதர், மௌன ஜெபத்திற்குப் பிறகு உரக்க ஏறெடுக்கும் ஜெபம்.]

புறஜாதிகள், இராஜாக்கள், இஸ்ரவேல் புத்திரர் ஆகியவருக்கு முன்பாக உம்முடைய பரிசுத்த நாமத்தைத் தரித்துள்ள சிரேஷ்டர்கள், போதகர்கள் ஆகியோரின் உபதேசத்தை எங்களுடைய ஆத்துமாக் களில் நீர் ஸ்திரப்படுத்தியருளும்! எங்களை உபத்திரவப் படுத்துகிற வேத விபரீதங்களை நீர் விலக்கியருளும்! உமது பயங்கர சிங்காசனத்திற்கு முன்பாக குற்றமற்ற வர்களாக நிற்பதற்கு எங்களைப் பாத்திரவான்களாக்கி யருளும்! நீரே பரிசுத்தர்! பரிசுத்தவான்களைப் பரிசுத்தப்படுத்துபவரும் நீரே! உமக்கும், உமது ஒரே பேறான குமாரனுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத்தக்கவரும், ஜீவனைக் கொடுப் பவரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்றாயிருக்கிறவரு மான பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப் பொழுதும், என்றென்றைக்கும் துதியும், தோத்திரமும் இருப்பனவாக!

சபை : ஆமென்!

[உதவியாளர் தூப்தேன் VI கூறுகின்றபொழுது, புரோகிதர் மௌனமாக ஏறெடுக்கும் தனி ஜெபம்]

கர்த்தாவே! மெய் விசுவாசத்தில் முன்பு மரித்து சாந்தியடைந்தவர்களாகி, திருச்சபையின் எல்லா

வைதீகக் கூட்டத்தாரையும், அவர்கள் யாருக்காக குர்பானு அர்ப்பணித்திருக்கிறுர்களோ அவர்களேயும், இப்பொழுது இவ்விடத்தில், [பெயர் குறிக்கப்படுபவர் களேயும்] நீர் நினேவு கூருவீராக!

[இப்பொழுது புரோகிதர் பான பாத்திரம், அப்பத்தட்டு, தபலேத்தா, ஜெப புத்தகம், ஆகியவற்றின்மீது சிலுவை அடையாளம் வரைந்து, மரித்தவர்களின் பெயர்களே நினேவு கூருகிறுர்.]

தூப்தேன் VI

உதவியாளர்: பாரக்மோர்! சகல அரூபிகளுக்கும், சரீரிகளுக்கும் உடைமையாளரான பிதாவான தேவனே! இந்த பரிசுத்த ஸ்தலத்திலிருந்தும், இந்த திருச்சபையிலிருந்தும், எல்லா இடங்களிலிருந்தும் முன்பு மரித்துப்போன சகல விசுவாசிகளேயும், மெய் விசுவாசத்தில் மரித்து இளேப்பாறுகிறவர்களேயும், மெய் விசுவாசத்தில் உம்மை அடைந்தவர்களேயும், நாங்கள் நினேவு கூருகிறேம்! அவர்களுடைய ஆத்துமாக்களேயும், அரூபங்களேயும் தாம் ஏற்றுக்கொண்டு, தமது மிகுதியான கிருபையினுல் அவர்களுடைய குற்றங்கள் மன்னிக்கப்படவும், பாவங்கள் நீக்கப்படவும், அவர்களேப் பாத்திரவான்களாக்கி நம்மையும், அவர்களேயும் தமது பரலோக இராச்சியத்தில் சேர்த்துக்கொள்ளவும் நமது தேவனுகிய மேசியாவை நோக்கி ஜெபித்து மன்ருடி, குரியே லாய்சோன் என்று மும்முறை உரத்துச் சொல்வோமாக!

சபை: குரியே—லாய்சோன்!
குரியே—லாய்சோன்!
குரியே—லாய்சோன்!

[புரோகிதர் ஜெபத்திற்குப் பிறகு உரக்க ஏறெடுக்கும் ஜெபம்]

சகல அரூபிகளுக்கும், சரீரிகளுக்கும் உடைமையானவரான தேவனுகிய கர்த்தாவே! மெய் விசுவாசத்தோடு எங்களேவிட்டுப் பிரிந்துபோன அனேவரையும் நீர் நினேத்தருளும்! அவர்களுடைய சரீரங்களுக்கும், ஆத்மாக்களுக்கும், ஆவிகளுக்கும், இளேப்பாறுதல் அளித்து, நித்திய தண்டனேத் தீர்ப்பிலிருந்து அவர்களே இரட்சித்தருள்வீராக! உமது திருமுக ஒளி பிரகாசிக்கின்ற இடத்திலே அவர்களே சந்தோஷப்படுத்தியருளும்!

அவர்களுடைய பாவங்களை அழித்தருளும்! அவர்களுக்கு தண்டனைத் தீர்ப்பளிக்க பிரவேசியாதேயும்! உமது ஒரே பேறுன குமாரனைத் தவிர, உமது திருச்சபையின் சந்நிதியில் குற்றம் அற்றவன் எவனும் இல்லை! நாங்களும், எங்கள் மரித்தோரும் உமது கருணைக்கும், பாவவிமோசனத்திற்கும் பாத்திரவான்களாகும் பொருட்டு நாங்கள் அவரில் சரணடைகிறோம்.

சபை : கர்த்தாவே! மெய் விசுவாசத்தில் எங்களை விட்டு மரித்துப் போன அனைவருக்கும் இளைப்பாறுதலைத் தந்து, அவர்களைத் தூய்மைப்படுத்தியருளும்! நாங்களும் அவர்களும் மனதோடும், மனமில்லாமலும், அறிவோடும், அறிவில்லாமலும் உமது திருமுன்பாக செய்துள்ள சகல பிழைகளையும் நீர் மன்னித்தருள்வீராக!

[புரோகிதர் மௌனமாக ஏறெடுக்கும் தனி ஜெபம்]

தேவனே! நினைவாலும், சொல்லாலும், செயலாலும் உமது திரு முன்பாக இரகசியமாகவும், வெளிப்படையாகவும் செய்துள்ள சகல குற்றங்களையும் நீர் பரிகரித்து மன்னித்தருள்வீராக!

[மௌன ஜெபத்திற்குப் பிறகு உரக்க ஏறெடுக்கும் ஜெபம்].

கர்த்தாவே! எங்களுடைய வாழ்வின் முடிவைப் பாவமில்லாமல் பாதுகாத்தருளும்! எப்பொழுதோ, எங்கேயோ எவ்வாறோ உமது திருச்சித்தத்தின் படியே உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுடைய பாதங்களுக்குக் கீழே, எங்களுடைய பிழைகளால் வரும் அவமானம் இல்லாமல் எங்களைச் சேர்த்துக் கொள்ளும்! இதிலும், அனைத்திலும் சகல கனமும், துதியுமுள்ள உமது திரு நாமமானது, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திரு நாமத்தோடும், சகலத்திலும் பரிசுத்தமும், உத்தமமும், வந்திக்கப்படுவதும் ஜீவனைக் கொடுப்பதும், சாராம்சத்தில் உம்மோடு ஒரே தன்மையும் உள்ளதுமான பரிசுத்த ஆவியின் நாமத்தோடும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் மகத்துவப்பட்டு புகழப்படுவதாக!

சபை : ஆமென்! உமது திருநாமம் ஆதியில் இருந்தது போலவே இப்பொழுதும், தலைமுறை தலைமுறையாக எல்லா தலைமுறைகள் வரை, லோகா லோகங்கள் உள்ளளவும் நிலை நிற்கிறது!

புரோ : உங்களனைவரோடும் சமாதானம் இருப்பதாக!

சபை : *உமது ஆவியோடும் இருப்பதாக !*

[புரோகிதர் வலதுகையை அப்பத்தட்டு மீது வைத்து, இரகசியங்களிலிருந்து சக்தியைப் பெற்றுக்கொண்டு, தமக்கு சிலுவைக்குறியிட்டுக் கொண்டு, வடக்குப் பாகத்திலும் தெற்குப் பாகத்திலும் உள்ளவருக்கு நேராக சிலுவைக்குறி இட்டபிறகு, மேற்குப்பக்கம் திரும்பி, ஜனங்களுக்கு நேராக மும்முறை சிலுவைக்குறி வரைந்து]

புரோ : *சகோதரரே ! வல்லமையுள்ள தேவனும், நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கருணை உங்களனைவரோடும் இருப்பதாக !*

[பரிசுத்த ஸ்தலத்தின் குறுக்காக திரை இழுக்கப்படுகிறது. புரோகிதர் திரைக்குள்ளே பொருத்தமான ஜெபங்களோடு அம்சித்தலும் கலத்தலும் செய்கிறார். அந்த சமயத்தில் சபையார் ஒரு ஞானப்பாட்டைப் பாடுகிறார்கள்.]

அன்புடையோனே நின் வாசலில்.........அல்லேலூயா !
முட்டிடுதே தாசர் நாதம் ! ,.......... பாரக்கோர்/குரியே லாய்சோன் !
அவசியத்தால் யாசித்திடும் .... ,, ...
அடியாரைத் தள்ளிடாதீர் !..................... ,, ...
அளியுடன்சிட்சித்து அடியாரை .... ,, ...
கோபம் நீக்கிக் காத்திடுவீர் ! .... ,, ...
வாசல் திறந்து இப் பிரார்த்தனையின்......... ,, ...
நாதம் கேட்டு அருள்புரிவீரே ! .... ,, ...
உம்மை அழைக்கின்றோம் நாதா!....... ...... ,, ...
உம் உதவிக்காய் பலவீனர் .... ,, ...
நல்லோனே காருண்யத்தால் .... ,, ...
நல்கிடுவீர் யாசிப்புகளை ! .... ,, ...
கர்த்தாவே காருண்யத்தால் .... ,, ...
கனி (வு) அடியார்க்குக் காட்டிடுவீர் .... ,, ...
நன்மை நிறைந்தோனே எனது .... ,, ...
தீமைகளை நீர் நினையாதீர் ! .... ,, ...

[புரோகிதர் அப்பத்தைக் கையில் எடுத்து, அதைப்பிட்டு மௌனமாக ஏறெடுக்கும் ஜெபம்]

இந்தப்பிரகாரம், வார்த்தையாகிய தேவன் உண்மையாகவே, மாம்சத்தில் துன்பம் அனுபவித்து, சிலுவையிலே பலியாக பிட்கப்பட்டார். அவருடைய சரீரத்திலிருந்து அவருடைய ஆவி பிரிந்து போனாலும் V தமது தெய்வீகத்தன்மை தம்முடைய ஆவியிலிருந்தோ, சரீரத்திலிருந்தோ, சிறிதளவும் பிரிந்து போகவில்லை / /

தமது விலாவில் ஈட்டியால் குத்தப்பட்டார் —↓→ அதிலிருந்து சர்வலோகத்துக்கும் பாவபரிகாரமான ரத்தமும் நீரும் புறப்பட்டன.

—↓→ அவருடைய சரீரம் அதில் மூழ்கியது. சர்வலோகத்தின் பாவங்களுக்காக ⌊↑ திருமகன் சிலுவையில் மரித்தார். தமது ஆத்துமா கீழே வந்து, சரீரத்தோடு இணைந்து ←↑—இடது பக்கத்தில் நம்மை நடத்திச் செல்லும் வாழ்க்கையிலிருந்து வலப்பக்கம் ↑⌋ எங்களைத் திருப்பியது. அவர் தம் திருமேனியின் ஒப்புரவு உண்டாக்கினர். விண்ணுலகில் உள்ளவரை மண்ணுலகில் உள்ளவரோடும், தம் ஜாதியினரைப்புறஜாதிகளோடும், ஆத்துமாவைச்சரீரத்தோடும் இணைத்தார். பிறகு மூன்றும் நாள் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தார் ↑↓ ஏகனே இம்மானுவேல்! பிரிக்கமுடியாத இணைப்புக்குப் பிறகு இரண்டு தன்மைகளாகப் பிரிக்க இயலாது! இவ்வாறு நாங்கள் விசுவாசிக்கிறோம்; இவ்வாறு நாங்கள் அறிக்கையிடுகிறோம்; இவ்வாறு நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். இந்தச் சரீரம் இந்த ரத்தத்தினுடையது; இந்த இரத்தம் இந்த சரீரத்தினுடையது!

[புரோகிதர், அப்பத்தைத் தட்டில் வைத்து, ஒரு பாதி அப்பத்தைக் கையில் எடுத்து, அதை அழுத்திக் கூறுவது.]

சத்திய பிதாவே! கண்டாலும் உம்மைச் சாந்தப் படுத்துகிற இப்பலியாகிய உம் புத்திரன் எனக்காக மரித்ததினால், இதை நீர் அங்கீகரித்து, இதனால் எனக்குப் பாவ பரிகாரம் நல்குவீராக! என்னுடைய கைகளிலிருந்து இந்த குர்பானாவை நீர் அங்கீகரித்து, என்னோடு ஒப்புரவாகுவீராக! உம் மகிமைகளின் முன்பாக நான் செய்துள்ள பாவங்களை நினையாதிரும்! இதோ! துஷ்டர்களால் கொல்கதாவின் மேல் சிந்தப்பட்ட அவருடைய திரு ரத்தமானது எனக்காக மன்றாடுகிறது! அதன் நிமித்தம் என்னுடைய வேண்டுதலை நீர் ஏற்றுக் கொள்வீராக! நீர் சீர்தூக்கினீரானால், என்னுடைய கடன்கள் எவ்வளவு ஏராளம்! உமது கருணை எவ்வளவு அதிகமானது! உமது கருணை என் பாவத்தைவிட மிகவும் அதிகமானது! உம்மால் எடை போடப் பட்டிருக்கின்ற பர்வதங்களைக் காட்டிலும் உமது கருணை எடை மிகுந்திருக்கிறது!

[புரோகிதர், அப்பத்தின் மறுபாதியைக் கையில் எடுத்து, அதை அழுத்திக் கூறுவது.]

பாவங்களை நீர் கூர்ந்து கவனிப்பீராக! அவற்றிற்கான பலிகளையும் நீர் கூர்ந்து கவனிப்பீராக! ஏனென்றால் கடன்களைக் காட்டிலும் தகனபலியும், பலியும் மிகவும் சிரேஷ்டமானவை! நான் பாவம் செய்ததின் நிமித்தம் உம் நேசகுமாரன், ஆணிகளையும், ஈட்டியையும் சகித்தார்! என்மேல் உள்ள உமது கோபத்தைத் தணிப்பதற்கும், நான் ஜீவிப்பதற்கும் அவர் அடைந்த பாடுகள் போதுமே! எங்களுடைய இரட்சிப்புக்காகத் தமது புத்திரனைத் தந்தருளிய பிதாவுக்குத் துதி!

குருசின் மேல் மரித்து எங்கள் அனைவருக்கும் ஜீவன் நல்கிய குமாரனுக்கு வந்தனம்! எங்களுடைய இரட்சிப்பின் இரகசியத்தைத் தொடங்கிப் பூர்த்தி செய்த பரிசுத்த ஆவிக்கு தோத்திரம்! சகலத்திலும் மேலான திரித்துவமே! எங்கள் அனைவர் மேலும் கருணை காட்டுவீராக!

[புரோகிதர் அப்பத்தின் மறுபாதியைத் தட்டில் வைத்துவிட்டு, இடது கை விரல்களை நீரில் சுத்தி செய்து, அப்பத் தட்டை இடது கையில் எடுத்து, அதிலிருக்கும் சிறு துண்டை வலது கையில் எடுத்து, பான பாத்திரத்தில் தோய்த்து, மற்ற இரு அப்பத்துண்டுகளின் மேல் மூன்றுமுறை அதனுல் தொட்டுக் கூறுவது]

எருசலேமில் கொல்கதாவின் உச்சியில் எங்களுக்காக, விலாவில் குத்துண்ட தேவனுகிய மேசியா நீரே! லோகத்தின் பாவங்களை சுமப்ப வராகிய தேவ ஆட்டுக்குட்டி நீரே! நீர் எங்கள் கடன்களைப் பரிகரித்து, எங்களுடைய பாவங்களை மன்னித்து, உமது வலது பக்கத்தில் எங்களை நிறுத்தியருளும்!

லித்தானியா *(பொது மன்ருட்டு)*

உதவியாளர்: சகோதரரே!. தேவமாதாவாகிய பரிசுத்த கன்னி மரியாளைக் குறித்தும், பரிசுத்தவான்களைக் குறித்தும், மரித்துப்போன சகல விசுவாசிகளைக் குறித்தும் நன்கு நினைவு கூரும் பொருட்டு, எப்பொழுதும் கர்த்தரை நோக்கிப் பிரார்த்திப்போமாக!

சபை: *அவர்களுடைய ஜெபங்கள் நமக்கு அரண்காப்பாக அமைவன வாகுக! ஆமென்!*

உதவியாளர்: நம் ஆத்துமாக்களுக்காகவும், நம் மாதா பிதாக்கள், சகோதர சகோதரிகள், தலைவர்கள், போதகர்கள், மரித்துப் போனவர்கள் ஆகியோரின் ஆத்துமாக்களுக் காகவும், பரஸ்பரம் நம் ஒவ்வொருவருடைய ஆத்தமாக் களுக்காகவும் ஏராளமாக அனுக்கிரகங்களும் கருணை யும் உண்டாக, நாம் மேசியாவாகிய கர்த்தரை நோக்கி மன்ருடினேம். மீண்டும் அவரை வேண்டுகிறேம். எல்லாவற்றிற்கும் உடைமையாளராயிருக்கிற பிதா வாகிய தேவனை நாம் தோத்திரிக்கிறேம்; அவருடைய ஒரே பேருன திருக்குமாரனை வணங்குகிறேம்; அவருடைய ஜீவனுள்ள பரிசுத்த ஆவியை மகிமைப் படுத்துகிறேம்; கருணையுள்ள கர்த்தருடைய திருக் கரங்களில் நம்முடைய ஜீவன்களை ஒப்படைத்து அவருடைய அனுக்கிரகங்களுக்காக அவரைவேண்டிக் கொள்வோமாக!

சபை: உத்தமரே! எங்கள்மேல் கிருபை வைத்து, எங்களை ஆசீர்வதித்தருளும்!

[திரை தள்ளப்படுகிறது–புரோகிதர் உரத்த குரலில் ஏறெடுக்கும் ஜெபம்].

கேரூபீன்களால் புகழப்பட்டு, சேரூபீன்களால் "பரிசுத்தர்" என்று போற்றப்படுபவரே! ஆயிரமாயிரமாகவும், பதினாயிரம் பதினாயிரமாகவுமுள்ள ஞான சேனைகளால் புகழப்படுபவரே! பரிமள வாசனையாக உமக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ள பலிகளையும், பூரண பலன்களையும் சுத்திகரித்து, பரிபூரணப்படுத்துகிற எங்கள் கர்த்தராகிய இயேசு மேசியாவின் பிதாவாகிய தேவனே! தூய்மையான இருதயத்தோடும், வெட்கப்படாத முகத்தோடும் "பரமபிதாவாகிய தேவனே" என்று உம்மை நாங்கள் அழைத்து, பிரார்த்தித்து, பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே என்று கூறும்படி எங்கள் அனைவருடைய சரீரங்களையும், ஆத்துமாக்களையும், ஆவிகளையும் நீர் சுத்திகரித்தருள்வீராக!

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே !

சபை: உம்முடைய திருநாமம் பரிசுத்தமாக்கப்படுவதாக! உம்முடைய இராச்சியம் வருவதாக! உம்முடைய திருச்சித்தம் பரமண்டலத்தில் இருப்பது போல பூமியிலும் இருப்பதாக! எங்களுக்குத் தேவையான அப்பத்தை இன்று எங்களுக்குத் தாரும். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னித்ததுபோல எங்களுடைய கடன்களையும், பாவங்களையும் எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கச் செய்யாதேயும். தீமையாளனிடமிருந்து எங்களை இரட்சித்தருளும். ஏனெனில் இராச்சியமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே! ஆமென்!

புரோ: தேவனாகிய கர்த்தாவே! தாங்கமுடியாத சோதனைக்குள் எங்களைப் பிரவேசிக்கச் செய்யாதேயும்! சோதனையை விலக்கி தீமையாளனிடமிருந்து எங்களை இரட்சித்தருளும்! உமக்கும், உமது ஒரே பேறான குமாரனுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத்தக்கவரும், ஜீவனைக் கொடுப்பவரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்றாயிருக்கிறவருமான பரிசுத்த ஆவிக்கும் நாங்கள் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும், துதியும், தோத்திரமும் செலுத்துகிறோம்!

சபை: ஆமென்!

புரோ: உங்களனைவரோடும் சமாதானம் இருப்பதாக!

சபை: உமது ஆவியோடும் இருப்பதாக!

உதவி
யாளர்: அர்ப்பணிக்கப்பட்டுள்ள இந்த பரிசுத்த இரகசியங்களை நாம் பெற்றுக்கொள்வதற்குமுன், கிருபை நிறைந்த கர்த்தருக்கு முன்பாக நாம் தலைகுனிவோமாக!

சபை: எங்களுடைய கர்த்தாவே! எங்கள் தேவனே! உமக்கு முன்பாக நாங்கள் தலைவணங்குகிறோம்!

புரோ: கர்த்தாவே! உம்முடைய ஏராளமான கிருபைகளுக்காக எதிர்நோக்கியுள்ள உம் அடியார்கள் தங்கள் தலைகளை உமக்கு முன்பாகத் தாழ்த்தியிருக்கிறார்கள். கர்த்தாவே! உம்முடைய ஆசீர்வாதங்களை அனுப்பி, எங்களனைவருடைய சரீரங்களையும், ஆத்துமாக்களையும், ஆவிகளையும் தூய்மைப்படுத்தியருளும்! எங்கள் இரட்சகராகிய மேசியாவின் ஜீவனளிக்கும் இரகசியங்களில் பங்கு பெற எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்! உமக்கும், உமது ஒரே பேறான குமாரனுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத்தக்கவரும், ஜீவனைக் கொடுப்பவரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்றாயிருக்கிறவருமான பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும் என்றென்றைக்கும் துதியும், தோத்திரமும் உண்டாகுக!

சபை: ஆமென்!

புரோ: உங்களனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக!

சபை: உமது ஆவியோடும் இருப்பதாக!

[புரோகிதர், வலது கையைப் பான பாத்திரத்தின்மேல் வைத்து, இரகசியங்களிலிருந்து சக்தியைப் பெற்றுக்கொண்டு, தம்மீது சிலுவைக் குறியிட்டுக் கொண்டு, வடக்கு பாகத்திலும், தெற்கு பாகத்திலும் உள்ளவருக்கு நேராக சிலுவைக் குறியிட்ட பிறகு, மேற்குப் பக்கம் திரும்பி, அனைவருக்கும் நேராக மும்முறை சிலுவைக்குறி வரைந்து கூறுவது]

பரிசுத்தமுள்ளதும், மகத்துவமுள்ளதும், சிருஷ்டிக்கப்படாததும், சுயம்புவானதும், ஆதியும் அந்தமும் இல்லாததும், வந்திக்கப்படத் தக்கதும், சாராம்சத்தில் ஒரே தன்மையுடையதுமான திரித்துவத்தின் கிருபையும், கருணையும் சகோதரரே! உங்களனைவரோடும் கூட என்றென்றும் இருப்பனவாக!

சபை: ஆமென்!

உதவியாளர்: பாரக்மோர்! பயத்தோடும், நடுக்கத்தோடும் நாம் கூர்ந்து கவனிப்போமாக!

சபை: கர்த்தாவே! எங்கள் மேல் கருணை வைத்து எங்களை அனுக்கிரகித்தருள்வீராக!

[புரோகிதர் அப்பத்தட்டை மேலே உயர்த்தி]

இந்தப் பரிசுத்த இரகசியங்கள், பரிசுத்தமும் தூய்மையும் உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படுகின்றன.

சபை : பரிசுத்தராகிய பிதா, பரிசுத்தராகிய குமாரன், பரிசுத்தராகிய ஆவியானவர் தவிர, பரிசுத்தர் எவருமில்லை ! ஆமென் !

[புரோகிதர், தட்டை அதன் இடத்தில் திரும்பவைத்துவிட்டு, பாத்திரத்தை எடுத்து உயர்த்துகிறார்.]

சபை : ஒன்றாயிருக்கிற பிதாவுக்கும், குமாரனுக்கும், ஜீவனுள்ள பரிசுத்த ஆவிக்கும் என்றென்றைக்கும் துதி உண்டாவதாக ! — ஆமென் !

[புரோகிதர் அப்பத்தட்டை வலதுகையிலும், பானபாத்திரத்தை இடது கையிலும் எடுத்து, வலதுகையை இடது கைக்கு மேல் சிலுவைபோல் குறுக்காகப் பிடித்துக் கூறுவது.]

புரோ : தமது கிருபையால் உலகத்தைச் சிருஷ்டித்த ஒரே பிதாவானவர் நம்மோடு இருக்கிறார் !

சபை : ஆமென் !

புரோ : தமது திருமேனியின் மதிக்க முடியாத பாடுகளால் லோகத்தை இரட்சித்தவராகிய பரிசுத்த ஏகசுதன் நம்மோடு இருக்கிறார் !

சபை : ஆமென் !

புரோ : சிருஷ்டிக்கப்பட்டவையும், இனி சிருஷ்டிக்கப்படுபவையும் ஆகிய சகலத்தையும் பரிபூரணப்படுத்தி நிறைவேற்றுகிற ஜீவனும், பரிசுத்தமும் உள்ள ஒரே ஆவியானவர் நம்மோடு இருக்கிறார் ! கர்த்தருடைய திருநாமம் ஆதி முதற்கொண்டு சதா காலமும் வாழ்த்தப்படுவதாக !

சபை : ஆமென் ! நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருக்கவேண்டுமென்று, தாங்கள் உலகில் இருந்தபொழுது நமக்குப் போதித்த நம் பிதாக்களை, குர்பானாக்களிலும், ஜெபங்களிலும் நினைவு கூருவோமாக ! அழியாத பரலோக இராஜ்யத்தில் நீதிமான்களோடும், பரிசுத்தவான்களோடும் தேவகுமாரன் அவர்களுக்கு இளைப்பாறுதல் அருளுவார் ! கர்த்தாவே ! கிருபை வைத்து எங்களுக்கு உதவி செய்தருளும் !

[புரோகிதர் அப்பத்தட்டையும், பாத்திரத்தையும் மூடி, "பதவி" யிலிருந்து கீழே இறங்கி, பலிபீடத்தின் முன்னால் நின்றுகொண்டு, தூபம் வைத்து குக்கிலியோன் கூறுதல்.]

1. தேவ மாதா

புரோ : *நின்னருள் துதியொடு ராஜன் மகள் – அல்லேலூயா !*
அல்லேலுயா !

நின்வலமாய் ராஜபுத்திரிதான் !

சபை : *உன் அழகில் அரசன் மோகிக்க – அல்லேலூயா !*
அல்லேலூயா !

உன் சொந்த ஜனம் தாதைவீடு மறந்துவிடு !
பாரக்மோர் !

புரோ : துதி தாதைக்கும், சுதனுக்கும், தூய்மை ஆவிக்கும் !

சபை : ஆதிமுதல் இப்போதும், எப்போதைக்கும், என்றைக்கும் !
ஆமென் !

பக்தர் புகழத் தகுந்தவளே!
உன்னில் உதித்த ஏக சுதன்
திரு இதயம் எங்கள்பால் உருக
வேண்டுதல் அவர் பால் செய்திடுக!
ஸ்தோமென் காலோஸ் - குரியே - லாய்ஸோன்.

மன்னன் மகளுக்கே சமாதானம்
வந்தீந்தான் மகாதூதன்
உன்னோடுதான் என் மாபெருநாதன்
உதயமுமே உன்னில்தான்! பாரக்மோர் !

புரோ : துதி தாதைக்கும், சுதனுக்கும், தூய்மை ஆவிக்கும் !

சபை : *அகில உலகாதிபரை நாயகராய் ஏற்றிப்போற்றி*
மிகமகிமைப் படுத்தினள் மரியாள்.
வலிய படகாய்தான்,
மொரியோ ராகேம் மேலயின் ஊஆதாறைன்
மோரான் ஏசு உம் குரிசும்
மாதாமரியாள் வேண்டுதலும்
அடிகளையும் உம் கோபத்தின்
கோல்களையும் நீக்கிட வேண்டும்.

2. பரிசுத்தவான்கள்

புரோ : நீதிமான் பனைபோல் தழைத்திடுவான்-அல்லேலூ யா!
வளர்ந்திடுவான் லிபானோன் கேதுருபோல்,
முதுமையிலும் துளிர்விட்டுத் தழைத்திடுவான் -
அல்லேலூ யா!
விருத்திக்கும் அவர்க்கு மகிழ்ச்சியும் செழிப்பும் -
பாரக்மோர்!

புரோ : துதி தாதைக்கும், சுதனுக்கும், தூய்மை ஆவிக்கும்!

சபை : ஆதி முதல் இப்போதும், எப்போதும், என்றைக்கும்-
ஆமென்!

நிலவுதே இங்கும் மார் தோமா
உளதே அங்கும் உம் நினைவு
உதவுக உமது பிரார்த்தனை - உம்
நினைவை மகிமை செய்தோர்க்கே!
ஸ்தோமென் காலோஸ் - குரியே - லாய்ஸோன்!
பிரார்த்தனையின் சமயமிதே மார் தோமா
மரபே போல் நின் ஆயத்
தலைவராய் ஜெபித்திடுவீர் !
இன்ப மெழும் உம் பாட்டைக் கேட்டு உன்னிக்கும்
ஆடுகளை மோசேபோல் திருக்கரத்தால் வாழ்த்திடுவீர்!
- பாரக்மோர் !

புரோ : துதி தாதைக்கும், சுதனுக்கும், தூய்மை ஆவிக்கும்!

சபை : உம்மை ஏற்ற தாதனுக்கும் - மார் தோமா
உம் நினைவை மகிமை செய்த சுதனுக்கும்-தோத்திரம்!
வந்தனைக்குரியோர் உம்மை முடிசூடும் தூய ஆவி
உம் பிரார்த்தனை கிருபையைத் தருக
எங்கெட்கென்றும்
மொரியோ ராகேம் மேலயின் ஊவாதாறைன்!
பரிசுத்தவான்களே நீங்கள்
பிரார்த்திப்பீர் கர்த்தாவினிடம்
அடிகளையும் தம் கோபத்தின்
கோல்களையும் நீக்கிடவேதான்!

3. புரோகிதன்மார்

அணிவார் நீதியை நும் ஆசாரியன்மாரும்
மகிமையை உம் நீதிமான்களும் – அல்லேலூயா !
—அல்லேலூயா !
நீர் அபிஷேகித்தோன் முகம் புறக்கணியாதீர்
உம் தாசன் தாவீதின் மூலம்

உம் புத்திரன்மார் காத்திடுவரெனில் - அல்லேலூயா !
—அல்லேலூயா !
என் நியமத்தையும் நான் உபதேசிக்கும் இச்சாட்சியையும்—
பாரக்மோர் !

புரோ : துதி தாதைக்கும், சுதனுக்கும், தூய்மை ஆவிக்கும் !

சபை : ஆதிமுதல் இப்போதும், எப்போதும், என்றைக்கும் !
ஆமென் !

தூய சுத்தியுடன் பரிசுத்த ஸ்தலத்தில்
ஸ்பரிசித்துள்ள பாதங்கள்
பரதீசின் வாயில் புகுந்து
வானவருடன் வசித்தல் வேண்டும்
ஸ்தோமென்-காலோஸ்-குரியே-லாய்சோன்
தம் கைவினையாம் ஆதாமை
தேவன் அமர்ந்து பார்வையிட்டார் !
தோப்பாம் பரதீசின் உள்ளே
சிருஷ்டிகரோடு நிகராம் சிருஷ்டி !
தருக்களுக் கிடையில் சுயமாய்
உலவித்திரிவதை அவர் கண்டார் !
மண்ணின் மகிமையை
விண்ணவரெல்லாம் வியந்தார் ! பாரக்மோர் !

புரோ : துதி தாதைக்கும், சுதனுக்கும், தூய்மை ஆவிக்கும் !

பூர்வா சாரியத்துவம் பெற்ற
ஆரோன் மோசேயொடு சேர்ந்தார்
ஸ்கரியாவுக்கு அது ஈந்தார் மோசே !
ஸ்கரியா யோவானுக்(கு) ஈந்தார்
யோவான் கர்த்தருக்கு ஈந்தான்
கர்த்தர் சீடருக்கு ஈந்தார்
எல்லா ஜாதியர்க்கும் ஈந்தார்களே சீடர்கள் !
மொரியோ ராகேம் மேலயின் ஊ வா தா ஹறன் !

மகுடம் வனைந்து எழில் தகட்டில்
பலிபீடத் திலிருக் கின்றதே !
நிர்மலராய்ப் பணி புரியும்
ஆசாரியர் அதனைப் பெறுவார் !

4. மரித்தோர்

மக்களுக் கப்பன் கிருபை செய்வதுபோல-அல்லேலூயா !
பக்தருக்கும் தேவன் கிருபை செய்வார்
புல்லினைப்போல நரரின் நாட்கள்-அல்லேலூயா !
பூக்கிருன் வயலில் பூச்செடிபோல்-பாரக்மோர் !

புரோ : துதி தாதைக்கும், சுதனுக்கும், தூய்மை ஆவிக்கும் !

சபை : ஆதிமுதல் இப்போதும், எப்போதும், என்றைக்கும்! ஆமென்!
அடைக்கலமாகி உம் கிருபையில்
மரணமடைந்து கல்லறையில்
துயின்றிடும் அடியார் உத்யானம் வர
உம் ஜீவக்குரலால் அழைத்திடுவீர் ! ஸ்தோமென்
காலோஸ் குரியே-லாய்சோன் !
ரட்சகரே உம் காயத்தைப் பட்சித்தும்—உம்
விலைமதியா இரத்தக் காசா பானம் செய்தும்
மரணமடைந்தோரை நாசம் நீக்கி வாழ்வித்தும்
அணிவீர் உம்மை நோக்கும் அவர்க்கு ஜோதி !
பாரக்மோர் !

புரோ ; துதி தாதைக்கும், சுதனுக்கும், தூய்மை ஆவிக்கும் !

சபை : மரித்தோர் உயிர்த்திட எழுந்தருளும் ராஜன்
முகில் அழகின்மேல் ஆரவாரிப் போராகிறுர் !
நீதிமான்கள் தம்முன் எக்காள நாதம் தான்கேட்டு
அங்கி அணிந்து வரவேற்கவேதான் போகிறுரே !
மொரியோ ராகேம் மேலயின் ஊ வாதா றைன் !
குரிசின் மேலே கர்த்தாவே !
கள்வன் பெற்ற உமது வரம்
திரித்துவம் தன்னைக் கொண்டாடி
மரித்தோருக்கும் கிடைத்திடவேண்டும் !

புரோ : (மேற்கு முகமாகத் திரும்பி)
என் சகோதரரே ! எனக்குப் பிரியமானவர்களே !
எனக்காக ஜெபியுங்கள்.

[புரோகிதர் கிழக்கு முகமாகத் திரும்புகிறுர். பரிசுத்த ஸ்தலத்திற்குக் குறுக்கே திரை இழுக்கப்படுகிறது. புரோகிதர் பலிபீடத்தின் அடியில் சாஷ்டாங்கமாக ஒரு ஜெபம் செய்கிறுர். பிறகு எழுந்து அந்த பதவிமேல் ஏறி திருபாத்திரங்களைத் திறந்து, திருச் சரீரத்தையும், திரு ரத்தத்தையும் உட்கொள்ளும் பொழுது ஏறெடுக்கும் ஜெபங்கள்]

சாஷ்டாங்க ஜெபம்

என் கர்த்தாவே ! பரிசுத்தத்தோடு உம்மை உட்கொள்ளுவதற்கு என்னைப் பாத்திரவானுக்கியருளும் ! உமது பரிசுத்த சரீரத்தை உட்கொள்ளுவதினுல் என்னுடைய தீய ஆசைகள் நசுக்கப்படவும், உமது ஜீவனுள்ள இரத்தத்தைப் பானம் செய்வதினுல் என்னுடைய தீமையான விருப்பங்கள் அழிக்கப்படவும் அருள் புரிவீராக ! எங்கள்

கர்த்தாவும் என்றைக்கும் எங்கள் தேவனுமாகியவரே ! என்னுடைய கடன்களின் பரிகாரத்திற்கும் பாவ விமோசனத்திற்கும் என்னைத் தகுதி யாக்கியருளும்!

(அல்லது)

தேவனுகிய கர்த்தாவே ! உமது பரிசுத்த சரீரத்தால் எங்களுடைய சரீரங்கள் சுத்தமாக்கப்படுவதற்கும், பாவ பரிகாரம் செய்கிற உமது திரு ரத்தத்தால் எங்கள் ஆத்துமாக்கள் பிரகாசப்படுவதற்கும் எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும் ! எங்கள் கர்த்தாவும், என்றைக்கும் எங்கள் தேவனுமாகியவரே ! எங்களுடைய கடன்களின் பரிகாரத்திற்கும் பாவ விமோசனத்திற்கும் எங்களைத் தகுதியாக்கியருளும் !

அல்லது)

தேவனுகிய கர்த்தாவே! உமது பரிசுத்த சரீரத்தைப் புசிப்பதற்கும், பாவபரிகாரம் செய்கிற உமது திரு ரத்தத்தைப் பானம் செய்வதற்கும் எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும் ! எங்கள் கர்த்தாவும், என்றைக்கும் எங்கள் தேவனுமாகியவரே ! சிரேஷ்டமான உமது திரு விருப்பத்தின்படி நடந்து உம்மை மகிழ்வித்த அனைவரோடு கூட உமது பரலோக ராஜ்யத்தில் எங்களை உரிமையுள்ளவர்களாக்கியருளும் !

[பிறகு புரோகிதர் ''பதவி''மேல் ஏறி, திருப்பாத்திரங்களைத் திறந்து திருச்சரீரத்தையும் திரு ரத்தத்தையும் உட்கொள்ளும் பொழுது ஏறெடுக்கும் ஜெபங்கள்]

[திருபாத்திரத்தின் மூடியை நீக்குகிறுர். பானபாத்திரத்திலிருந்து திருச் சரீரத்தை எடுத்துக்கொண்டு]

பூமியின் எல்லைகளைத் தாங்கிக் கொண்டிருப்பவரே ! நான் என் கைகளில் எடுக்கிறேன். ஆழங்களை ஆள்பவரே ! நான் என் கைகளில் ஏந்திக் கொண்டிருக்கிறேன். தேவனுகிய கர்த்தாவே ! உம்மை நான் என் நாவில் வைக்கிறேன். அழியாத அக்கினியிலிருந்து என்னை நீர் இரட்சித்தருளும் ! எங்கள் கர்த்தாவும், என்றைக்கும் எங்கள் தேவனுமாகியவரே ! பாவியாகிய ஸ்திரீயையும், கள்ளனையும் போல என்னையும் பாவ விமோசனத்திற்குப் பாத்திரவானுக்கியருளும் !

[திருச்சரீரத்தை உட்கொள்ளும் பொழுது]

பாவங்களைப் பரிகரிக்கும் அக்கினியாகிய நம்முடைய தேவனுகிய மேசியாவின் திருச்சரீரமும், திரு ரத்தமும் என்றென்றைக்கும் இகபரமிரண்டிலும் என் கடன்களின் பரிகாரத்திற்கும் பாவ விமோசனத்திற்கும், பலவீனனும், பாவியுமாகிய அடியவனுகிய எனக்கு நல்கப் படுகிறது.

[திரு ரத்தத்தை அருந்தும் பொழுது]

எங்களை இரட்சிக்க வந்த தேவனும், வார்த்தையுமான, இயேசுவே! சிலுவையில் சிந்தியதும், ஜீவனுள்ளதும், ஜீவனை அளிப்பதுமாகிய உமது திரு ரத்தத்தால் என்றென்றைக்கும் என் கடன்களைப் பரிகரித்து, என் பாவங்களை மன்னித்தருள்வீராக !

[பிற புரோகிதர்கள் இருப்பின், அவர்களுக்குப் பரிமாறும் பொழுது]

பாவங்களைப் பரிகரிக்கும் அக்கினியாகிய நம்முடைய தேவனுகிய மேசியாவின் திருச்சரீரமும், திரு ரத்தமும் என்றென்றைக்கும், இகபர மிரண்டிலும் கடன்களின் பரிகாரத்திற்கும், பாவ விமோசனத்திற்கும் இந்த புரோகிதருக்கு நல்கப்படுகிறது.

[சபையாருக்குப் பரிமாறும் பொழுது]

பாவங்களைப் பரிகரிக்கும் அக்கினியாகிய நம்முடைய தேவனுகிய மேசியாவின் திருச்சரீரமும், திருரத்தமும் என்றென்றைக்கும், இகபர மிரண்டிலும் கடன்களின் பரிகாரத்திற்கும், பாவ விமோசனத்திற்கும் இந்த உண்மை விசுவாசிக்கு நல்கப்படுகிறது.

உதவியாளர்: நாம் உரக்கவே சொல்லுவோமாக !

சபை : பிதாவும், சுதனும், பரிசுத்த ஆவியானவரும் வணங்கப்படத் தக்கவர் ! துதிக்கப்படத்தக்கவர் ! ஆதிமுதல் தலைமுறை தலைமுறைவரை அவர்க்குத் துதி ! அல்லேலூயா !

பரிசுத்த இரகசியங்களின் பவனி

[திரை இழுக்கப்படுகிறது—புரோகிதர் வலது கையில் அப்பத்தட்டும் இடது கையில் பானபாத்திரமும் ஏந்தி, இடது பக்கமாக மேற்கு திரும்பி 'பதவி'' மேல் நின்று]

புரோ: எங்களுடைய இரட்சிப்புக்காக வந்தவரும், எங்களுடைய உயிர்த்தெழுதலுக்காகவும், என்றைக்கும் எங்கள் மனித வர்க்கம் புதுப்பிக்கப்படவும், வரப்போகிறவருமான தேவ குமாரனே ! பாவபரிகாரம் தருகிற உமது பலிபீடத்திலிருந்து உம் அடியாருக்கு பாவபரிகாரம் இறங்கி வரவேண்டுமே !

சபை : ஆமென் !

புரோ: எங்கள் கர்த்தரும், என்றைக்கும் எங்கள் தேவனுமானவரே ! காணப்படாத உம் வலது சரத்தை நீட்டி, கடன்களின் பரிகாரத்திற்காகவும், பாவ விமோசனத்துக்காகவும், உமது சந்நிதானத்தில் உள்ள முகப் பிரசன்னத்திற்காகவும் உமது விலையேறிய திருச்சரீரத்தையும், திரு ரத்தத்தையும் உட்கொண்டு உம்மை ஆராதிக்கிற இந்தத் திருச்சபையை நீர் ஆசீர்வதிப்பீராக!

சபை : ஆமென்!

[புரோகிதர் ''பதவி'' யிலிருந்து இறங்கி நடந்து]

வல்லவரும் நம் இரட்சகருமான இயேசுமேசியாவான தேவனின் கருணைகள் இப்பரிசுத்த இரகசியங்களை ஏந்தியுள்ளவர்கள் மேலும், இவற்றைக் கொடுக்கிறவர்கள் மேலும், இவற்றை உட்கொள்ளுகிற வர்கள் மேலும், சிரமப்பட்டு இவற்றில் பங்கு கொண்டவர்கள், பங்கு கொள்ளுகிறவர்கள் அனைவர் மேலும் இருப்பனவாக! தேவனுடைய கிருபை, நம்மீதும்; அவர்கள் மீதும் இரண்டு லோகங்களிலும் என்றென் றைக்கும் இருப்பதாக!

[இப்பொழுது புரோகிதர் வலதுகையை இடது கைக்குமேல் சிலுவை போல குறுக்காக வைத்துக்கொள்ளுதல்]

சபை : கர்த்தாவே! எங்கள்மேல் இரக்கமாயிரும்! எங்கள் கர்த்தாவே! எங்கள் மேல் கிருபை வைத்து இரக்கமா யிரும்! எங்கள் கர்த்தாவே! உத்தரவு அருளி எங்கள் மேல் இரக்கமாயிரும்! எங்கள் கர்த்தாவே! உமக்கே துதி! எங்கள் கர்த்தாவே! உமக்கே துதி! என்றைக்கும் எங்களுக்கு அடைக்கலமானவரே! உமக்கே துதி! பாரக்மோர்!

தேவனுக்கே உன்னத்தில் துதி
தேவமாதாவுக்கு உன்னதமும்
மகிமையின் மகுடம் சகநேர்க்கும்
மரித்தோர்க்குக் கருணையும் உளவாக ! அல்லேலூயா!

[புரோகிதர் பரிசுத்த இரகசியங்களைத் தம் கரங்களில் முன்னோக்கி யும் மேல் நோக்கியும் உயர்த்திக் கொண்டு]

எங்கள் கர்த்தாவும் என்றைக்கும் எங்கள் தேவனுமானவரே! உமக்கே துதி! உமக்கே துதி! உமக்கே துதி! எங்கள் கர்த்தராகிய இயேசு மேசியாவே! நாங்கள் புசித்துள்ள உமது பரிசுத்த சரீரமும், நாங்கள் பருகியுள்ள, பாவ பரிகாரம் செய்யும் உமது திரு ரத்தமும் எங்களுடைய நியாயத்தீர்ப்புக்கும் தண்டனைக்கும் அமையாமல், எங்களனைவரின் ஜீவனுக்கும் இரட்சிப்புக்கும் அமைவனவாக! எங்கள் மேல் இரக்கம் வைத்தருள்வீராக!

[புரோகிதர் கிழக்கு முகமாகத் திரும்பி பலிபீடத்திற்குப் போய் இரகசியங் களைப் பீடத்தின் மேல் வைக்கிறார்]

சபை : பூமியனைத்தும் உம்முன் தாழ்ந்து உம்மை வணங்கும் !
ஒவ்வொரு நாவும் உமது பரிசுத்த நாமத்தைத் துதிக்கும்!
ஏனென்றால் நீரே மரித்தோரை எழுப்புகிறவர்!

கல்லறையில் வைக்கப்பட்டுள்ளோருக்கு நன்னம்பிகை
யானவரும் நீரே!
கர்த்தாவே உம்மை நாங்கள் விசேஷமாகத் துதிக்கிறோம்!
எங்கள்மீது உமக்குள்ள கிருபைக்காக நன்றி செலுத்துகிறோம்!

அல்லது

பூலோகம் அனைத்தும் வணங்கும் உம்மை!
அனைத்து நாவுகள் துதிபாடும்!
மரணமடைந்தோர்க்கு சரணம் நீரே !
மரித்தோர் உயிர்த்தலும் நீர் தாமே !

நன்றி வழிபாட்டு ஜெபம்.

புரோ : உமது மிகுந்த கிருபையினால் இந்த பரலோக மேஜையில் நாங்கள் பங்கு கொள்ள எங்களைப் பாத்திரவான்களாக்கிய உம்மை, நாங்கள் தோத்திரிக்கிறோம்! என் கர்த்தாவே! இந்த பரிசுத்த இரகசியங்களை நாங்கள் பெற்றுக் கொண்டதினால், நாங்கள் தண்டனைக்குள் வராதபடி, உமது பரிசுத்த ஆவியோடு உள்ள சம்பந்தத்திற்கு எங்களைப் பாத்திரவான்காளாக்கி யருளும்! ஆதி முதற்கொண்டு இருந்த சகல பரிசுத்தவான் களோடு நாங்கள் எங்கள் பங்கையும் உரிமையையும் பெற்றுக் கொண்டு உமக்கும், உம்முடைய ஒரே பேறான குமாரனுக்கும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத்தக்கவ ரும், ஜீவனைக் கொடுப்பவரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்று யிருக்கிறவருமான பரிசுத்த ஆவிக்கும் நாங்கள் இப் பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் மகிமையையும், துதியையும் செலுத்த எங்களைப் பாத்திரவான்களாக்கி யருளும் !

சபை : ஆமென் !

புரோ : உங்களனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக !

சபை : உமது ஆவியோடும் இருப்பதாக !

உதவியாளர் : கொடுக்கப்பட்ட இப்பரிசுத்த இரகசியங்களை ஏற்றுக் கொண்டபிறகு, கிருபையுள்ள கர்த்தருக்கு முன்பாக நாம் மீண்டும் தலை வணங்குவோமாக !

சபை : எங்கள் கர்த்தாவே ! எங்கள் தேவனே ! உமக்கு முன்பாக நாங்கள் தலைவணங்குகிறோம் !

புரோ : எங்கள் மனுஷ ஜாதியின் இரட்சிப்புக்காக உம்மையே தாழ்த்தி, பரத்திலிருந்து இறங்கி வந்த வல்லமையான, அதிசய மான தேவனே ! நாங்கள் உம்மையும், உம்மைப் பெற்றெடுத்த

பிதாவாகிய தேவனேயும், சகலத்திலும் பரிசுத்தரும், உத்தமரும், வந்திக்கப்படத்தக்கவரும், ஜீவனேக் கொடுப்பவரும், சாராம்சத்தில் உம்மோடு ஒன்ருயிருக்கிறவருமான பரிசுத்த ஆவியையும் மகிமைப் படுத்தும் வண்ணம் எங்கள்மேல் கிருபையும் அன்பும் வைத்தருளும் !

சபை : ஆமென் !

உதவியாளர் : பாரக்மோர் !

(1)

தோத்திரம் சகலமும் நாவுகள் எல்லாம் சொல்லும்
நாங்கள்
உம் தாதனுக்கும் விமல ஆவிக்கும் துதிபாடிடுவோம்
என் கர்த்தாவே ! உம் உடல் அருந்திய இப்பாவிகளின்
துர்க்கிரியை அனேத்தும் மன்னித்தருள்வீர் !

(2)

கழுவிடுவீர் கறைகளே எல்லாம் திருஈசோப்பால்
நினேயாதீரே கர்த்தாவே ! நீர் எங்கள் பிழைகள்
சோகம் நிறைந்த லோகத்தின் வாசம் விட்டுப்பிரிந்தோர்க்கு
ஈறுக உவகை சோபனமான சாசுவத வீட்டில்.

(3)

நோயுற்ருேர்க்கு நலம் ஈந்திடுவீர் — இளேத்தோர்க்கு
சேமம் நல்கி பலமற்றவரைத் தாங்கிடுவீரே !
பசியுற்ருேர்க்கு திருப்தியளிப்பீர்! திருசம்பத்தால்
தீனர்களுக்கும் கதியற்ருேர்க்கும் நிதி அருள்வீரே !

(4)

நிர்மல மாதா கன்னிகை மரியாள், உம் அவதாரம்
மண்ணகமெங்கும் முன்னறிவித்த நிபியன்மாரும்
நீதியின் சூரியன் அருகினில் நடு மத்யானத்தில்
மின்னும் தாரகையர்ம் யோவானும் பிரார்த்திக்கின்ருர்.

(5)

புரோ : கருணே நிறைந்தவராம் தாதா !
நிகரில்லா கருணே சாகரமே !
இன்றைய நாளில் அர்ப்பணித்த
திருப்பலியை நீர் ஏற்றருள்க !

(6)

வாழ்த்துவீர் எங்களை இயேசுவே !
காத்திடுவீர் எம்மை சிருஷ்டிகரே !
கர்த்தாவே துணை யானவரே !
காண்பிப் பீரே ஜீவ வழி !

சபை : கர்த்தாவே ! இத்திருப் பலியில்
திருவுள்ளம் உவகை கொண்டு
மரித்தவிசு வாசிகள் தூய்மைபெற்று
தூதர் ஆனந்திக்க வேண்டும் !

புரோ : (இறுதி ஆசீர்வாதம்)

என் சகோதரரே! அன்பானவர்களே ! கர்த்தருடைய பரிசுத்தப் படுத்தும் பலிபீடத்திலிருந்து நீங்கள் பெற்றுக்கொண்ட வழிக்குரிய போஜனங்களோடும், ஆசீர்வாதங்களோடும், பரிசுத்தமும் மகத்துவமும் உள்ள திரித்துவத்தின் கிருபைக்கும், கருணைக்கும், உங்களை ஒப்புவிக்கும் இந்த நேரத்தில் நீங்கள் சமாதானத்தோடு செல்வீர்களாக !

சபை : ஆமென் !

புரோ : கர்த்தரின் வெற்றிச் சிலுவையால் இரட்சிக்கப்பட்டு, பரிசுத்த ஞானஸ்நானத்தால் முத்திரிக்கப்பட்டுள்ள உங்களனைவருக்கும், சமீபத்திலுள்ளவர்களோடு தூரத்திலிருப்பவர்களுக்கும், மரித்தவர்களோடு ஜீவனுள்ளவர்களுக்கும், இத்திரித்துவம் கடன்களுக்குப் பரிகாரம் நல்கும் ; உங்கள் குற்றங்களை மன்னிக்கும்; மரித்துப்போன உங்களவரின் ஆத்துமாக்களுக்கு ஆறுதல் அளிக்கும்.

சபை : ஆமென் !

புரோ: பெலவீனனும் பாவியுமான தாசனுகிய நான், உங்களுடைய பிரார்த்தனைகளால் கருணையையும் சகாயத்தையும் பெறுவேனாக ! நீங்கள் சந்தோஷத்தோடும், ஆனந்தத்தோடும், சமாதானத்தோடும் செல்வீராக ! எனக்காக எப்பொழுதும் பிரார்த்திப்பீர்களாக !

சபை : ஆமென்! கர்த்தர் உம்முடைய குர்பானுவை அங்கீகரித்து, உம்முடைய பிரார்த்தனைகளால் எங்களுக்குச் சகாயம் அருள்வாராக!

[திரை, பரிசுத்த ஸ்தலத்தில் குறுக்கே இழுக்கப்படுகிறது].

பரிசுத்த குர்பானுவுக்குப்பின் நடத்தப்படும் ஆராதனை

[திருப்பலிபீடத்திற்குமுன் புரோகிதர் முழங்காற்படியிட்டு ஏறெடுக்கும் ஜெபம்].

தேவனுகிய கர்த்தரும், தம்மால் தெரிந்தெடுக்கப்பட்ட தேவ தூதர்களும், பரிசுத்தவான்களும் இன்று நாங்கள் அர்ப்பணித்த இத்திருப்பலியால் மகிழ்வாராக! இதனுல் தம் மாதாவுக்கும், தம் பரிசுத்தவான்களுக்கும், விசுவாசிகளாய் மரித்துப்போன சகலருக்கும், விசேஷமாக இத்திருப்பலியில் நினைவு கூருவதற்காக கேட்டுக்கொண்ட ... ... அனைவருக்கும் ஆறுதலும் நல்ல நினைவு கூருதலும் உண்டாவதாக!

[புரோகிதர் எழுந்து ''பதவி''மீது நின்றுகொண்டு, தட்டிலிருந்து அப்பத்தை எடுத்து, அதை உட்கொள்ளும்பொழுது கூறுவது].

கர்த்தர் என்னை மேய்ப்பார்; நான் தாழ்ச்சி அடையேன்; செழிப்பான மேய்ச்சல் நிலங்களில் என்னை அவர் மேய்ப்பார். அமர்ந்த தண்ணீர்களண்டை என்னைக் கொண்டுபோய் விடுவார். அவர் என் ஆத்துமாவைத் தேற்றி, என்னை நீதிப் பாதைகளில் நடத்துகிறுர். உமது நாமத்தின் நிமித்தம் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும் நீர் என்னோடு கூட இருப்பதால் நான் தீமைக்கு அஞ்சவேண்டியதில்லை. உமது தடியும், கோலும் என்னை ஆறுதல்படுத்தும். என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு விருந்தை ஆயத்தம் செய்து, எண்ணெயால் என் தலையை அபிஷேகம் செய்தீர். என் பானபாத்திரம் ஜீவனுள்ளதுபோல் நுரைந்து வழிகிறது. நான் கர்த்தருடைய பவனத்தில் நீடித்த காலம் வசிக்கும்படி உமது கருணையும், கிருபையும் என் ஆயுள் நாள் முழுவதும் என்னைப் பின் தொடரும்.

[புரோகிதர் அப்பத் தட்டினைச் சுத்தம் செய்து கூறுவது].

திரு அப்பத்தின் சிறு தூள் ஏதேனும் தங்கியிருந்தால் – லோக சிருஷ்டிகரான உமது பார்வைக்குப் புலப்பட்டால், அந்தத் தூளுக்கு கர்த்தர்தாமே காவலாக இருப்பீராக! எனக்குப் பாவ விமோசனமும் பாவ மன்னிப்பும் நல்குவீராக!

[பான பாத்திரத்தில் மீதி உள்ளதை அருந்தும்போது கூறுவது].

எங்களை இரட்சிப்பதற்காக வந்த தேவ வார்த்தையாகிய இயேசுவே! குருசினில் சொரிந்த ஜீவனுள்ளதும் ஜீவிப்பதுமாகிய உமது திருரத்தத்தால் என் கடன்களைப் பரிகரிப்பீராக! என்னுடைய பாவங்களை மன்னித்தருள்வீராக!

[புரோகிதர் கரண்டியைச் சோதித்துக் கூறுவது]

எங்கள் தேவனுகிய மேசியாவே ! என் அவயங்களுக்கும், ஜலத்தாலும் ஆவியாலும் உம்மை ஏற்றுக் கொண்டு விலையேறப் பெற்ற உமது திருச்சரீரத்தையும் திருரத்தத்தையும் உட்கொண்ட விசுவாசிகளான

மரித்தோரின் ஆத்துமாக்களுக்கும், சரீரங்களுக்கும் நேரிட விருக்கிற அக்கினிச் சுவாலேயையும், பயங்கரமான கடின தண்டனேகளேயும், உமது விலேயேறிய சரீர ரத்தங்களாகிய ஜீவ அக்கினி அழித்தருள் வதாக ! எங்கள் கர்த்தாவே ! எங்கள் தெய்வமே ! கடைசி நாளில் நீர் அவர்களே அழைத்து உமது வலது பாரிசத்தில் நிறுத்துவீரா்க !

[புரோகிதர் வலது கை விரல்களே நீரில் முழுக்கிக் கழுவிக் கூறுவது]

என் உதடுகள் உம் துதிகளேயும், எனது நாவு உமது தோத்திரங்களேயும் ஏறெடுக்கும்! நான் உமக்கு விரோதமாகச் செய்த எல்லா பாவங்களேயும் உம் கைகளிலும் கால்களிலும் உள்ள ஆணியை யும், உமது விலாவில் குத்திப் பிளந்த ஈட்டியையும் நினேத்தருளிப் பொறுத்திடுவீராக !

[பிறகு இடது கை விரல்களே நீரில் முழுக்கிக் கழுவி]

தேவனுகிய கர்த்தாவே ! சகல உபத்திரவங்களிலிருந்தும் என்னே நீர் காத்தருள்வீராக ! உமது வலது கரம் எனக்கு உதவுவதாகுக ! உமது இடது பக்கத்திற்கு தள்ளிவிடக் கூடிய சகல தீய செயல்களி லிருந்து என்னேக் காத்தருள்வீராக !

உமது வாசஸ்தலத்தின் கொழுமையிலே அவர்கள் களிப்பூட்டப் பெறுவாராக ! உமது இன்பகரமான பள்ளத்தாக்கில் இருந்து அவர்கள் அருந்துவார்களாக ! ஏனென்முல் ஜீவ ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது ! உமது பிரகாசத்தால் நாங்கள் ஒளியைக் காண்கிறோம். உம் அருகிலுள்ளவர்களுக்கு உமது கருணேயையும், இருதய நேர்மை யுள்ளவர்களுக்கு உமது நீதியையும் நிலேபெறச் செய்வீராக ! உமது வலிமை மிகுந்த பாதத்தை எங்கள் மேல் அழுத்தாதிருப்பீராக ! துஷ்டரின் கை எங்களேத் தொந்தரவு செய்ய விடாதேயும்! வஞ்சனே செய்கிற அனேவரும் அங்கே வீழ்ச்சியடைகிமுர்கள். அவர்களால் எழ முடியாது; எழுந்தாலும் விழுவார்கள்.

[பிறகு இரு கைகளேயும் புரோகிதர் கழுவி]

கர்த்தாவே ! என் உத்தமத்திலே நடக்கிறதினுல் என்னே நியாயம் விசாரியும் ! நான் கர்த்தரிடத்தில் சரணம் அடைந்திருக்கிறேன். ஆதலால் நான் சஞ்சலப்படுவதில்லே ! கர்த்தாவே ! என்னேப் பரீட் சித்து என்னேச் சோதித்துப் பாரும் ! என் உள்ளிந்திரியங்களேயும், என் இருதயத்தையும் பரிசோதித்தருளும் ! உம்முடைய கருணே என் கண்களுக்கு முன்பாக இருக்கிறது ; விசுவாசத்திலே நான் நடந்து கொள்கிறேன் ; துஷ்டர்களோடு நான் உட்காரவில்லே ; வீணரோடு நான் செல்வதில்லே ; துன்மார்க்கருடைய கூட்டத்தை நான் வெறுக் கிறேன் ; தர்மம் அற்றவர்களோடு நான் அமருவதில்லே; நான் என் கைகளே ஒன்முகக் கழுவி, கர்த்தாவே ! உமது மகத்துவத்தின்

சத்தத்தைக் கேட்பதற்கும், உமது சகல அற்புதங்களையும் பிரஸ்தாபப் படுத்துவதற்கும், உமது பலிபீடத்தை நான் சுற்றி வருகிறேன். கர்த்தாவே ! உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும், உமது மகத்துவமான ஸ்தானத்தையும் நான் வாஞ்சிக்கிறேன் !

பாவிகளோடும் இரத்தப் பிரியரோடும் என்னை நசித்து விடாதேயும்! அவர்களுடைய கைகளில் வஞ்சனையுண்டு ; அவர்களுடைய வலது கை பரிதானங்களால் நிறைந்திருக்கிறது ; நான் என் உத்தமத்திலே நடந்திருக்கிறேன் ; என்னை இரட்சித்து எனக்குக் கருணை செய்தருளும் ! என் கால் சத்தியத்தில் நிற்கிறது ; சபையிலே நான் கர்த்தரை வாழ்த்துவேன் ! தேவனே நீர் துதிக்குப் பாத்திரமானவர் !

[புரோகிதர் கைகளைத் துடைத்துக் கொண்டு]

கர்த்தாவுக்கு ஆட்டுக்கிடாக்களைக் கொண்டு வாருங்கள் ! கர்த்தாவுக்குத் துதிகளையும், மகிமையையும் செலுத்துங்கள் ! கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள் ! கர்த்தருடைய பரிசுத்த பிராகாரங்களில் அவரைத் தொழுது கொள்ளுங்கள்! கர்த்தருடைய சத்தம் தண்ணீர்களின்மேல் வந்தது! கர்த்தர் முழங்கினர் ! கர்த்தர் பெரு வெள்ளத்தின்மேல் வந்தார் ! கர்த்தருடைய சத்தம் வல்லமையுள்ளது ! கர்த்தருடைய சத்தம் மகத்துவமுள்ளது ! கர்த்தருடைய சத்தம் கேதுரு மரங்களை முறிக்கிறது ! கர்த்தர் லீபனோனின் கேதுரு மரங்களை முறித்தார்! அவைகளைக் காளைக் கன்றுகளைப் போலவும், லீபனோனையும், சீரியோனையும் காண்டாமிருகக் குட்டிகளைப் போலவும் துள்ளுவிக்கிறார் ! கர்த்தருடைய சத்தம் அக்கினி சுவாலையைப் பிறப்பிக்கிறது ! கர்த்தருடைய சத்தம் வனாந்தரத்தை அதிரச் செய்கிறது ! கர்த்தர் காதேனின் வனாந்தரத்தை அதிரச் செய்கிறார் ! கர்த்தரின் சத்தம் பெண்மான்களைப் பிரமிக்கச் செய்து, குற்றுக்காடுகளை வேரோடு களைகிறது ! அவருடைய ஆலயத்தில் அனைவரும் துதிபாடுகிறார்கள் ! கர்த்தர் ஜலப்பிரளயத்தைத் திசை மாற்றினர் ! கர்த்தர் என்றென்றைக்கும் ராஜாவாக வீற்றிருக்கிறார் ! கர்த்தர் தம் ஜனத்திற்கு பெலன் கொடுப்பார் ! கர்த்தர் தம் ஜனத்திற்குச் சமாதானம் அருளி அவர்களை ஆசீர்வதிப்பார் ! தேவனே! நீர் துதிக்குப் பாத்திரமானவர் !

[மரித்துப் போனவர்களுக்காகப் பொதுவான ஒரு முன்னுரை]

நாம் அனைவரும் ஜெபித்து கர்த்தரின் கிருபைக்காகவும் இரக்கத்திற்காகவும் அவரை நோக்கிக் கெஞ்சி மன்றாடுவோமாக !

துதியும், தோத்திரமும், ஜோதியும், புகழ்ச்சியும், அழியாத நல்ல உன்னதமும், எப்பொழுதும், சதாநேரத்திலும் நாங்கள் இடைவிடாமல் செலுத்த எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும் !

தமது மரணத்தின் மூலம் நம்முடைய மரணத்தை அழித்தவரும், தமது திருப்பலியால் ஆ தா மி ன் சந்ததிகளுக்கெல்லாம் பாவ பரிகாரத்தைத் தந்தவருமாகிய உத்தம கர்த்தருக்குத் துதியுண்டாவ தாக! அவருக்கே இப்பொழுதும், எப்பொழுதும், எல்லாப் பெரு விழாக்களிலும், சந்தர்ப்பங்களிலும், நேரங்களிலும், நாழிகைகளிலும் நம்வாழ் நாட்கள் முழுவதும் சதாகாலமும் மகிமையும், கனமும் வணக்கமும் இருப்பனவாகுக!

செத்ரா

மரித்தவரை வாழ்விக்கிறவரும், அடக்கம் செய்யப்பட்டவர்களை உயிர்ப்பிக்கிறவருமான கர்த்தாவே! இன்று நாங்கள் எவருக்காக இத்திருப்பலியை அர்ப்பணித்திருக்கிறோமோ, அந்த அடியார்களின் ஆத்துமாக்களை நீர் ஏற்றுக் கொள்வீராக! உமது பிதாவின் ஆசீர் வதிக்கப்பட்ட வாசஸ்தலங்களில் உமக்குப் பிரியமானவர்களாகிய ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாக்கோபோடும் உம்மைச்சரண டைந்து மரித்துப் போனவர்களாகிய எல்லா விசுவாசிகளோடும் கூட அவர்களை நீர் வாசம் செய்யும்படி அருள்வீராக! அவர்களுக்கு ஜீவனை நல்கி, உமது வலது பக்கத்தில் அவர்களை நிறுத்தியருளும்! நாங்கள் அனைவரும் பரிசுத்த திரித்துவத்திற்கு இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும், துதியும், தோத்திரமும் செலுத்தக் கிருபை செய்தருளும்!

எனது கடன்கள் அனைத்தும் நின்
கிருபையாம் ஈசோப்பது கொண்டு
மாய்த்தென் பாவங்களையும்
கிருபையால் புண்யமதாக்கணுமே!

இரட்சகா! உமது இரகசியங்கள்!
அர்ப்பணிக்கப்பட்டதினால்
அதாலே புண்ணிய மடைந்தவரோடு
என்னையும் பாத்திரனாக்கிடுவீர்!

கர்த்தாவே உம் நித்திய
சொர்க்க மதாய இராச்சியத்தில்
உம்மைச் சேவித்திடவே நான்
இன்றும் என்றும் என்றைக்கும்

நித்ய துதியே கர்த்தருக்கு!
தீர்வுநாள் கிருபை! உங்களுக்கே
நியாயாதிபதியின் கருணை—இப்
பாதகனும் பெற்றிட வேண்டும்!

கிருபையுடையவராம் கர்த்தாவே !
கிருபை என்மேல் உண்டாகணுமே !
கிருபை உண்டாகுக மடி மிகுந்த
என்மேல் கிருபை உண்டாகணுமே !

இக்குர்பானை அர்ப்பணித்தோர்
இப்புரோகிதரின் மேலும்
இவ்வுதவியாளர் மேலும்
சமமாய்க் கிருபையுண்டாவதாக !

கர்த்தாவே ! நாங்கள் இன்று உம் தாசர்களுக்காக அர்ப்பணித்துள்ள இந்தத் திருப்பலியானது உமக்குச் சுகந்த வாசனையாக அமைவதாக ! என் கர்த்தாவே ! இதனால் உமது திருவிருப்பம் திருப்தியடைவதாக ! உமது கருணையால் அவர்களுக்கு ஆறுதல் அளிப்பீராக !

மிருகங்களின் இரத்தத்தால் மோசே, பாவம் செய்த ரூபனுக்கு ஜீவனைக் கொடுத்தாரென்றால், விசுவாசிகளாக மரித்துப் போனவர்களுக்காக அர்ப்பணிக்கப்படுகிற இந்த ஜீவபலியால், அவர்களுக்கு எவ்வளவோ அதிகமாகப் புண்ணியம் கிட்டும் ! குரியே லாய்சோன் ! குரியே லாய்சோன் ! குரியே லாய்சோன் ! பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே ! உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக ... ...
... ...
... ...உம்முடைவைகளே ! ஆமென் !

[புரோகிதர் திருப்பலிப்பீடத்தை வணங்கி]

தேவனே ! உம்முடைய வாசஸ்தலத்தில் நான் பிரவேசித்தேன் ! சொர்க்கத்திலுள்ள ராஜாவே ! உமது சிங்காசனத்திற்கு முன்பாக நான் ஆராதித்தேன் ! உமக்கு விரோதமாக நான் செய்த எல்லாப் பாவங்களையும் எனக்கு மன்னித்தருள்வீராக !.

[பலிபீடத்தை முத்திசெய்து]

கர்த்தரின் பரிசுத்தமும் தெய்வீகமுமாகிய பலிபீடமே ! சமாதானத்தோடு இருப்பாயாக ! இனி நான் உன்னிடத்தில் திரும்பி வருவேனோ, இல்லையோ ! எனக்குத் தெரியாது ! சொர்க்கத்திலுள்ள முதற்பேறானவர்களின் சபையில் உன்னைப் பார்ப்பதற்குக் கர்த்தர் என்னைப் பாத்திரவான் ஆக்குவராக !

இந்த உடன்படிக்கையில் நான் சரண்புகுகிறேன் !

பரிசுத்தமுள்ளதும், பாவபரிகாரம் செய்வதுமான பலிபீடமே ! நீ சமாதானத்தோடு இருப்பாயாக !

எங்கள் கர்த்தரே ! எங்கள் தேவனே ! இத்திருப்பலிபீடத்திலிருந்து நான் உட்கொண்ட பரிசுத்த சரீரமும், பாவபரிகாரம் செய்கிற திருரத்தமும் ஆகிய இரகசியங்கள் என் கடன்களின் பரிகாரத்திற்கும், பாவ

விமோசனத்திற்கும், உம் பயங்கர சிங்காசனத்திற்குமுன் என் முகப் பிரசன்னத்திற்கும் என்னை என்றென்றைக்கும் பாத்திரவானுக்க அருள் செய்வீராக !

ஜீவ மேசையாகிய பரிசுத்த பலிபீடமே! நீ சமாதானத்தோடே இருப்பாயாக ! இது முதல் என்றென்றைக்கும் உன்னிடமிருந்து என்னுடைய நினைவுகூரல் நீங்காதிருக்கும்படி நம் கர்த்தாவாகிய இயேசு மேசியாவோடு எனக்காக வேண்டிக் கொள்வாயாக !

[பிரசாத அப்பத்தை ஆசீர்வதித்தல்]

பரிசுத்த திரித்துவத்தின் கிருபை, சொர்க்கத்திலிருந்து இறங்கி இந்தப் பிரசாத அப்பத்தில் தங்குவதாக ! இதைக் கொடுக்கிறவர்கள் மேலும், இதை வாங்குபவர் மேலும். இதைக் கையாளுபவர்கள் மேலும், இதில் சம்பந்தப்பட்டவர்கள் மேலும், சம்பந்தப்பட இருக்கிற வர்கள் மேலும் தெய்வத்தின் கருணை என்றென்றைக்கும் இகபர இருலோகங்களிலும் இருப்பதாக !

* * *

பரிசுத்த தீவனுஸியோஸ் யாக்கோபின் பரிசுத்த நற்கருணை ஆராதனை முறை

[புரோகிதர் எழுந்து, திருப்பலிபீடத்தை முத்தி, பதவி மேல் ஏறி, குர்பானுவைத் தொடங்குகிறுர்]

புரோகிதர், சமாதான முத்தம் கொடுப்பதற்கு முன் ஏறெடுக்கும் பிரார்த்தனை]

கர்த்தாவே! இந்த வேளையில் எங்களுக்கு சிநேகத்தையும், ஐக்கியத் தையும், பரிபூரண சமாதானத்தையும் நல்குவீராக! நாங்கள் உமக்கும், உம் ஒரே பேருன குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப் பொழுதும், என்றென்றைக்கும் துதியும் தோத்திரமும் செலுத்துகிறோம்!

சபை : ஆமென்!

புரோகிதர் :—உங்களனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக!

சபை : உமது ஆவியோடும் இருப்பதாக!

[புரோகிதர், உதவியாளருக்கு சமாதான முத்தம் தருகிறுர். அதை அவர் மற்றவர்களுக்கும் வழங்குகிறுர்]

உதவியாளர் : பாரக்மோர்! நம் தேவனுகிய கர்த்தருடைய அன்பின் மூலமாக, பரிசுத்த தெய்வீக முத்தத்தால் ஒவ்வொரு வரும் தமக்கு அடுத்தவருக்குச் சமாதானத்தைக் கொடுப்பாராக!

சபை : தேஞுகிய கர்த்தாவே! எங்கள் வாழ்நாள் முழுவதும் இந்த சமாதானத்திற்கு எங்களைப் பாத்திரவான்களாக்கியருளும்;

உதவியாளர் : கொடுக்கப்பட்டுள்ள பரிசுத்தமும், தெய்வீகமுமான இந்த சமாதானத்திற்குப் பின், கருணையுள்ள கர்த்தருக்கு முன்பாக நாம் தலை வணங்குவோமாக!

சபை : எங்கள் கர்த்தரே! எங்கள் தேவனே! உமக்கு முன்பாக நாங்கள் தலை வணங்குகிறோம்!

புரோ : கர்த்தாவே! உமது அழியாத ஐசுவரியத்தினுல் எங்களனைவரையும் நீர் அனுக்கிரகித்தருளும்! நாங்கள் உமது திருவிருப்பத்தையும், உம் திருக்குமாரனின் திருவிருப்பத்தையும் பரிசுத்த ஆவியின் திருவிருப்பத்தையும், நிறைவேற்றுவதற்கு எங்களை இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் தகுதியாக்கியருளும்!

சபை : ஆமென்!

புரோ : கர்த்தாவே! நாங்கள் உமக்கு அர்ப்பணிக்கின்ற இந்தப் பரிசுத்த திருப்பலியின் நிமித்தம் சகல அசுத்த எண்ணங்களையும் எங்களிடமிருந்து தூர விலக்கியருளும்! இதனுல் எங்களுடைய ஆத்துமாக்களைப் பிரகாசிக்கச் செய்து, எங்கள் சரீரங்களை சுத்திகரிப்பீராக! நாங்கள் உமக்கும், உம் ஒரே பேருன குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும் தோத்திரமும் செலுத்த அருள்புரிவீராக!

சபை : ஆமென்!

[புரோகிதர், லோஸபாவைத் தூக்கி அசைத்து, மௌனமாகத் தமக்குள் கூறுவது]

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் பன்னிரண்டு நீரூற்றுக்களைப் பிரவாகித்த கனல் பாறை நீரே! எங்கள் இரட்சகரின் கல்லறை வாயிலில் வைக்கப்பட்ட கனல் பாறையும் நீரே!

உதவியாளர் : பாரக்மோர்! சகோதரரே! ....

சபை : இந்த குர்பாஞ கருணையும், சமாதானமும், பலியும் தோத்திரமுமே!

(புரோகிதர் வலது கையை "தபலேத்தா" மேல் வைத்து இரகசியங்களிலிருந்து சக்தியைப் பெற்றுக்கொண்டு, தமக்கு சிலுவைக் குறி இட்டுக்கொண்டு, வடக்குப் பாகத்திலும்

தெற்குப் பாகத்திலும் உள்ளவருக்கு நேராகச் சிலுவைக் குறி இட்ட பிறகு, மேற்குப்பக்கம் திரும்பி, ஜனங்களுக்கு நேராக மூன்றுமுறை சிலுவைக் குறி வரைந்து கூறுவது)

புரோ: பிதாவாகிய தேவனுடைய அன்பும், ஏக குமாரனின் கிருபையும், பரிசுத்த ஆவியின் சம்பந்தமும் சகவாசமும், என் சகோதரரே ! உங்களனைவரோடும்கூட இருப்பனவாக !

சபை : உமது ஆவியோடும் இருப்பனவாக !

புரோ: (தம் கைகளை மேலே உயர்த்தி) இந்த வேளையில் நம் அனைவரின் உணர்வுகளும், நினைவுகளும், இதயங்களும், பிதாவாகிய தேவனின் வலது பாரிசத்தில் மேசியாத் தம்பிரான் வீற்றிருக்கும் இடமாகிய மகா உன்னத ஸ்தலத்தில் இருப்பனவாக!

சபை : எங்களுடைய உணர்வுகளும், நினைவுகளும், இதயங்களும் தேவனாகிய கர்த்தரிடத்தில் இருக்கின்றன !

புரோ: பயபக்தியோடு கர்த்தரை நாம் தோத்திரிப்போமாக !

சபை : பயபக்தியோடு கர்த்தரைத் தோத்திரிப்பது தகுதியும் நியாயமுமாயிருக்கிறது !

[புரோகிதர் இரகசியங்களின்மீது தம் கைகளை அசைத்து, மௌனமாகக் கூறுதல்]

புரோ: பிதாவும், குமாரனும், பரிசுத்த ஆவியுமான ஒரே சத்திய தேவனைத் துதித்து, தோத்திரிப்பது தகுதியும் நியாயமுமானது.

(உரக்க) உம் திருமுன் நின்றுகொண்டு இடைவிடாமல் உம்மை துதிக்கின்ற ஆயிரமாயிரமும், பதினாயிரமுமான அக்கினிமய மானவர்களோடு ஒருமித்து திரித்துவத் துதிகளால் உம்மைப் புகழ்வதற்கு நாங்கள் பாத்திரவான்களாயிருக்கும்படி அருள் புரிவீராக !

சபை : உமது துதிகளால்.......................

[புரோகிதர் தமக்குள்ளே ஏறெடுக்கும் பிரார்த்தனை]

ஜநிப்பிக்கிறவரும், ஜநிக்காதவருமாகிய பிதா பரிசுத்தர் ! ஜநித்தவரும், ஜநிப்பிக்காதவருமான புத்திரன் பரிசுத்தர் ! பிதாவிலிருந்து புறப்படுகிறவரும், புத்திரனிலிருந்து எடுத்துக்கொள்ளுகிறவருமான பரிசுத்த ஆவியானவர் பரிசுத்தர்! கருணையோடும் தயவோடும் எங்களை இரட்சித்த சத்திய தேவன் ஒருவரே !

புரோ: நம்மை இரட்சிப்பதற்காக தமது துன்ப அனுபவத்திற்கு தாம் ஆயத்தமானபொழுது, தம் கைகளில் அப்பத்தை எடுத்து அதை ஆசீர்வதித்து + + பரிசுத்தப்படுத்தி+ அதைப் பிட்டு, அதை உட்கொள்ளுபவருக்கு நித்திய ஜீவனை அளிக்கிற தமது பரிசுத்த சரீரமென்று அதற்கு நாமகாரணம் சூட்டினார்.

சபை : ஆமென்!

புரோ: அந்தப்படியே திராட்ச ரசமும், நீரும் கலந்து உள்ள பான பாத்திரத்தையும் ஆசீர்வதித்து++ பரிசுத்தப்படுத்தி+ அதை உட்கொள்ளுபவருக்கு நித்திய ஜீவனை அளிக்கிற தமது பரிசுத்த இரத்தமாக அதைப் பரிபூரணப்படுத்தினர்.

சபை : ஆமென்!

புரோ: பரிசுத்த அப்போஸ்தலரிடம் இவைகளை ஒப்படைத்து, நான் வருமளவும் என்னை நினைவுகூரும்பொருட்டு, இப்படிச் செய்வீர்களாக என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார்.

சபை : எங்கள் கர்த்தாவே! உமது மரணத்தை ... ...

புரோ: கர்த்தாவே! எங்களை இரட்சிப்பதற்கான உமது சகல கிரியைகளையும், ஒவ்வொருவரும் அவரவர் செய்த கிரியைகளுக்குத் தக்கவாறு, பிரதிபலனை அளிப்பதற்காக வரவிருக்கின்ற பயங்கரமான உமது இரண்டாம் வருகையையும், உமது திருச் சபையாகிய நாங்கள் நினைவு கூருகிறோம். இதன் நிமித்தம் பச்சாதாபப்பட்டு உமது திருச்சபையும், சேகரமும், உம்மோடும் உம் நிமித்தம், உம் பிதாவோடும் மன்றாடி, சர்வ வல்லமையுள்ள பிதாவே, எங்கள்மேல் இரக்கமாயிரும் என்று கெஞ்சுகிறோம்!

சபை : பிதாவாகிய சர்வ லல்லமையுள்ள தேவனே! எங்கள்மேல் இரக்கமாயிரும்! ... ...

உதவியாளர்: பாரக்மோர்! எனக்குப் பிரியமானவர்களே! ஜீவனுள்ள பரிசுத்த ஆவி ... ...

சபை : எங்கள் அனைவரோடும் ... ...

[புரோகிதர் தம் கைகளை அசைத்து, பரிசுத்த ஆவி இறங்குவதைக் குறிப்பாகக் காட்டி ஏறெடுக்கும் மௌன ஜெபம்].

கர்த்தாவே! என்மீது கருணை வைத்து, திருச்சபையின் சகல இரகசியங்களையும் பரிபூரணப்படுத்துகிறவராகிய பரிசுத்த ஆவியானவரை என்மீதும், இந்தக் குர்பானாமீதும் அனுப்பியருள்வீராக!

புரோ: (உரக்க) கர்த்தாவே! எனக்கு உத்தரவு அருள்வீராக! கர்த்தாவே! எனக்கு உத்தரவு அருள்வீராக! கர்த்தாவே! எனக்கு உத்தரவு அருளி, தயவு கூர்ந்து என்மீது கருணையாயிரும்!

சபை: குரியே லாய்சோன்–குரியே லாய்சோன்–குரியே லாய்சோன்!

புரோ: [தமது வலது கையை அப்பத்தின்மீது அசைத்து,– உரக்க]

பரிசுத்த ஆவி கவிந்து இந்த அப்பத்தை நம் தேவனுகிய மேசியாவின் திருச்சரீரமாக பூரணப்படுத்துவாராக!

சபை: ஆமென்!

புரோ: [தமது வலது கையை பான பாத்திரத்தின்மீது அசைத்து,– உரக்க]

இந்தப் பான பாத்திரத்திலுள்ள கலவையை நம் தேவனுகிய மேசியாவின் இரத்தமாக மாற்றியருள்வாராக!

சபை: ஆமென்:

புரோ: (உரக்க)

கர்த்தாவே! இதில் பங்கு கொள்ளுகிற அனைவருக்கும் தங்கள் கடன்களுக்குப் பரிகாரமாக இது அமையவும், இதன் மூலம் அவர்கள் நித்திய ஜீவனுக்குப் பங்காளிகளாக அமையவும் கிருபை செய்தருளும்! அவர்கள் உமக்கும், உம் ஒரே பேருன குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும் எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும் தோத்திரமும் செலுத்துவார்களாக!

சபை: ஆமென்!

உதவியாளர்; தூப்தேன் (1)

பாரக்மோர்: இன்றும், இந்த ஜீவிய காலத்திலும்......

புரோ: (மௌனமாக ஏறெடுக்கும் தனி ஜெபம்)

கர்த்தாவே! எல்லா இடங்களிலும் உள்ள உமது பரிசுத்த திருச்சபைக்காகவும், விசுவாசிகளான ஜனங்களுக்காகவும், வைதீகத் திருக்கூட்டத்தார் அனைவருக்காகவும் இந்தத் திருப்பலியை நாங்கள் அர்ப்பணிக்கிறோம்!

(புரோகிதர் இரு கைகளையும் உயர்த்தி, உரக்க)

கர்த்தாவே! உமது பரிசுத்த திருச்சபைக்கு சாந்தியையும் சமாதானத்தையும், திருச்சபையின் மேய்ப்பர்களுக்கு உத்தமமும் அமைதியுமான தீர்க்காயுளையும் நல்குவீராக! சத்திய வசனத்தை நேர்மையாகக் கற்பிக்கிற மேய்ப்பர்களைத் திருச்சபையிலிருந்து எழும்பச் செய்தருள்வீராக! நாங்கள் உமக்கும், உமது ஒரே பேருன குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும், தோத்திரமும் செலுத்துகிறோம்!

சபை : ஆமென் !

உதவியாளர் : தூப்தேன் — (2)

பாரக்மோர் ! சர்வ வல்லவரான தேவனுகிய கர்த்தாவே !

... ...

புரோ : (மௌனமாக)

கர்த்தாவே ! நற்கிரியைகளைச் செய்யும் அனைவரையும் நீர் நினைவு கூர்ந்தருளும். உம்மைக் கூவியழைத்து உறுதியான விசுவாசத்தோடு உம்மைச் சரணடைகிற அனைவருக்கும் நீர் கருணை புரிந்து சகாயம் செய்தருள்வீராக !

(கைகளை உயர்த்தி உரக்க)

அத்தியாவசியத் தேவையினுலும், வறுமையினுலும், துன்பப் படுகிற அனைவருக்கும் உமது சகாயத்தை அருளி, அவர்களுக்கு உதவுகிறவர்களையும் நீர் காத்தருள்வீராக! நாங்கள் உமக்கும், உம்முடைய ஒரே பேருன குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும் தோத்திரமும் செலுத்துகிறோம் !

சபை : ஆமென் :

உதவியாளர் : தூப்தேன் (3)

பாரக்மோர் : பூமியின் நான்கு பாகங்களிலும் ....

புரோகிதர் : (மௌனமாக)

கர்த்தாவே ! உமது பரிசுத்த சபைக்கு சகாயம் செய்கின்ற ராஜாக்களையும், விசுவாசிகளாகிய ஜனங்களுக்கு நன்மை செய்கிறவர்களையும் நீர் நினைவு கூர்ந்தருள்வீராக !

[கைகளை உயர்த்தி உரக்க]

கர்த்தாவே ! மறைந்து தாக்கும் எதிரியையும், அவனுடைய கொடுமையையும் எங்களிடமிருந்து நீக்கியருளும் ! கருணையில்லாத எஜமான்களின் கைகளிலிருந்தும் எங்களைக் காத்தருளும் ! நாங்கள் உமக்கும் உம்முடைய ஒரே பேருன குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும் தோத்திரமும் செலுத்துகிறோம் !

சபை ; ஆமென் !

உதவியாளர் : தூப்தேன் — (4)

பாரக்மோர் : பூமியின் சகல சந்ததிகளாலும் பாக்கியவதி ....

புரோகிதர் : (மௌனமாக)

கர்த்தாவே ! உம் சகல பரிசுத்தவான்களையும், உம் ஏக புத்திரனின் மாதாவாகிய பரிசுத்த கன்னிமரியாளையும் நீர் நினைவு கூர்ந்து, உம் அடியார்களாகிய அவர்களது மன்றாட்டுகளின் நிமித்தம் எங்களுக்கு இரட்சிப்பையும் சகாயத்தையும் நல்குவீராக!

[கைகளை உயர்த்தி உரக்க]

உம் பரிசுத்தவான்களின் செட்டைகளில் எங்களை மறைத்தருளி, அவர்களுடைய வரிசையில் எங்களையும் உட்படுத்துவீராக ! அவர்களோடு சேர்ந்து நாங்கள் உமக்கும், உம்முடைய ஒரே பேறுன குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும், இப்பொழுதும், எப்பொழுதும் என்றென்றைக்கும் துதியும் தோத்திரமும் பாட அருள்புரிவீராக !

சபை ; ஆமென் !

உதவியாளர் : தூப்தேன்— (5)

பாரக்மோர் ! அப்போஸ்தலர்களுடையதும், குற்றமற்றதுமான ......

புரோகிதர் : (மௌனமாக)

கர்த்தாவே ! எங்களுக்கு சத்திய விசுவாசத்தைப் பிரசங்கித்துள்ள முற்பிதாக்களையும், சத்திய போதகர்களாகிய எங்கள் மேய்ப்பர்களையும் நீர் நினைவுகூர்ந்தருளும் !

[கைகளை உயர்த்தி உரக்க]

கர்த்தாவே ! சத்திய விசுவாசத்தில் எங்களை நீர் காத் தருள்வீராக ! அந்த விசுவாசத்திலிருந்து விலகிப் போகாதவர்களாகவும், குற்றமில்லாதவர்களாகவும் எங்களை நீர் நிலைநிறுத்துவீராக ! நாங்கள் உமக்கும் உம் ஒரே பேறுன குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும் தோத்திரமும் செலுத்துகிறேம் !

சபை : ஆமென் !

உதவியாளர் : தூப்தேன் (6)

பாரக்மோர் ! சகல அரூபிகளுக்கும் சரீரிகளுக்கும் உடைமையாளரான ....

புரோ : (மௌனமாக)

கர்த்தாவே ! உமது அடைக்கலத்தில் நித்திரையடைந் துள்ள சத்திய விசுவாசிகளாக மரித்துப் போனவர்களை

நீர் நினைவு கூர்ந்தருளும்! உம் ஏக புத்திரனின் திரு ரத்தத்தினால் இரட்சிக்கப்பட்டுள்ள இவர்களுக்கு உமது கருணையால் நீர் ஆறுதல் அளிப்பீராக!

[புரோகிதர் பானபாத்திரம், அப்பத்தட்டு, தபலேத்தா ஜெப புத்தகம் ஆகியவற்றின் மீது சிலுவை அடையாளம் வரைந்து, மரித்துப் போனவர்களின் பெயர்களை நினைவு கூருகிறார்; பின்னர் கைகளை உயர்த்தி உரக்க]

கர்த்தாவே! கருணையோடு நீர் அவர்களைத் திருக்கண் நோக்கி, அவர்களுடைய கடன்களைப் பரிகரித்து, பிழைகளை மன்னித்தருள்வீராக! ஏனென்றால், உமது ஏக சுதனின் திருச்சரீரத்தையும், திரு இரத்தத்தையும் அவர்களுடைய அவயவங்களில் உட்கொண்டிருக்கிறார்களே! அவர் நிமித்தம் நாங்களும் அவர்களும் கருணையும் பாவ விமோசனமும் பெறுவதற்காக அவரை நாங்கள் சரணடைகிறோம்!

சபை : ஆமென்! கர்த்தாவே! மெய்விசுவாசத்தில் எங்களை விட்டு ....

புரோ : (மௌனமாக) தேவனே! நினைவாலும், சொல்லாலும் செயலாலும் நாங்கள் செய்துள்ள குற்றங்களை நீர் பரிகரித்து மன்னித்தருள்வீராக! இரகசியமான காரியங்களும் வெளிப்படையான காரியங்களும் உமக்குப் பிரத்தியட்சமே!

(உரக்க)

எங்களுடைய பிழைகளையும், அவர்களுடைய பிழைகளையும் நினையாமல், எங்களையும் அவர்களையும் நற்கிறிஸ்தவ முடிவுக்குப் பாத்திரவான்களாக்கியருளும்! சகலத்திலும் மகத்துவப்பட்டதும் வந்திக்கப்பட்டதுமாகிய உமது திருநாமமும், எங்கள் கர்த்தராகிய இயேசு மேசியாவின் திருநாமமும், உமது பரிசுத்த ஆவியானவரின் திருநாமமும் சகலத்திலும் மகிமையாக இருந்தது போலவே இந்தக் குர்பானா மூலமாகவும் மகத்துவப்படவும், புகழப்படவும் அருள்வீராக!

சபை : ஆமென்! உமது திருநாமம் ஆதியில் இருந்தது போலவே ....

புரோ : உங்கள் அனைவருக்கும் சமாதானம் இருப்பதாக!

சபை : உமது ஆவியோடும் இருப்பதாக!

புரோ : (வலது கையை அப்பத்தட்டின் மீது வைத்து இரகசியங்களிலிருந்து சக்தியைப் பெற்றுக் கொண்டு, தமக்குச் சிலுவைக் குறியிட்டுக் கொண்டு, வடக்குப் பாகத்திலும், தெற்குப் பாகத்திலும் உள்ளவர்களுக்கு நேராக

சிலுவைக் குறியிட்ட பிறகு, மேற்குப் பக்கம் திரும்பி ஜனங்களுக்கு நேராக மும்முறை சிலுவைக் குறி வரைந்து கூறுவது)

வல்லமையுள்ள தேவனும் நம் இரட்சகருமாகிய இயேசு மேசியாவின் கருணை, சகோதரரே! உங்களனைவரோடும் இருப்பதாக!

[பரிசுத்த ஸ்தலத்தின் குறுக்காக திரை இழுக்கப்படுகிறது. புரோகிதர் திரைக்குள்ளே பொருத்தமான ஜெபங்களோடு அப்பத்தைப் பிட்டு திராட்சை ரசத்தில் தோய்க்கிறார்; பிறகு திரை நீக்கப்படுகிறது ; புரோகிதர் உரக்க]

பிரார்த்தனைகளை ஏற்றுக் கொள்ளுகிறவரும், கெஞ்சுதல்களுக்கு உத்தரவு அருளுகிறவருமான தேவனே! நாங்கள் உம்மைக் கெஞ்சுகிறோம்! பரிசுத்தராகிய உம் ஏகபுத்திரன் எங்களுக்குக் கற்பித்தருளின அந்த கர்த்தருடைய பிரார்த்தனையை உமது திரு முன்னர் நாங்கள் ஜெபித்து நொறுங்கிய இருதயத்தோடு, ''பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே'' என்று நாங்கள் உம்மைக் கூவி ஜெபிக்கிறோம்!

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே ! ... ...

சபை : உம்முடைய திருநாமம் பரிசுத்தப்படுவதாக......................
ஆமென்!

புரோ : தேவனாகிய கர்த்தாவே! துஷ்டனிடமிருந்தும், கற்பனைகளுக்கு விரோதமான எல்லா மீறுதல்களிலிருந்தும் எங்களை இரட்சித்தருள்வீராக! எங்களுடைய பாவங்களையும் அறிவீனங்களையும் மன்னித்தருள்வீராக! எந்தவகையிலும் எங்களுக்குத் தீமை செய்த அனைவருக்கும், எங்களுக்கும் நீரே விமோசகராயிருப்பீராக ! நாங்கள் உமக்கும், உம் ஒரே பேறான குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றைக்கும் துதியும் தோத்திரமும் செலுத்துகிறோம்!

சபை : ஆமென்!

புரோ : உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக!

சபை : உமது ஆவியோடும் இருப்பதாக!

உதவியாளர் : படைக்கப்பட்டிருக்கிற இந்த பரிசுத்த இரகசியங்களை ... ...

சபை : எங்களுடைய கர்த்தாவே! எங்கள் தேவனே! ... ...

புரோ ; கர்த்தாவே! உமது வலது திருக்கரத்தை நீட்டி உம் ஏக புத்திரனின் திருச்சரீரமும் திரு ரத்தமும் உட்கொள்ளுவதற்கு ஆவலோடு எதிர்நோக்கியிருக்கிற உம் ஜனங்களையும் உமது சேகரத்தின் ஆடுகளையும் ஆசீர்வதிப்பீராக! எங்கள் ஆத்துமாக்களையும் சரீரங்களையும் நீர் சுத்திகரித்தருள்வீராக! நாங்கள் உமக்கும், உம்முடைய ஒரே பேறான குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும் தோத்திரமும் செலுத்துகிறோம்!

சபை : ஆமென்!

புரோ : உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக;

சபை : உமது ஆவியோடும் இருப்பதாக!

புரோ : [தம் வலது கையை பானபாத்திரத்தின் மீது வைத்து, இரகசியங்களிலிருந்து சக்தியைப் பெற்றுக் கொண்டு, தம்மீது சிலுவைக் குறியை இட்டுக்கொண்டு, வடக்குப் பாகத்திலும், தெற்குப் பாகத்திலும் உள்ளவர்களுக்கு நேராக சிலுவைக் குறி இட்ட பிறகு, மேற்குப் பக்கம் திரும்பி, அனைவருக்கும் நேராக மும்முறை சிலுவைக் குறி வரைந்து கூறுவது]

பரிசுத்தமுள்ளதும், மகத்துவமுள்ளதும், சிருஷ்டிக்கப்படாததும், சுயம்புவானதும், ஆதியும் அந்தமும் இல்லாததும், வந்திக்கப்படத்தக்கதும், சாராம்சத்தில் ஒரே தன்மையுடையதுமான திரித்துவத்தின் கிருபையும் ஆசீர்வாதங்களும், சகோதரரே! உங்களனைவரோடும் என்றென்றும் இருப்பனவாக !

சபை : ஆமென் !

உதவியாளர் : பயத்தோடும் நடுக்கத்தோடும் நுட்பமாகக் கவனிப்போமாக !

சபை : கர்த்தாவே ! எங்கள் மேல் கருணை வைத்து எங்களை அனுக்கிரகித்தருள்வீராக !

புரோ : இந்த பரிசுத்த இரகசியங்கள், பரிசுத்தமும், தூய்மையும் உள்ளவர்க்குக் கொடுக்கப்படுகின்றன !

(அப்பத் தட்டை மேலே உயர்த்துகிறார்)

சபை : பரிசுத்தராகிய பிதா, பரிசுத்தராகிய குமாரன், பரிசுத்தராகிய ஆவியானவர் தவிர பரிசுத்தர் எவருமில்லை ! ஆமென் !

புரோ : (தட்டை அதன் இடத்தில் திரும்ப வைத்து விட்டு பாத்திரத்தை எடுத்து உயர்த்துகிறார்)

சபை : ஒன்றாயிருக்கிற பிதாவுக்கும், குமாரனுக்கும், ஜீவனுள்ள பரிசுத்த ஆவிக்கும் என்றென்றைக்கும் துதியுண்டாவதாக ! ஆமென் !

புரோ : (அப்பத்தட்டை வலது கையிலும், பான பாத்திரத்தை இடது கையிலும் எடுத்து வலது கையை இடது கைக்கு மேல் குறுக்காகப் பிடித்துக் கூறுவது)

தமது கிருபையால் உலகத்தை சிருஷ்டித்த, ஒரே பிதாவானவர் நம்மோடு இருக்கிறார் !

சபை : ஆமென்.

புரோ: தமது திருமேனியின் மதிக்கமுடியாத பாடுகளால் லோகத்தை இரட்சித்தவராகிய பரிசுத்த ஏகசுதன் நம்மோடு இருக்கிறார்!

சபை: ஆமென்!

புரோ: சிருஷ்டிக்கப்பட்டவையும், இனி சிருஷ்டிக்கப்படுபவையும் ஆகிய சகலத்தையும் பரிபூரணப்படுத்தி நிறைவேற்றுகிற ஜீவனும் பரிசுத்தமுமுள்ள ஒரே ஆவியானவர் நம்மோடு இருக்கிறார்! கர்த்தருடைய திருநாமம் ஆதி முதற்கொண்டு சதா காலமும் வாழ்த்தப்படுவதாக!

சபை: ஆமென்! தாங்கள் உலகில் இருந்த பொழுது ... .

புரோ; நின்றாள் துதியோடு ராஜன் மகள் அல்லேலூயா!

... ...

நன்றி வழிபாட்டு ஜெபம்

கர்த்தாவே! மனிதர் மீதுள்ள உமது அன்புக்காக உம்மை தோத்திரித்து வந்திக்கிறோம். நீர் எங்கள் எல்லாரையும் பலப்படுத்தி சகாயம் செய்து தாங்கி எழுப்புவீராக! இந்த ஆன்மீக மேசையிலிருந்து நாங்கள் திருப்தியானதினால் எங்கள் அனைவரையும் நீர் பரிசுத்தப்படுத்தி ஆறுதல்படுத்துவீராக! நாங்கள் உமக்கும், உம்முடைய ஒரே பேறான குமாரனுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் இப்பொழுதும், எப்பொழுதும், என்றென்றைக்கும் துதியும் தோத்திரமும் செலுத்துகிறோம்!

சபை: ஆமென்!

புரோ: உங்கள் அனைவருக்கும் சமாதானம் உண்டாவதாக!

சபை: உமது ஆவியோடும் இருப்பதாக!

உதவியாளர்: கொடுக்கப்பட்டிருக்கிற இரகசியங்களை ஏற்றுக் கொண்ட பிறகு, கருணையுள்ள கர்த்தருக்கு முன்பாக நாம் மீண்டும் தலை வணங்குவோமாக!

சபை: எங்கள் கர்த்தாவே! எங்கள் தேவனே! உமக்கு முன்பாக நாங்கள் தலை வணங்குகிறோம்!

புரோ: பரத்திலிருந்து இறங்கி வந்து, எங்களுக்கு அழிவில்லாத போஜனமாக அமைந்த சத்திய அப்பமாகிய மேசியாத் தம்பிரானே! அணையாத அக்கினி நரகத்திலிருந்தும், சாகாத புழுக்களிலிருந்தும் எங்கள் ஆன்மாக்களையும் சரீரங்களையும் நீர் காத்தருள்வீராக! நாங்கள் உமக்கும், உம்முடைய பிதாவுக்கும், பரிசுத்த ஆவிக்கும் இப்பொழுதும், எப்பொழுதும் என்றென்றைக்கும் துதியும் தோத்திரமும் செலுத்துகிறோம்!

சபை: ஆமென்!